Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 30.00

ஜூலை 23 - 29, 2015

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1128



## பேரம் பேசும் சக்தி எது?



## தேர்தல் களமும் கட்சிகளின் நிலைப்பாடும்

## நிராகரிக்கப்படும் கிரேக்க மக்களின் தீர்ப்பு



சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## ஓம் நற்பலன்கள் தரும் வார தீப பூஜை

ஞாயிறு:- ஞாயிற்றுக்கிழமை அய்யப்பனுக்கு நூறு தீபங்கள் ஏற்றுதல் விசேஷம். தீபங்களைத் தாமரைப் பூ வடிவில் ஏற்றுவது மிகவும் சிறப்புடையது. அதாவது தாமரைப்பூ போன்ற அமைப்பில் தீபங்களை வரிசையாக வைத்து ஏற்றுதல் வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் செய்யப்படும் இத்தீப வழிபாடுகளுக்குத் தேங்காய் எண்ணெய் பயன்படுத்துவது சிறந்தது. இதுபோன்று தீபங்கள் ஏற்றி வழிபடுவதால் வருமானங்கள் தடையை மீறி வருவதற்கு சந்தர்ப்பம் உண்டு.

திங்கள் :- திங்கட்கிழமை அன்று இலுப்பை எண்ணெய் கொண்டு ஐம்பத்தாறு தீபங்கள் ஏற்றுதல் விசேஷம். இந்த தீபங்களை அன்னபட்சி வடிவத்தில் வரிசையாய் ஏற்றி வழிபடுதல் வேண்டும். அன்னப்பட்சிகள் போன்று அரிசி மாக்கோலம் வரைந்து அவற்றின்மேல் இத்தீபத்தை ஏற்றுவது மிகவும் சிறப்புடையதாகும். மிகவும் கஷ்டப்படுகின்றவர்களுக்கு மனச்சாந்தியைத் தரும் வழிபாடு இது.

செவ்வாய்:- செவ்வாய்க்கிழமைகளில், அரிசி மாக்கோலம் போட்டு, அதில் தீபம் ஏற்றுதல் வேண்டும். அரிசி மாவில் இரட்டைக்கிளி உருவம் வரைந்து, அதன்மேல் ஐம்பத்து நான்கு தீபங்களை வரிசையாய் ஏற்றுவது விசேஷமாகும். இத்தீபங்களுக்கு பசுநெய் உபயோகிப்பது மிகவும் சிறப்புடையதாகும் இந்த தீப வழிபாட்டால் கணவன், மனைவியர் இடையே தாம்பத்திய உறவு மேம்படும்.

(தொடரும்...)

ஆன்மீகம்

## அடையாளம் அலட்சியத்திற்கல்ல

வாழ்க்கை இலக்கைச் சென்றடையும் இனிய பயணமாகிட அடையாளங்கள் அவசியம். மறைநூல் அறிஞருக்கு மறுத்த இறைவன் இயேசு மீண்டும் மிகச் சிறந்த அடையாளம் ஒன்றை அவர்களுக்கு வழங்குகிறார்.

இஸ்ராயேல் மக்களின் வரலாற்றுப் பயணத்தில் பல்வேறு அடையாளங்களை வழங்கியுள்ளார். ஒளிரும் மேகம், நிழல் தரும் மேகம், பாறையில் பெருக்கெடுத்த தண்ணீர், பாலையில் பொழிந்த மன்னா, செங்கடல் பயணம், பேழைப்பிரசன்னம், இறைவாக்கினர்கள், அவர்களின் அருள் வாக்குகள், எழுந்த அரசுகள், வீழ்ந்த அரசுகள் எல்லாம் அடையாளங்களே. இத்தனை அடையாளங்களும் அலட்சியப்படுத்தப்பட்டன. எனவேதான் 'விபச்சாரத் தலைமுறையே' என்னும் கடுஞ்சொல்லைப் பயன்படுத்திய இறைவன் மீண்டும் ஒரு அடையாளம் வழங்குகிறார். யோனா இறைவாக்கினரை ஒரு அடையாளமாக்கி வரலாற்றின் மிகப்பெரிய அடையாளமான இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு இவற்றை முக்காலத்துக்கும் எக்காலத்துக்கும் அடையாளமாக்கினார்.

இறைமயமாக்கும் இலட்சியப்பயணத்தின் நிறைவை அடைய இறைவனும் அவ்வப்போது நமக்கும் பல அடையாளங்களைத் தருகிறார். இன்றும் அதே உன்னத வெளிப்பாட்டின் சாயல் உலகில் பல்வேறு விதங்களில் அடையாளங்களாக கொடுக்கப்படுகின்றன.

## படைப்பினங்களில் சிறப்புடையவன் மனிதன்

நம்பிக்கை என்பது இனந்தெரியாத ஓர் நல்லுணர்வு. வாழ்க்கை மாளிகைக்கு அமைதியையும், செம்மையையும் அடித்தளமாக்கித் தரும் ஒரு பேருணர்வு. எனவேதான் வாழ்க்கையில் சாதாரண சிறு நிகழ்ச்சிகளில்கூட நம்பிக்கை இன்றியமையாததாகத் தேவைப்படுகிறது. இதற்கு நாம் செய்யவேண்டியது அல்லாஹ்வின்மீது அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்து எந்த நிலையிலும் அவன் எம்மை காப்பான் என்ற உறுதியான உள்ளம் எமக்கிருக்கவேண்டும்.

உழைத்தால் உயர்வுண்டு என்ற திடநம்பிக்கையோடு உழைப்பவன் வாழ்வில் வெற்றி பெறுகின்றான். நாமிருக்கும் நிலையில் நமக்கெங்கே முன்னேற்றம் இருக்கப்போகிறது என்று எதிர்காலத்தில்கூட நம்பிக்கையில்லாதவன் அல்லறுகின்றான். தொல்லைகளால் அலைக்கழிக்கப்படுகின்றான். ஐயங்களால் மனஅமைதி இழக்கின்றான். மனிதனை சுதந்திரவானாகவே அல்லாஹ் படைத்துள்ளான். அவன் சுதந்திரமானவனாகவே வாழப் பாடுபடவேண்டும். அல்லாஹ்வின் படைப்பினங்களில் சிறப்புடையவன்.

எம்.சி.கலீல், கல்முனை - 05

## கவிதைப்போட்டி 1125



● பாராட்டுக்குரியது ●

## பண்பு

பழக்கப்படுத்திய
வாயில்லா ஜீவன்களுக்கு
பசி வந்தாலும்
புசித்திடவோ
பழகிய பாணியிலேயே
பக்குவமாய்
நிரையிலே நிற்கும்
பண்போ தனி மகிமையே.

இளம்பிளை யோகன்,
புத்தளம்

## கவிதைப் போட்டி இல 1128



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 03. 08. 2015

கவிதைப் போட்டி இல. 1128 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## ஆறும் ஐந்தும்

ஒரு சொட்டுக்
கஞ்சி கிடைக்குமெனின்
முண்டியடித்து
முன்னே பாயும்
ஆறறிவு படைத்தோர்
தட்டுடன் ஒழுங்கு மீறாது
செல்லுமிந்த
ஐந்தறிவுச்
சீவன்களைப் பார்த்தாவது
திருந்தமாட்டார்களா?

எம்.சி.கலீல்,
கல்முனை-05

## பொறுமை

பசி வந்தாலே நமக்கு
எல்லாமே பறந்துபோகுமே
ஆனால் தன் பசிப் போக்கிடவோ
பொறுமை போகாமல் – அதை
காக்கும் ஐயறிவுகளின்
திறமைதான் எத்தனை
அருமையோ!

இளம்பிறை, அநுராதபுர வீதி.

## குணங்கள்

தன் முறை வரும்வரை
காத்து நிற்பது நாய்க்குணம்
முறை தகர்த்து முன்னேற
முயல்வதோ
மானிடக் குணம்.

இஷாரா பேகம், கண்டி.

## ஒழுங்கு

சோற்றுக்காகக் கோப்பையுடன்
வரிசையாய்
நிற்கும் இந்த ஐந்தறிவு
மிருகங்களிடம் நீ கற்க
வேண்டும் நேரான
ஒழுங்குமுறை...

ச.ஜெயரூபன், பருத்தித்துறை




# உங்கள் பக்கம்

## வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு தரம் குறைந்த ஓடுகள்

வன்னியில் மீள்குடியேறியுள்ள வீட்டத்திட்ட பயனாளிகளுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதாவது கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு தென்னிலங்கை வியாபாரிகளால், அதிகூடிய விலைகளில் தரம்குறைந்த ஓடுகள் வழங்கப்பட்டமையால் குறிப்பிட்ட சில பயனாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில், நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் நிரந்தர வீட்டுத் திட்டங்களுக்குரிய ஓடுகளையும் ஏனைய கட்டுமானப் பொருட்களையும் உள்ளூர் வர்த்தகர்களும் தென்னிலங்கையில் இருந்துவரும் நடமாடும் வியாபாரிகளும் வழங்கி வருகின்றனர்.

வீட்டுத்திட்டங்களுக்குரிய கட்டுமான பொருட்களில் தென்னிலங்கையில் இருந்துவரும் வியாபாரிகளால் குறிப்பிட்ட சில வீடுகளுக்கு, தரம்குறைந்த கூரை ஓடுகள் வழங்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பயனாளிகளுக்கு ஓடுகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என தெரிவித்திருந்தபோதிலும், இதுவரை குறித்த வியாபாரிகள் ஓடுகளை மாற்றிக் கொடுக்கவில்லை என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். வறுமைநிலையில் இருக்கும் தங்களுக்கு ஏமாற்று வேலைசெய்யும் தென்னிலங்கை வியாபாரிகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென உங்கள் பக்கமூடாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

ச.கவிவரதன், கிளிநொச்சி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்: (E-mail):-
thinamurasu@live.com

## அமைதியின் சொற்கள்

இவ் வாழ்க்கையில்
இணையற்ற ஆனந்தத்தைக்
கண்டுகொள்ளும் சாத்தியம்
உண்டு.

இணையத்தளம்: www.wopg.org
- பிரேம் ராவத்

# வாசகர்சாலை

## பாராட்டு!

முரசின் சிறுகதைகள், காலத்தின் கண்ணாடிகளாக விளங்குகின்றன. கண்ணீரையும் வரவழைக்கின்றன. புதிய படைப்பாளிகளை ஊக்குவித்து வருவதும் பாராட்டத்தக்கது.

எஸ்.சுபா, கிளிநொச்சி.

## ஹய் முரசு!

முரசின் நீண்டநாள் வாசகியான நான் இவ்வளவு காலமும் உமது சேவையை மனதால் பாராட்டிக்கொண்டிருந்தேன். இன்று வரை நானும் உன் வாசகி என்று உனக்கு தெரியாதிருக்கலாம் அல்லவா. அதனால் மனதால் மட்டுமன்றி, மடலாலும் எனது பாராட்டை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சி.மனுசுதன்,
ஜின்னாநகர்

இனிய முரசு! உனது பல்லாயிரக் கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். ஆனால் இன்றுதான் மடல் வரைகின்றேன். உனது ஆக்கங்கள் அனைத்தையும் தவறவிடாது படிக்கின்றேன். அதிலும் ரயில் கொள்ளை தொடர் என்னை மிகவும் கவர்ந்துள்ளது.

ஆர்.மகிழன், வவுனியா.

## அருமை

நீ தரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. அதிலும் இடி அமீன் தொடர் மிகவும் சூப்பர். மேலும் இதுபோன்ற தொடர்கதைகளை எதிர்பார்க்கின்றேன்.


க.ஹாயினி, கொழும்பு.

அன்பின் இனிய முரசே! உன் நந்தவனத்தில் மலரும் அத்தனை மலர்களும் மணம் வீசுகின்றன. அரசியல் கட்டுரைகள், மருத்துவம், சிறுவர் பகுதி, பெண்கள் பகுதி, காதிலை பூ கந்தசாமி, மற்றும் ஏனைய பகுதிகளும் பிரமாதம் இதுபோன்று ஏனைய இதழ்களிலும் வெளிவர எனது வாழ்த்துக்கள்.

சோ. மிதுனன், யாழ்ப்பாணம்.

# ஜனநாயக வழிமுறையால்தான் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும்

## ஈ.பி.டி.பியின் முதன்மை வேட்பாளர் டக்ளஸ் தேவானந்தா



**ஜனநாயக வழிமுறையின் ஊடாகத்தான் எமது மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண முடியுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார். வேலணையில் இடம்பெற்ற கட்சியின் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த அறுபது வருடகாலமாக ஏமாற்றப்பட்டுவந்த எமது மக்கள் எதிர்காலத்திலும் ஏமாந்துவிடக்கூடாது என்பதில் நாம் தெளிவாக இருக்கின்றோம்.


அந்தவகையில், தமிழ் தலைமைகளில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதன் ஊடாகத்தான் எமது மக்கள் மாற்றத்தையும் ஏற்றத்தையும் காண முடியும்.

கடந்த காலங்களில் கிடைக்கப்பெற்ற பல சந்தர்ப்பங்களை தமிழ் அரசியல் தலைமைகளின் தவறான வழிநடத்தல்களினால் எதனையும் செயற்படுத்த முடியாத நிலையிருந்தது. அவர்கள் வெறும் வெற்றுக் கோசங்களையும் உணர்ச்சிப்பேச்சுக்களையும் பேசி மக்களை ஏமாற்றினார்களேயொழிய வேறு எதனையும் செய்யவில்லை.

நாம் நீண்டகாலமாக ஜனநாயக வழிமுறையின் ஊடாகவே பிரச்சினைக்கு தீர்வு காணமுடியுமென்பதை வலியுறுத்தி வருகின்றோம். அத்துடன் ஜனநாயக வழிமுறையின் ஊடாகத்தான் பிரச்சினைக்கு தர்வு காணமுடியுமென்பதே எமது நிலைப்பாடாகும். ஆட்சி மாற்றத்தை கொண்டுவந்ததாக கூறிக்கொள்ளும் சுயலாப அரசியல்வாதிகள் மக்களுக்காக எதனைச் செய்துள்ளார்கள் என்று கேள்வியெழுப்பினார்கள்.

13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக வடக்கு மாகாண சபைக்கு அதிகளவிலான அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தபோதிலும் அதனை அவர்கள் செய்யவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

## ஒஸ்மானியா கல்லூரியில் க.பொ.த உயர்தர வகுப்புகள் ஆரம்பம்




யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் புதன் கிழமை(22) அன்று க.பொ.த உயர்தர வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளது.

1990ஆம் ஆண்டுடன் நிறுத்தப்பட்ட மேற்படி வகுப்புகள் இவ்வாண்டு(2015) கல்லூரி அதிபர் ரி.மகேந்திரராசா மற்றும் பிரதி அதிபர் மௌலவி எம்.ஏ.பைசர் மதனி ஆகியோரின் அயராத முயற்சியினால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக கலைப்பீடத்தில் மாணவர்கள் இணைக்கப்பட்டு உயர்தர வகுப்பு அதிபர் தலைமையில் கல்லூரியின் மஹ்மூத் மண்டபத்தில் நடைபெற்றது.

இவ் உயர்தர வகுப்பில் கலைப்பீடத்தில் இஸ்லாம், அரபு, அரபியல் மூலதத்துவம், புவியியல், தமிழ், ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட உள்ளன.



# சிறை சென்றுவந்த ஒபாமா!?

அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, ஒக்லஹா்மா நகரில் உள்ள எல் ரெனோ மத்திய சிறைக்கு சென்று பார்வையிட்டார். பல ஆண்டுகளாகச் சிறையில் அடைக்கப்பட்டு, கொடுமைகள் அனுபவித்துவரும் அமெரிக்கர்களுக்கு நீதிவழங்கும் முயற்சியாகச் சிறைக்குச் சென்றிருக்கிறார். அமெரிக்க வரலாற்றில் அதன் அதிபர் ஒருவர் மத்திய சிறைக்குள் நுழைவது இதுவே முதல் முறை.

ஒரு தலைமுறையைச் சேர்ந்த இலட்சக் கணக்கான அமெரிக்க மக்களைச் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் அடைத்த அக்கிரமத்தை எதிர்த்துக் குரல்கொடுத்தார் ஒபாமா. குறிப்பாக, எண்ணிலடங்காக் கறுப்பின மக்களும், அவர்களுடைய குடும்பத்தினரும், முறையாக வரி செலுத்திவந்த குடிமக்களும் ஏன் ஒட்டுமொத்தச் சமூகமே இதனால் பாதிக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

சிறையைப் பார்வையிட்டுத் திரும்பிய பிறகு, “நானும் நீங்களும் அவ்வளவு ஏன், பெரும்பாலானவர்கள் செய்துவரும் தவறுகளைத்தான் இந்த இளைஞர்களும் செய்திருக்கிறார்கள். ஆனால் என்ன, செய்த தவறுக்கான தண்டனையிலிருந்து தப்பிக்க அவர்களுக்கு உகந்த சூழலோ, பலமான பின்னணியோ, இரண்டாம் வாய்ப்போ அளிக்கப்படவில்லை என்பது மட்டும்தான் ஒரே வித்தியாசம்” எனப் பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

ஒபாமாவின் இந்தக் கூற்றுக்கு ஒப்பான வார்த்தைகளை நீதித்துறையில் பதவி ஒபாமாவின் இந்த முதல் முயற்சியை நல்ல சமிக்ஞையாகக் கருதலாம்.

“கொடூரமான குற்றச்செயல்கள் புரிந்தவர்களால் மத்தியச் சிறை நிரம்பி வழியவில்லை. மாறாக, போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் புரிந்ததற்காக உச்சபட்ச தண்டனை விதிக்கப்பட்டவர்களே இங்கு அதிகம்” என அமெரிக்கப் பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினருக்கான அமைப்பு ஒருங்கிணைத்த கூட்டம் ஒன்றில் பேசினார் ஒபாமா. அப்போது, “நீங்கள் போதைப்பொருள் வியாபாரி என்றால், நன்னடத்தைக்கான தண்டனைக் குறைப்பு உங்களுக்குக் கிடைக்காமல் போகலாம். அதற்காக நீங்கள் 20 ஆண்டுகள் சிறைத் தண்டனையோ அல்லது ஆயுள் தண்டனையோ அனுபவிக்க வேண்டியதில்லை” என்றார். மேலும், “இதுபோன்ற கொடூரமான தண்டனைகள் குறைக்கப்படவேண்டும் அல்லது முற்றிலுமாக அகற்றப்படவேண்டியது நீதிபதிகளின் கடமை” எனவும் குறிப்பிட்டார்.

மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சிறிய தவறிழைத்தவர்கள் என்று சொல்லித் தினந்தோறும் நாடு முழுவதிலும் இருந்து 80,000 மக்கள் சிறைப்பிடிக்கப்படுகிறார்கள். “ஒரு குறுகிய சிறை அறைக்குள் பலரை 23 மணிநேரம் தொடங்கி, மாதக் கணக்கிலும், ஏன் ஓர் ஆண்டுவரைக்கும் அடைத்து வைப்பதில் என்ன அர்த்தம் உள்ளது எனக் கேள்வி எழுப்பினார். இதை நீதித் துறை பரிசீலனை செய்யவேண்டும்” என்றார்.

“அடித்தட்டு மக்களுக்கான வசதிவாய்ப்புகள் அதிகரித்தால் மட்டுமே இச்சூழலைச் சரி செய்யமுடியும் என்றவர், முன்னாள் சிறைவாசிகளுக்கு வேலைவாய்ப்பு, குடியிருப்பு, ஓட்டுரிமை உள்ளிட்டவை மறுக்கப்படக்கூடாது. ஒடுக்கப்படாமல் இருப்பது மட்டும் நீதி அல்ல. நல்ல வாய்ப்புகள் அளிக்கப்படுவதே உண்மையான நீதி” என்றார்.

இதில் தனக்குரிய அதிகாரம் குறைவுதான் என்றவர், இத்தனை காலம் கடுமையான சிறை தண்டனைச் சட்டங்களைப் பிறப்பித்த காங்கிரஸ் மற்றும் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் முயன்றால் மட்டுமே இதை மாற்ற முடியும் என்றார். ஒபாமாவின் இத்தகைய எழுச்சிமிகு முயற்சிக்குப் பல்வேறு எதிர்வினைகள் வந்துகொண்டிருக்கின்றன.

“இந்தப் பிரச்சினை மோசமடையக் காரணம், நான் கையெழுத்திட்டுப் பிறப்பித்த ஒரு மசோதா. நான் அதை ஒப்புக்கொள்ள வேண்டும்” எனக் கடந்த புதன்கிழமை(15) அன்று முன்னாள் அதிபரும் 1994இல் அமெரிக்க சிறை சட்டத்தைக் கடுமையாக மாற்றியவருமான பில் கிளின்டன் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தது, அனைவரையும் திரும்பிப் பார்க்கவைத்த தருணமாகும்.

அதிகாரம் உடைய முன்னாள் அரசு வழக்கறிஞர் எரி ஹோல்டர் ஜூனியர் இதற்கு முன்பே கூறி உள்ளார். இருப்பினும், ஒரு அதிபரிடமிருந்து வெறும் வார்த்தைகளாக அல்லாமல் செயல்வடிவில் இவ் விஷயம் வெளிவருவது கவனத்துக்குரியது.

போதைவஸ்துக்கள் பயன்படுத்திய குற்றங்களுக்காக 20 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறைத் தண்டனையை அனுபவித்துவரும் 46 சிறை வாசிகளின் தண்டனைக் காலத்தைக் குறைத்தார். 30,000-க்கு அதிகமான அமெரிக்கர்கள் இது போன்ற குற்றங்களுக்காகக கொடூரமான தண்டனைகளை அனுபவித்துவருகின்றனர். இருப்பினும்,

# தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com


## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

### அருகதையற்ற கூட்டமைப்பின் அழைப்படையற்ற அழைப்பு

முஸ்லிம் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒரு இணக்கத்தை செய்து கொள்ளவேண்டும். மாறாக சிங்கள அரசுகளோடு இணக்கத்தை ஏற்படுத்திக்கொள்வதால் ஆகப்போவது எதுவுமில்லை என்று அண்மைக் காலமாக கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தர் கூறிவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான அழைப்பின்மூலமாக தமிழ் மக்களுக்கு கூட்டமைப்பு விடுக்கும் செய்தி என்ன? என்பது பற்றி எதுவும் தெளிவாக குறிப்பிடப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் கூட்டமைப்பின் அரசியல் உறுப்பினர்களுக்கும், முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளுக்குமிடையே ஒற்றுமையில்லை. சம்மந்தன் உட்பட கூட்டமைப்பின் எந்தவொரு நாடாளு மன்ற உறுப்பினர்களோ, தலைவர்களோ இதுவரையில் முஸ்லிம் பிரதிநிதி களுடன் பரஸ்பர கலந்துரையாடல் களை நடத்தியதில்லை.

இரண்டு இனங்களும் எவ்வாறான வேலைத்திட்டம் ஒன்றுக்காக இணைந்து பணியாற்றலாம்? என்பதை இதுவரை யில் கலந்துரையாடவில்லை. தேர்தல் காலத்தில் மட்டும் வெறும் வார்த்தை களில் இணக்கம், ஒற்றுமை என்று தமிழ் மக்களை ஏமாற்றுவதைப்போல் முஸ்லிம்களையும் ஏமாற்றலாமென நினைப்பது எவ்விதம் சரியாகும்.

கூட்டமைப்புக்கு கடந்த ஒவ்வொரு தேர்தல்களிலும் தமிழ் மக்கள் பெரும் பான்மையான வெற்றிகளை வழங்கி யிருக்கின்றார்கள். அந்த வெற்றிகளை அபகரிப்பதற்காக கூட்டமைப்பினர் கூறிய வாக்குறுதிகளில் ஒன்றை யேனும் இதுவரை நிறைவேற்றி இருக்கின்றார்களா?

தமிழ் மக்களுக்கு கூட்டமைப்பு பெற்றுக் கொடுத்த அரசியல் தீர்வு ஏதேனும் இருக்கின்றதா?

தமிழ் மக்கள் நம்பிக்கைகொள்ளும் அளவுக்கு கிடைக்கப்பெற்ற அரசியல் அதிகாரங்களை கூட்டமைப்பினர் பிரயோகித்திருக்கின்றார்களா?

தென்னிலங்கை அரசுகளுடன் பகைமை அரசியலை வெளிப்படையாக வும், ஒட்டி உறவாடும் கபட அரசியலை இரகசியமாகவும் கொண்டிருக்கும் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கு செய்கின்ற நம்பிக்கைத் துரோகத்தை, முஸ்லிம்களுக்கும் செய்துவிடவா? அழைக்கின்றார்கள்?


இப்படி பல கேள்விகளை முஸ்லிம் மக்கள் சம்மந்தனிடமும், கூட்டமைப்பின் தலைமைகளிடமும் இரகசியமாகவல்ல, வெளிப்படையாகவே கேட்க விரும்பு கின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பகிரங்க மேடையில் முஸ்லிம் தலைமைகளோடு தமிழ், முஸ்லிம் உறவுக்காக இதுவரை கூட்டமைப்பு செய்தவை தொடர்பாகவும், எதிர்காலத்தில் செய்யவிரும்புவது எதுவென்பதையும், முஸ்லிம் தலைவர் களிடம் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாகவும் பேசுவதற்கு தயாராக இருக்கின்றார்களா?

தமிழ் மக்களுக்கே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஏமாற்று அரசியல் வழிமுறையின்மீது நம்பிக்கையீனம் ஏற்பட்டுள்ள நிலையில், எந்த அருகதை யில் முஸ்லிம் மக்களை கூட்டமைப்பு இணக்கத்துக்கு அழைக்கின்றது என்று முஸ்லிம் தலைமைகள் கேட்பதில் என்ன தவறு காணமுடியும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# பேரம் பேசும் சக்தி எது?





நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களிடம் இரண்டு பிரதான கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

ஒன்று, அமையவிருக்கும் புதிய அரசாங்கத்தில் பேரம்பேசும் சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இருக்கச் செய்வதற்கு தமிழ் மக்கள் வாக்களிக்கவேண்டும் என்ற கோரிக்கை யும், நடைமுறை யதார்த்த அரசியல் அணுகுமுறை ஊடாக தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கும், அத்தியாவசியப் பிரச்சினைக்கும் தீர்வை பெற்றுக்கொள்வது என்ற கோரிக்கையுமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களிடம் தம்மை பேரம்பேசும் சக்தியாக்கவேண்டும் என்று கேட்டு வருகின்றது. கடந்த பல தேர்தல்களில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த தருணங்களை சுருக்கமாக ஆராயவேண்டியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புலிகள் உருவாக்கிய பின்னணியில், புலிகளே தமிழ் மக்களின் ஏகபோக தலைமை என்றும், அவர்கள் நடத்தும் ஆயுதப்போராட்டத்துக்கு தமிழ் மக்கள் தமது அங்கீகாரத்தை வழங்கும் ஒரு தேர்தலாக இதைக் கருதி தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப் பட்டது. புலிகளே வீடுவீடாக சென்று கூட்டமைப்புக்கான வாக்குகளை கோரியிருந்தார்கள்.

கூட்டமைப்பு இருபத்து இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை வெற்றி பெற்றது. அந்த நெருக்கடிக்கு மத்தி யிலும் யாழ்ப்பாணத்திலிருந்து கூட்ட மைப்பைத் தவிர ஈ.பி.டி.பியின் சார்பில் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வையும் மக்கள் வாக்களித்து நாடாளு மன்றத்துக்கு அனுப்பியிருந்தார்கள்.

அந்த ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியிருக்கவேண்டும். இருபத்தி இரண்டு பேர் பெற்றுக்கொண்ட வெற்றியை விடவும், ஈ.பி.டி.பி.யிடம்போன ஒரு ஆசனத்தை தோற்றுப்போனதே பெரும் தோல்வி என்று புலிகளும், கூட்டமைப் பினரும் கூறினார்கள். அப்போது அமைச்சுப் பொறுப்பை பெற்றுக்கொண்ட டக்ளஸ் தேவானந்தா போக்குவரத்து துண்டிக்கப் பட்டிருந்த வடக்கு மக்களுக்கு உணவு கொடுக்கவும், அரச வேலைவாய்ப்புக் களை பெற்றுக்கொடுக்கவும் செய்தார். குறிப்பாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாக இருந்த வன்னி பெருநிலப் பரப்புக்குள் அகப்பட்டிருந்த மக்களுக்கும், புலிகளுக்கும் போய்ச் சேருகின்ற வகையில் உணவுப் பொருட்களை அனுப்பிவைத்தார். அது புலிகளுக்கும், கூட்டமைப்புக்கும் பெருத்த அவமானமாக அமைந்தது.

இருபத்தியிரண்டு பேர் நாடாளு மன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட மிகப் பொன்னான பேரம்பேசும் காலம் அது. இன்னொரு தடவை அப்படியொரு பேரம்பேசும் பலம் கூட்டமைப்புக்கு கிடைக்காது.

அந்த வாய்ப்பை கூட்டமைப்பினர் பேரம்பேச பிரயோகிக்கவில்லை. அவர் கள் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் களை வேறு தரப்பினர் பெற்றுக் கொண்டிருந்தால் அதைக் கொண்டு மத்திய அரசோடு பேரம்பேசி, அமைச்சுப் பொறுப்புக்களை பெற்றுக் கொண்டு தமிழ் மக்களுக்கு ஏதும் நன்மைகளைச் செய்துவிடாமல் அதைத் தடுத்து அரசியல் அதிகாரத்தினால் தமிழ் மக்களுக்கு எதையும் பெற்றுக் கொடுக்கமுடியாது, ஆயுதப் போராட்டத்தின் ஊடாகவே தமிழ் மக்கள் தமது உரிமைகளை பெற்றுக்கொள்ள முடியும் என்ற ஒரு கருத்தியலை உரு வாக்குவதற்காக இருபத்தியிரண்டு நாடாளு மன்ற உறுப்பினர்கள் என்ற அதிகாரத்தை முடக்கிப்போட்டார்கள்.

தமது குடும்பம், உறவுகள் என்பவற்றை மட்டுமே அந்த அதிகாரத்தைக் கொண்டு கவனித்தார்கள். இப்போதுகூட அந்த மகாசக்தியைப் பயன்படுத்தி யுத்தத்தை நிறுத்துவதற்கான அழுத்தத்தை கொடுத்து இருக்கலாம், யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மாற்று உடைகூட இல்லாமல் வந்த மக்களுக்கு உதவுமாறு உலக நாட்டு தூதரகங்களை முற்றுகையிட்டு கோரிக்கை விடுத்திருக்கலாம்.

அழிவு யுத்தம் உடனடியாக நிறுத்தப் படாவிட்டால் நாடாளுமன்றத்தை முடக்கும் போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாகவோ, தமிழ் மக்களுக்கு உதவமுடியாத பதவி களை தூக்கி எறியவேண்டியிருக்கும் என்றோ கூட்டமைப்பில் எவரேனும் வாய்திறந்திருக்கலாம்.

அதன்பின்னர் நடைபெற்ற தேர்தலில் தமிழ் மக்களே உங்களை சர்வதேச சமூகம் பார்த்துக்கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் தமிழ் மக்களை கொன்றொழித்த சிங்கள அரசுக்கு கடுமையான அழுத்தத்தை கொடுக்க வேண்டியிருக்கின்றது. ஆகவே தமிழ் மக்கள் ஒற்றுமையாக கூட்டமைப்பிற்கு வாக்களிக்கவேண்டும் என்றார்கள்.

புலிகள் களத்தில் இல்லாததால் தமிழ் மக்களுக்கு தலைமைகொடுக்கும் பொறுப்பை கூட்டமைப்பே ஏற்றிருப்பதால், கூட்டமைப்பில் இருப்பவர்கள் கொலை காரர்களாக இருந்தாலும், போதைப்பொருள் கடத்தல்காரர்களாக இருந்தாலும், உணர்ச்சியூட்டி தமிழ் மக்களை அழிவு க்கு தூண்டிவிட்டு அரசியலில் தூய்மை யானவர்களாக பலகாலமாக அரசியல் துரோகம் செய்துவருபவர்களாகவும் இருக்கலாம், நிதிக்கம்பனி நடத்தி பாவப்பட்ட மக்களின் பணத்தை கொள்ளையடித்த கொள்ளையர்களாக இருக்கலாம், அழிவு யுத்தத்திற்கு பாடசாலையில் பிள்ளைபிடித்துக் கொடுத்தவர்களாகவும் இருக்கலாம்.

அவற்றை தமிழ் மக்கள் பொருட் படுத்தாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனும் ஒன்றுபட்டு நிற்பதை மட்டும் கவனித்து அவர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்று பெரும்பாலான தமிழ் ஊடகங்கள் கூறின.

தமிழ் மக்களும் அதை நம்பி வாக்களித்தார்கள். ஆனால் கூட்டமைப்புக்கு புலிகள் பெற்றுக்கொடுத்த இருபத்தி இரண்டு உறுப்பினர்களை பாதுகாத்துக் கொள்ளமுடியவில்லை. அவர்களுக்கு பதின்னான்கு உறுப்பினர்களையே பாதுகாக்க முடிந்தது. கூட்டமைப்பினர் இம்முறையும் பெற்றுக்கொண்ட நாடாளுமன்ற ஆசனங்களை தமிழ் மக்களுக்காக பேரம்பேசும் சக்தியாக பிரயோகிக்கவில்லை.

மகிந்த ராஜபக்சவை கவிழ்ப்பதற்காக அமெரிக்கா தலைமையிலான சில நாடுகள் முனைப்புக் காட்டியதையும், ஐ.நா சபை அமைப்புக்கள் போர்க்குற்ற விசாரணை-களை முன்னகர்த்தியதையும், மனித உரிமை கள் குற்றச்சாட்டுக்களை அழுத்தமாக பிரயோகித்ததையும் உள்நாட்டுக்குள் கூட வலிமைப்படுத்தாத கூட்டமைப்பினர், ஏதோ தாம் ஏற்பாடு செய்ததாலேயே அவையெல்லாம் நடப்பதாக தம்பட்டம் அடித்துக்கொண்டார்கள்.

அதே காலகட்டத்தில் யாழ்ப்பாணத் தில் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா உள்ளடங்கலாக மேலும் இருவர் வெற்றிபெற்றிருந்தார்கள். ஈ.பி.டி.பி ஒரு அமைச்சுப் பொறுப்பை பெற்றுக்கொண்டது. பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க மத்திய அரசை அணுகியது.

யாழ்ப்பாணத்தில் அரச வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொண்டிருப்பவர் களில் பெரும்பான்மையானவர்களுக்கு டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் அணுகுமுறையே அதைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது என்பதை மறுக்க முடியாது.

வடக்கில் வேலைவாய்ப்பையும், அபிவிருத்தியையும் யாரும் பெற்றுத் தரவில்லை. சிங்கள அரசாங்கம் அதைச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் சிங்கள அரசை ஐ.நா. சபை தண்டிக்கும். இலங்கைக்கு உதவிசெய்யும் நாடுகள் சிங்கள அரசை தண்டிக்கும். சிங்கள அரசிடம் உரிமையை மட்டும் கேட்டால் சரி. மற்றதையெல்லாம் அவர்கள் எங்களுக்கு தருவார்கள் என்று ஒரு கேடுகெட்ட வியாக்கியானத்தையும் கூட்டமைப்பினர் தமிழ் மக்களிடம் கூறினார்கள்.

வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற்றபோதும் தமிழ் மக்கள் ஒற்றுமையாக கூட்டமைப்புக்கு வாக்களிப்பதன் ஊடாகவே சர்வதேச நாடுகளுக்கு ஒற்றுமையும், பலத்தையும் காட்டமுடியும், அப்போதுதான் சர்வதேச சமூகம் கூட்டமைப்பை தமிழ் மக்களின் தலைமையாக அங்கீகரித்து பேச்சுவார்த்தை களை நடத்தும் என்று கூறினார்கள்.

தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களித்தார்கள். இப்போதும் வடக்கில் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகள் கூட்டமைப்பின்வசமே உள்ளது. தமிழ் மக்கள் அப்படியெல்லாம் கூட்டமைப்பு ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளார்கள் என்பதை கூட்டமைப்புத் தலைமைகள் மறந்தே போய்விட்டார்கள்.

அதன்பின்னர் கிழக்கு மாகாணத்தில் கணிசமான வெற்றி தமிழ் மக்கள் வழங்கியபோதும் அதை அங்குள்ள முஸ்லிம் மக்களோடு விட்டுக்கொடுப்புடன் பகிர்ந்துகொண்டு மாகாண சபை அதிகாரத்தை கூட்டமைப்பினர் சீரழித்து விட்டார்கள். வடமாகாணத்தில் மாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்ட போது, வடக்கு மாகாண சபையை வெற்றிபெற்றி தனியான தமிழ் அரசை நிறுவவேண்டும், தமிழ் மக்களின் அரசியல் மையமாக அது இருக்கவேண்டுமென சர்வதேச சமூகம் விரும்புகின்றது. அப்படி அமைந்தால் சர்வதேச நாடுகள் நேரடி யாக தமிழ் மக்களுக்கு உதவிகளைச் செய்யும் என்று கூறுகின்றார்கள்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)





# புலிகளின் வதை முகாமில்

**மணியம்**

**தொடர் 175**

இந்த இடத்தில் எனக்கு உள்ள ஒரு சந்தேகத்தையும் குறிப்பிட்டே ஆகவேண்டும். இந்திய இராணுவத்தைப் புலிகள் உலகின் மூன்றாவது பெரிய இராணுவம் என்று குறிப்பிடுவது சரியா? அவர்கள் அமெரிக்க இராணுவத்தை முதலாவது பெரிய இராணுவமாகவும், சோவியத் இராணுவத்தை இரண்டாவது பெரிய இராணுவமாகவும் கருதினால், மற்றைய அணு ஆயுத நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், சீனா மற்றும் யப்பான், ஜேர்மனி போன்ற இந்தியாவைவிட பலமடங்கு சக்திவாய்ந்த பெரும் நாடுகளின் இராணுவங்கள் எத்தனையாவது நிலையில் உள்ளன?

சீனாவில் டெங்சியாவோபிங் ஆட்சிக்கு வந்ததும் வியட்நாமுடன் ஒரு போர் நடைபெற்றது. அப்பொழுதும் இந்த உலக முதலாளித்துவ ஊடகங்கள் வியட்நாம் இராணுவம் உலகின் மூன்றாவது பெரிய இராணுவம் என எழுதித் தள்ளின. அண்மையில் வட- தென் கொரியாக்களுக்கிடையில் பதட்டம் அதிகரித்து, அமெரிக்காவையும் தென்கொரியாவையும் தாக்குவேன் என வடகொரியா மிரட்டியபோது, வடகொரிய இராணுவம்தான் உலகின் நான்காவது, ஐந்தாவது பெரிய இராணுவம் என இதே ஊடகங்கள் பிரசாரம் செய்தன.

எனவே இந்திய இராணுவம்தான் உலகின் மூன்றாவது பெரிய இராணுவம் என்ற புலிகளின் பிரசாரம், தமது கெட்டித்தனம் பற்றிப் புளுகுவதற்குத்தான் என்பதை விளங்கிக்கொள்வது ஒன்றும் பெரிய சிரமமான விடயமல்ல. அத்துடன் “நாம் வீரதீரமாக யுத்தம் செய்துதான் இந்திய அமைதிப்படையை நாட்டைவிட்டு வெளியேற்றினோம்” என்ற புலிகளின் பிரசாரமும் இன்னொரு புளுகே.

யாழ்ப்பாண மண்ணில் இந்திய அமைதிப்படைக்கு எதிராக ஆரம்பித்த புலிகளின் தேவையற்ற யுத்தம் முதலில் அவர்களை குடாநாட்டைவிட்டு விரட்டியடித்தது. அதன்பின்னர் வன்னிக்குப்பின் வாங்கிய புலிகள், அங்கிருந்து இந்திப் படைக்குச் சரியான பாடம் படிப்பிக்கப்போவதாகச் சூளுரைத்தனர். (இப்படித்தான் சந்திரிகா காலத்திலும் யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டப்பட்டபொழுது கூறினர். ஆனால் மகிந்தவின் காலத்தில் அவர்களின் வீராப்பெல்லாம் நந்திக் கடல் சுரிக்குள் தலைவர் கோவணத்துடன் காட்சி தந்தபோது, புஸ்வாணமாகிப் போனது)) ஆனால் அங்கிருந்தும் இந்திய இராணுவத்தால் படிப்படி[illegible]ரட்டப்பட்டு, இறுதியாக முல்[illegible]தீவு மாவட்டத்திலுள்ள நித்திகைக் குளம் என்ற காட்டுப் பகுதியில் முடக்கப்பட்டனர்.

நித்திகைக்குளம் காட்டுப் பகுதியில் முடக்கப்பட்ட புலிகளின் தலைவர் பிரபாகரனையும், அவனுடன் சேர்ந்த 40 புலி முக்கியஸ்தர்களையும் இந்திய இராணுவம் நினைத்திருந்தால் ஒருசில மணிநேரத்தில் துவம்சம் செய்திருக்கலாம். அப்படி நடந்திருந்தால், அதன்பின்னர் நடந்த 19 வருடப்போரும், அதனால் ஏற்பட்ட உயிரிழப்புகளையும் அழிவுகளையும் தடுத்திருக்கமுடியும். “ஆனைக்கும் அடி சறுக்கும்” என்பதுபோல், இந்த இடத்தில்தான் மிகப்பெரிய இந்திய இராணுவத்தின் தளபதிகள் பாரதூரமான தவறொன்றை இழைத்தனர்.

பிரபாகரனையும் ஏனைய புலிகளையும் தப்பிவிட முடியாதபடி இந்திய இராணுவம் சுற்றிவளைத்த பின்னர், இலங்கையில் இந்திய அமைதிப்படைக்கு தளபதியாக இருந்த ஜெனரல் கல்கத், புதுடில்லியிலிருந்த இந்திய அரச தலைமைப் பீடத்துடன் தொடர்புகொண்டு அடுத்து என்ன செய்வது என ஆலோசனை கேட்டிருக்கின்றார். அங்கிருந்து சற்றும் எதிர்பாராத பதில் இந்தியப் படைத் தலைமைக்குக் கிடைத்திருக்கிறது. அதாவது பிரபாகரன் உட்பட அனைத்துப் புலிகளையும் தப்பிச் செல்ல அனுமதிக்கும்படி புதுடில்லியிலிருந்து ஆலோசனை வழங்கப்பட்டு, அதன்படி எல்லாப் புலிகளும் தப்பிச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இந்த விபரீதமான ஆலோசனையை வழங்கியவர் யார் என்பதை இந்திய அரசாங்கம் இன்றுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. எனினும், அப்போது இந்தியாவின் பிரதமராக இருந்த ராஜீவ் காந்திதான் அந்த ஆலோசனையை வழங்கியவர் என பின்னர் இந்திய அமைதிப் படை உயர் வட்டாரங்களிலிருந்து கசிந்த தகவல்கள் தெரிவித்தன. (ராஜீவ் காந்தியின் இந்த மிகவும் தவறான தீர்மானத்தால், பின்னர் அவர் தனது உயிரையே ஸ்ரீ பெரும்புத்தூரில் வைத்து புலிகளிடம் இழக்க வேண்டிவந்தது. பெரும் துன்பியல் சம்பவமாகும்.)

**(தொடரும்...)**



# முதலாவது பிரமாண்ட ரெயில் கொள்ளை

அப்போதுதான் மற்றுமோர் அசௌகரியத்தை உணர்ந்தார். அவர் அணிந்திருந்த ஆடை!

ரயிலில் ஏறியபோது, அந்த நாளைய பிரிட்டிஷ் பிரபுக்கள் அணியும் நீளமான ப்ரொக் கோட் ஒன்றை எட்வார்ட் அணிந்திருந்தார். அந்த கோட்டுடனேயே மேலே ஏறியிருந்தார்.

வேகமான காற்றினால் இந்த கோட் அவரது முகத்தின் மேல் பறந்தது. அதைவிட கோட் பறப்பது அவரை கீழே இழுத்துவிடப் பார்த்தது.

ரயில்வே பெட்டிக்குமேல் மல்லாந்து படுத்தபடி, ஒரு கையால் பெட்டியின் கூரையைப் பிடித்தபடி மறுகையால் கோட்டை கழட்டத் தொடங்கினார். அது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. வலது தோளில் கயிற்று வளையம் வேறு இருந்தது. அது விழுந்துவிடக்கூடாது.

அதே நேரத்தில் அதில் நேரமும் எடுத்துக் கொள்ளக் கூடாது.

ஒரு மாதிரியாக கோட்டை உடலில் இருந்து கழற்றிவிட, வேகமான காற்று கோட்டை அடித்துக் கொணடு சென்றது.

இதற்கிடையே இஞ்சினில் இருந்துவரும் கரும் புகை அவரது முகம் உடல் ஆடைகள் எல்லாவற்றிலும் படிந்து கரியநிற படிவாகி இருந்தது. அவர் அணிந்து இருந்த வெள்ளைநிற ஷேர்ட் முழுமையாக கறுப்பு வர்ணத்துக்கு வந்திருந்தது.

இப்போது எதிர்க்காற்றுக்கு முதுகைக் காட்டியபடி கால்களாலும் கைகளாலும் ரயில் பெட்டியின் மரக் கூரையைப் பிடித்தபடி கார்ட் வேகனை நோக்கி நகரத் தொடங்கினார். அவர் பயணம் செய்த பெட்டியின் முடிவுக்கு வந்தபோதுதான் மற்றுமோர் சவால் இருப்பது தெரிந்தது.

கார்ட் வேகன் ரயிலின் கடைசிப்பெட்டியாக இருக்கும். அதற்கு அருகே இருந்தால் மேலே நடந்து செல்லும் தூரம் குறையும் என்றுதான் கடைசிக்கு முதல் பெட்டியில் (இரண்டாம் வகுப்பு) ஏறி இருந்தார். ஆனால் கடைசிக்கு முதல் பெட்டிக்கும் கடைசிப் பெட்டிக்கும் இடையே ஒரு இடைவேளை இருக்கும் விஷயத்தை அவர் கவனித்திருக்கவில்லை.

இரு பெட்டிகளுக்கும் இடையிலுள்ள இடைவெளி சுமார் 5 அடி தூரம்.

இப்போது பாதி வழி வந்தாகிவிட்டது. இரு பெட்டிகளுக்கும் இடையிலுள்ள இடைவெளியை பார்த்துவிட்டு திரும்பிவிட முடியாது. ஒரே வழி ஓடும் ட்ரெயினில், வீசும் எதிர்க்காற்றில், 5 அடி தூரமுள்ள இடைவெளியைப் பாய்ந்து கடப்பதுதான்.



உண்மையில் இதற்கு மகா தைரியம் இருக்கவேண்டும். காரணம் அந்த நாளைய ரயில் பெட்டிகளுக்கு இடையே இணைப்பு இருந்தபோதிலும் கடைசிக்கு முதல் பெட்டிக்கும் கார்ட் வேகனுக்கும் இடையே உட்புறமாக நடந்து செல்லும் இணைப்பு இல்லை. கீழே இரு பெட்டிகளையும் இணைக்கும் இரும்பு இணைப்பு மாத்திரமே இருந்தது.

அப்படியான நிலையில் இவர் இந்தப் பெட்டியிலிருந்து கடைசிப்பெட்டிக்குப் பாயும்போது கை தவறினால் அல்லது 5 அடி தூரத்தையும் ஒரே-யடியாக பாயவிட்டால் தரையில் விழுவார் என்பதை விட தண்டவாளத்தில் விழுவார் என்றுகூடச் சொல்லலாம்.

அப்படி விழுந்தால், ரயிலின் சக்கரங்கள் அவர்மீது பதியப்போவது நிச்சயம்.

பெட்டியில் இருந்து ஓரளவுக்கு உடலை உயர்த்தினார். கால்களுக்கு வலுக் கொடுத்தார். மூச்சை பிடித்தபடி பாய்ந்தார்.

ட்ரெயினின் கடைசிக்கு முதல் பெட்டியில் இருந்து கார்ட் வேகனை நோக்கித் தாவியபோது, அந்த ஐந்து அடி தூரத்தையும் தாண்டி கார்ட் வேகனின் கூரையின் மீது விழுவோமா, அல்லது கூரையை எட்டமுடியாமல் தண்டவாளத்தில் விழுவோமா என்பது றொபேர்ட்டுக்கு தெரியாதநிலையிலேயே, அவர் பாய்ந்து இருந்தார்.

மிகப்பெரிய ரிஸ்க்தான்.

இதற்கு முன்பாய்வதற்கு எந்தப் பயிற்சியும் எடுக்காத நிலையில் ஆச்சரியகரமாக றொபேர்ட் கீழே விழவில்லை – கார்ட் பெட்டியின் கூரையில் விழுந்தார்.

அதன்பின்னர் கூரைமேல் நகர்ந்தபடி கார்ட் பெட்டியின் நடுப்பகுதிக்குச் சென்றார். மேலேயிருந்த முதலாவது காற்றுபோகும் துவாரம் (வென்டிலேஷன் ஹோல்) தெரிந்தது.

அதனுள்ளே தன்னிடம் இருந்த கயிற்றுச் சுருளின் ஒரு முனையை கீழே செலுத்தினார். பாதி செலுத்தப்பட்ட நிலையில் கீழேயிருந்து யாரோ கயிற்றை இழுப்பது தெரிந்தது.

றொபேர்ட்.

இப்போது கூரையில் நகர்ந்து இரண்டாவது துவாரத்துக்கு மேலே சில விநாடிகள் காத்திருக்க, உள்ளேயிருந்து றொபேர்ட்டின் ஒரு கரம், இவர் உள்ளே செலுத்திய கயிற்றின் முனையை வெளியே நீட்டியது.

ஏற்கனவே கயிற்றுச் சுருளின் ஒரு முனை எட்வேர்ட்டின் பெல்ட்டில் இணைக்கப்பட்டிருந்தது.

**(தொடரும்...)**



# நிலமெல்லாம் இரத்தம்

**163**

**பா.ராகவன்**

ஆனால் இன்றைக்குப் போல, அன்று நடந்த இந்த முயற்சிகள், வெளிப்படையான முயற்சிகளாக இல்லை. மாறாக, டுனீஷியாவில் இருந்த யசீர் அரபாத்துக்கும் இஸ்ரேலிய அதிகாரிகளுக்கும் நடந்த பேச்சுவார்த்தைகள் யாவும் பரம இரகசியமாகவே நடைபெற்றன. இதற்கு நோர்வே மட்டும் காரணமல்ல. ஓரெல்லை வரை அமெரிக்காவும் காரணம்.

1989–90களிலிருந்தே பி.எல்.ஓ.வும் இஸ்ரேலிய அரசும் ரகசியப் பேச்சுகளில் ஈடுபட்டுவந்திருக்கின்றன. ஓரளவு அமைதிக்கான சாத்தியம் இருக்கிறது என்பது தெரியவந்தபோது, ஓஸ்லோ ஷிமோன் பெரஸும் கையெழுத்திட்டார்கள்.

கவனிக்கவும். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஒப்பந்தம், ரகசியமாகவே செய்யப்பட்டது. உலகுக்கு அறிவிக்கப்படவில்லை. 1993ஆம் ஆண்டு ஓகஸ்ட் 19 அன்று இது நடந்தது.

ஒப்பந்தம் என்று செய்யப்பட்டதே தவிர, பலஸ்தீனியர்கள் இதனை எப்படி ஏற்பார்கள் என்கிற சந்தேகம் அரபாத்துக்கும் இருந்திருக்கிறது. அதனால்தான், பகிரங்கமாக ஒப்பந்தத்தை அவர்களால் மேற்கொள்ள முடியவில்லை. ஆனால், இதெல்லாம் மூடிவைக்கிற விஷயமல்ல என்கிற காரணத்தினால் சரியாக எட்டே தினங்களில் (ஓகஸ்ட் 27) வெளிவந்துவிட்டது. பத்திரிகைகள் எப்படியோ மோப்பம் பிடித்து செய்தி வெளியிட்டுவிட்டன.



ஒப்பந்தத்துக்கான பணிகளில் இறங்க ஆரம்பித்தார்கள். ஓஸ்லோ என்பது நோர்வேவின் தலைநகரம். அங்கே இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதால் அந்தப் பெயர் வந்துவிட்டது. அவ்வளவுதான்.

முதலில் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட, அரபாத் நோர்வேக்குப் போகவில்லை. அவர் அப்போது அமெரிக்காவில் இருந்தார். அமெரிக்க அதிகாரிகளுடனும் ஐ.நா.வின் அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்தார். நிரந்தரத் தீர்வு என்பது உடனடியாகச் சாத்தியம் இல்லாத காரணத்தால், சில தற்காலிகத் தீர்வுகளை இருதரப்புக்கும் பொதுவாக அமெரிக்க அதிபர் பில் க்ளிண்டன் முன்வைத்தார்.

ஒரு பக்கம் யசீர் அரபாத் அங்கே பேசிக்கொண்டிருந்த அதே சமயம், அங்கே பேசப்பட்ட தீர்வுகள், ஓர் ஒப்பந்தமாக எழுதப்பட்டு நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் கையெழுத்தானது. பி.எல்.ஓ.வின் சார்பில் அகமது குரானி என்பவரும், இஸ்ரேல் அரசின் சார்பில் அதன் வெளியுறவுத் துறை அமைச்சர்

முதலில் அரபாத்தும் இஸ்ரேலிய அதிகாரிகளும் யோசித்தார்கள். அப்படியொரு ஒப்பந்தம் நடக்கவே இல்லை என்று சொல்லிவிடுவதா? அல்லது, ஆமாம் நடந்தது என்று உண்மையை ஒப்புக்கொள்வதா?

இதுதான் குழப்பம். ஆனால் நோர்வே அரசு, இதற்குமேல் மூடி மறைக்கவேண்டாம் என்றுசொல்லி, ஒப்பந்தம் கையெழுத்தானது உண்மைதான் என்று பகிரங்கமாக அறிவித்தது.

பலஸ்தீனியர்கள் மட்டுமல்ல. ஒட்டுமொத்த உலகமே வியப்புடன் பார்த்த சம்பவம் இது. ஆண்டாண்டு காலமாகப் பலஸ்தீனியர்களின் விடுதலைக்காகத்தான் யசீர் அரபாத் போராடுகிறார். அவர்களுக்காகத்தான் இஸ்ரேலிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, ஓர் ஒப்பந்தம்வரை போய் இருக்கிறார். அப்படியிருக்கையில், அதை ஏன் இரகசியமாகச் செய்ய வேண்டும்? மக்கள் மத்தியிலேயே செய்திருக்கலாமே?

**(தொடரும்)**

---

**அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)**
**யாழ்ப்பாணம்**

**13**




# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

**தென்னாபிரிக்காவின் தேசத் தந்தையாக மட்டுமல்லாமல், உலக மக்களின் உள்ளங்கவர் கள்வராகவும் வாழ்ந்து விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை அந்த மக்களுக்கு பெற்றுக்கொடுத்த விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா அவர்களின் வாழ்க்கைப் பாதையை மீண்டுமொரு தடவை புதிய சிந்தனையுடன் மீட்டுப்பார்ப்பது பொருத்தம் என்ற அனேக வாசகர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப புதிய பகுதி தொடங்கப்படுகின்றது. வாசிப்பதோடு மட்டுமல்லாமல் வாசகர்கள் தமது அபிப்பிராயங்களையும் முரசுக்கு அனுப்புங்கள். அதையும் இதே பகுதியில் பிரசுரித்து அனைவரும் மகிழ்ச்சியடைவோம்.**

அவமானத்தால் அவன் முகம்வாடி வதங்கியது. அதிர்ச்சியும் அவமானத்தையும் விட கோபமே அவனுக்கு அதிகமாக இருந்தது. அன்று இரவு முழுவதும் தூங்காமல் என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்தான்.

தன்மானத்திற்கு இழுக்கு ஒன்று நேர்கிறது என்றால் உயிரேபோனாலும் போராடாமல் விட்டுவிடக்கூடாது என்று காட்லா ஊட்டி ஊட்டி சிறுவயதிலேயே வளர்த்திருந்தார். வெறும் வாய்வார்த்தையாக மட்டுமல்லாமல் செயல்மூலமும் இந்தப் பாடத்தை மகனுக்கு புகட்டி இருந்தார். மண்டேலா தன் வாழ்நாள் முழுவதும், நினைவில் வைத்திருந்த பாடம் அது. எதையும் மறக்கலாம், மன்னிக்கலாம். நண்பனுக்கு ஒரு பாடம் புகட்டவேண்டும் என்பதாகும். அந்த சம்பவம்தான் பழைய மாணவர்களுக்கெதிராக போர்க்கொடி தூக்கும் எண்ணத்தை மண்டேலாவின் மனதில் விதைத்தது. ஆனால் அதை அவர் தன் சக மாணவர்களுக்கு சொல்லிக் கொள்ளவில்லை.

புதிய மாணவர்கள் அனைவரும் மண்டேலாவின்பின் அணிதிரண்டனர். பலம்கூடப் பெற்றதால் அவர்களின் நடவடிக்கைகள் சுறுசுறுப்படைந்து பிரசாரம் சூடுபிடிக்க ஆரம்பித்தது. பதாகைகள் ஏந்தியவண்ணம் ஆவேசமாக “பழைய மாணவர் அநீதி ஒழிக” என்ற கோஷத்துடன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பிரச்சினை கல்லூரி நிர்வாகிகளிடம் கொண்டு செல்லப்பட்டது. விடுதி



ஆனால் தன் மானத்தை மட்டும் யாருக்காகவும் எதற்காகவும் விட்டுக் கொடுக்கக்கூடாது என சபதமிட்டபடி போராடுவோம் என மனதில் உறுதி பூண்டான்.

அடுத்த நாள் பொழுது விடிந்தது. மண்டேலா கல்லூரிக்குள் ஆவேசமாக நுழைந்து புதிய மாணவர்களான தன் சக மாணவர்களுடன் கலந்துரையாடி பழைய மாணவர்களுக்கு எதிராக போராடுவோம் என்ற முடிவை திடமாக எடுத்தான். பழைய மாணவர்களின் அநீதிக்கெதிராக போராட தயாரானதற்கு முதல் காரணம், தன்னை இழிவுபடுத்திய நிர்வாகத்தை இனிமேல் புதிய மாணவர்களிடம் ஒப்படைக்கவேண்டும். பழைய மாணவர்கள் இந்தப் பொறுப்பை தவறாக பயன்படுத்தி, புதிய மாணவர்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்து அடிபணிய வைக்கிறார்கள். இது முற்றிலும் மாறவேண்டும், எமக்கு நியாயம்வேண்டும் என்று மண்டேலா நிர்வாகத்திடம் எடுத்துரைத்தார். மண்டேலாவின் நியாயமான கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. விடுதி நிர்வாகம் புதிய மாணவர்களுக்கு கைமாற்றப்பட்டது.

**(தொடரும்)**

# பூமியைக் உயிர்ப்பிக்கும் இயற்கை விவசாயம்



ஏ.எச்.ஏ.ஹுஸைசன்

மாறிவரும் தற்கால உலகப்போக்கில் உணவுகளும், உணவுகளை உற்பத்தி செய்யும் விவசாய நிலங்களும், நாம் வாழும் சூழலும் ஒட்டுமொத்தத்தில் மாசுபடுத்தப்பட்டு நஞ்சூட்டப்பட்டிருக்கின்றன என்பதை நம்மில் பெரும் பாலானோர் அறிந்திருப்பதில்லை. குறிப்பாக, விவசாயிகள் இத்தகைய ஆபத்துக்களைப் பற்றி அறிந்திராதது கவலைக்குரிய விடயம்.

ஒட்டுமொத்தமாக நோக்குகையில், நாம் ஒரு நச்சுச் சூழலுக்குள் அகப் பட்டிருக்கின்றோம் என்பதுதான் உண்மை. இது ஒன்றும்தெரியாமல் நடந்த விடயங்களல்ல. ஒரு கண்கட்டு வித்தைபோல விவசாயிகளையும் வறிய நாடுகளையும் ஏமாற்றிய சமாச்சாரம்தான் இது.

இப்பொழுது நாம் உண்ணும் எந்தவொரு உணவுப் பொருட்களை எடுத்துக்கொண்டாலும் அவை செயற்கைச் சுவையூட்டிகளும் இரசாயனங்களும் கலக்காததாக இல்லை. இப்பொழுது நாம் சந்தையில் வாங்கும் மரக்கறிகள் எல்லாம் பூச்சிநாசினிகளும் கிருமிநாசினிகளும் செயற்கை உரமும் கலந்து உற்பத்தியாக்கப்பட்டவைதான்.

கண்ணுக்கு அழகாய் தோன்றும் இந்த மரக்கறிகள் நமது உடலில் சிறுகச்சிறுக நஞ்சு சேர்ப்பவை என்பதை நினைவில் கொள்ளவேண்டும். அதேபோன்று இறைச்சி உணவுகளிலும் விஷப் பதார்த்தங்கள் கலந்தேதான் இருக்கின்றன. வளர்ப்புக் கோழிகளுக்குப் போடப்படும் உணவிலும், அவற்றுக்கு ஏற்படும் நோய்களுக்காகப் பயன்படுத்தப் படும் மருந்துகளிலும் எத்தனையோ வகையான மனித ஆரோக்கியத்திற்குக் கேடுவிளைவிக்கக்கூடிய பொருட்கள் கலந்திருக்கின்றன.

இவை நம்மையறியாமல் நாளடைவில் நம்து உடல்நலத்திற்கு ஊறு விளைவிக்கும். இவைதவிர எந்தப் பழங்களையும் இயற்கையில் கனிந்ததாக இன்று சந்தையில் வாங்கமுடியவில்லை. மனித பிணத்தைப் பாதுகாப்பதற்குப் பயன் படுத்தும் இரசாயனப் பொருட்களைப் பல்வேறுவழிகளில் பயன்படுத்தி நம்மை கண்குளிரச் செய்து ஏமாற்றுகிறார்கள்.

சற்று சிந்தித்துப் பார்த்தால் நமது நாட்டில் விளையும் எந்தக் கனியையும் மாதக்கணக்கில் பத்திரப்படுத்தி வைக்க முடியுமா? இதற்கான பதிலை படித்தவரும் பாமரரும் இல்லை என்றுதான் சொல்லுவார்கள். அதேவேளை, மாதக்கணக்கில் கப்பலில் ஏற்றப்பட்டு நமது நாட்டுக்கு அனுப்பப்படும் அப்பிள் பழத்தையும் இன்னும் சிலவற்றையும் எதுவுமே அறியாதவர்களாய், இஷ்டப்பட்டு வாங்கி வந்து குழந்தைகளுக்கும் கொடுத்து குடும்பத்தோடு உண்ணுகிறோம்.

உண்மையில் எதையெதையோ வெல்லாம் கலந்து எமது கண்களை ஏமாற்றிய பழங்களை உண்பதன்மூலம் சிறுகச் சிறுக நமது உடலில் நஞ்சை ஊட்டிக்கொள்கிறோம். இதேபோன்றுதான் தானியங்கள், கிழங்கு வகைகள், பாலுணவு என்பவற்றிலும் இரசாயனங்களும் செயற்கைச் சுவை!ட்டிகளும் தாராளமாகக் கலந்திருக்கின்றன.

நொறுக்குத்தீனிகளிலும் இன்னும் சில அவசர உணவுகளிலும் அஜினோமோட்டோ கலக்காமல் இல்லை. ஆனால் இவற்றையெல்லாம் நாம் கண்டுகொள்வதில்லை. கண் மூடித்தனமாக வாங்கி கண்டபடி உண்கிறோம். அதேவேளை இவற்றிலிருந்து நாம் மெல்ல மெல்ல பழைய இயற்கை முறைக்கு மாறாதவரை எமது ஆரோக்கியத்தையும் இயற்கையையும் நாசம் செய்துவிடுவோம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

நமது பாரம்பரிய விவசாய முறைகளை வல்லாதிக்க சக்திகளும் காலனித்துவ மேற்குலக சக்திகளும் நமது விவசாயிகளின் மனங்களை மூளைச்சலவை செய்து பாழ்படுத்தி விட்டார்கள். அதன்பலனாக இன்று நாமும் நமது இளஞ்சந்ததிகளும் நோயாளிகள் ஆக்கப்பட்டிருக்கின்றோம். இதனோடு சேர்த்து இயற்கையின் சமநிலைத்தன்மையும் நாசம் செய்யப்பட்டிருக்கிறது என்கின்ற கவலையைத் தரும் விடயத்தையும் நாம்காதில் வாங்கிக் கொள்ளவேண்டும். அதிக விளைச்சல், அதிக இலாபம், கூடிய நன்மை என்றுதான்



இந்த ஆக்கிரமிப்பாளர்களும் அவர் தம் கொழுத்த கம்பனிகளும் நமது பாரம்பரிய விவசாயிகளையும் ஏழை நாடுகளையும் ஏமாற்றி அவர்களது இரசாயனங்களையும், இயந்திராதிகளையும், உரங்களையும் தந்து எமக்கும் இயற்கைக்கும் இடையில் இருந்த உறவை அறுத்துவிட்டார்கள்.

அதில் ஏமாற்றப்பட்ட நாம் இப்பொழுது இயற்கையோடு இருந்த உறவு துண்டாடப் பட்டதால் உண்டான பாதக விளைவுகளை அனுபவிக்கின்றோம். அதேவேளை அவர்கள் கொழுத்த இலாபமீட்டிக்கொண்டு ஆரோக்கியமாக வாழ்கின்றார்கள்.

தொடர்ச்சியான இரசாயனப் பாவனை மூலம் நமது மண்வளம் இயற்கைக்கு முரணாக ஆக்கப்பட்டு பல்லினத்தன்மைக்கும் இயற்கைச் சமநிலைக்கும் காரணிகளாக இருக்கக்கூடிய நன்மை தரும் நுண்ணங்கிகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. நிலத்தடி நீரும் சூழலும் மாசுபடுத்தப் பட்டிருக்கின்றது. அதன்விளைவாக நமது ஆரோக்கிய சூழலுக்குக் கேடு நேர்ந்திருக்கிறது.

இதற்காக நிலைகொள் விவசாயம் இங்கு வலியுறுத்தப்படுகின்றது. சூழலியல், மானிட வாழ்விடம், உணவுற்பத்தி முறைமைகள் என்பனவற்றை ஒன்றிணைத்து வடிவமைத்தலே நிலைகொள் விவசாயம் என்ற பதப் பிரயோகத்தின்கீழ் வருகிறது.

ஒருங்கிணைந்த அமைதியான மானிட வாழ்வு, நுண் காலநிலை, ஆண்டு, பல்லாண்டுத் தாவரங்கள், விலங்குகள், மண், நிலையான நீர் வளம், மற்றும் ஆக்கபூர்வமான சமூக அமைப்பு என்பனவற்றுக்காக முனைகின்ற நிலப் பயன் பாட்டுக்கும், சமூக ஆக்கத்திற்குமான முன்னெடுப்பே நிலைகொள் விவசாயம் எனப்படுகிறது.

அவசரமான உணவுற்பத்திக்கு மேலதிகமாக சக்தி வினைத்திறனை மேம்படுத்துதல், கழிவு நீர்ப் பரிகரணம், மீள்சுழற்சிப் பயன்பாடு, மற்றும் நிலப் பராமரிப்பு என்பன இதில் கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.

இந்த விவசாய முறைகள்மூலம் பூமி

> தோட்டச் செய்கையும் மீள்சுழற்சியாக்கமும் நிலைகொள் விவசாயத்தில் முக்கியமானவை. நிலக்காட்சிமை, சாவித் துளைத்தோட்டம், தோழமைப் பயிரிடல், படலப் பத்திரக் கலவையிடல், கோழிக்கால் கலப்பைப் பயன்பாடு, சூரியப் பசுமையில்லம், சுற்று மூலிகைத் தோட்டம், புழுக்களாலான கூட்டெரு ஆகியவற்றை இது உள்ளடக்குகிறது. இயற்கை விவசாயத்தில் இணைந்து எல்லோரையும் எல்லாவற்றையும் வாழவைப்போம்.

பராமரித்துப் பாதுகாக்கப்படவேண்டும். அதாவது தாவரங்கள், விலங்குகள், உட்பட நிலம், நீர், காற்று என உயிருள்ளதும் உயிரற்றதுமான அனைத்தும் பாதுகாக்கப் பட வேண்டும். இதில் பிரதான நோக்மாக உலகில் வாழும் மக்கள் பாதுகாக்கப்படவேண்டும். மக்களையும் நிலத்தையும் பாதுகாப்பதற்காக சமூகப் பொறுப்பையும் வளர்த்து இருக்கும் வளங்களையும் நாசம் செய்யாது பா்துகாத்தல் வேண்டும்.

மரபு வழி அறிவையும் அனுபவத்தையும் மதிப்பிடவும், வலுவூட்டவும் நிலைகொள் விவசாயம் பயன்படுகிறது. உலகளாவிய நிலைபேறான விவசாய முறைகளையும் நில முகா்மைத்துவ நுட்பங்களையும் நிலைகொள் விவசாயம் உள்ளடக்குகிறது. இரசாயன மாசாக்கத்தை ஏற்படுத்தும் பூச்சிநாசினிகளின் பயன் பாடற்ற சேதனப் பண்ணையாக்கத்தை நிலைகொள் விவசாயம் மேம்படுத்துகிறது.

நிலைகொள் விவசாயம் சூழல் கூறுகளுக்கிடையில் ஒன்றுக்கொன்று துணையாகுந்தன்மை முதலான அங்கித் தொடர்புகளை அதிகரிப்பதனை குறிக்கோளாகக் கொண்டது. உயிர்ப் பிராந்தியத்துவம், மக்களையும் மண்ணையும் மையப்படுத்திய சமுதாயத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி, பொருத்தப்பா்டான தொழில்நுட்பப் பயன்பாடு, மற்றும் கொள்கைகள், தத்துவங்கள் என்பனவற்றையும் இது உள்ளடக்கும்.

சூரிய வலு, காற்று வலு, கூட்டெரு வாக்கம், மலசலகூடங்கள், சூரியபசிய வீடுகள், வலுத்திறன் வீடமைப்பு, சூரியசக்தியிலான உணவு தயாரிக்கும் மற்றும் உலர்த்தும் நுட்பங்கள் என்பன எல்லோரும் அறிந்த நிலைகொள் விவசாயத்தால் எடுத்துக் கூறப்படும் தொழில்நுட்பங்கள் ஆகும்.

இது காலங்காலமாக நிலைத்திருக்கக் கூடியதாகையால் பல்லாண்டுப் பயிராக்கல் முறைமை நிலைகொள் விவசாயத்தில் முக்கிய இடம்வகிக்கிறது. நிலைகொள் விவசாயம் என்பது, அங்கி, சூழல், சமூகம் ஆகிய எல்லாக் காரணிகளையும் இணைத்து வடிவமைக்கப் பட்டதும், செயலாற்றுவதுமான ஒன்றாகும். இதில் ஒவ்வொரு கூறும் பல செயற்பாடுகளை நிகழ்த்துகின்றன. அதேபோல், ஒவ்வொரு செயற்பாடும்



பல கூறுகளால் ஆற்றப்படுகின்றன.

உண்மையில் இயற்கையின் தன்மையை நன்கு அவதானித்து அதனைப் பிரதிமைப்படுத்தும் ஒரு மாற்றுச் சூழல் தொகுதியே இதுவாகும். பன்முகப் பயிராக்கத்தினால் உயிர் அங்கிப் பல்வகைமை பேணப்படுகிறது. இயற்கைத் தாவரங்களின் தொடர்ச்சி முடுக்கப்படுதல் மற்றும் பயன்பாடு காரணமாக சக்தித் திறன்மிக்க வீட்டுக் குடியிருப்பு ஏற்படுத்தப்படுகின்றது.

தரமான சேதனப் பண்ணை மற்றும் மூடு பயிர், பசந்தாட் பசளையிடல், பயிர்ச்சுழற்சி, பத்திரக் கலவையிடல், ஆகிய நுட்பங்களைப் பயன்படுத்தும் தோட்டச் செய்கை முதலானவை நிலைகொள் விவசாயத்தில் விதந்துரைக்கப் படுகின்றன. இதனால் நிலைகொள் விவ:சாய வரையறைக்குள் விவசாயிகள் பல்வேறு தொழிநுட்பத் தெரிவுகளை பயன்படுத்துகின்றனர். ஆயினும், எந்த முறையைப் பயன்படுத்துவது என்பது முகாமைத்துவத்திலும், பிரதேச சிறப்பம்சத்திலும் தங்கியிருக்கும்.

நிலைகொள் விவசாயத்துடன் தொடர்புபட்ட பண்ணை முறைகளும், தொழிநுட்பங்களும் பொதுவாகவே விவசாயக் காடாக்கல், சமவுயரக் கோட்டுப் பயிர்ச்செய்கை, வன்நீர் முகாமை, புதர்வேலி வரிசைகள், காற்றுத் தடைகள், மற்றும் தடாக நன்நீர் வளர்ப்பு, இடைப்பயிர்ச்செய்கை, பல்லினப் பயிர்ச்செய்கை ஆகியவற்றை உள்ளடக்கியதே ஒருங்கிணைந்த பண்ணை முறையாகும்.

தோட்டச் செய்கையும் மீள்சுழற்சியாக்கமும் நிலைகொள் விவசாயத்தில் முக்கியமானவை. நில்க்காட்சிமை, சாவித்துளைத் தோட்டம், தோழமைப் பயிரிடல், படலப்பத்திரக் கலவையிடல், கோழிக்கால் கலப்பைப்பயன் பாடு, சூரியப் பசுமையில்லம், சுற்று மூலிகைத் தோட்டம், புழுக்களாலான கூட்டெரு ஆகியவற்றை இது உள்ளடக்குகிறது. இயற்கை விவசாயத்தில் இணைந்து எல்லோரையும் எல்லாவற்றையும் வாழவைப்போம்.

# தமிழர் பண்பாட்டுக் கலை வடிவம் நாட்டுக்கூத்தை வளர்த்தெடுப்போம்

**குருநகரைச் சேர்ந்த அண்ணாவி அன்ரனி யேசுராசா (தம்பித்துரை யேசு) நீண்ட காலமாக நாடகங்கள், நாட்டுக் கூத்துக்களில் ஈடுபட்டுவரும் திறமைவாய்ந்த நடிகர்களில் ஒருவராகத் திகழ்கின்றார்.**

**அதேவேளை சிறுவர், சிறுமியர், பெரியவர்களை பயிற்றுவித்துமுள்ளார். அவரை தினமுரசு வாரமஞ்சரி வாசகர்களுக்காக நேர்காணல் கண்ட போது எதுவித தட்டிக்களிப்பும் இல்லாமல் தந்த செவ்வி பின்வருமாறு:**



**கேள்வி:- உங்களின் கலையுலக பிரவேசம் பற்றிச் சொல்லுங்கள்?**

**பதில்:-** 1961ஆம் ஆண்டு 'வாழ்க்கையின் புயல்' என்னும் நாட்டுக் கூத்தில் முழுக் கதாபாத்திரம் ஏற்று நடித்தேன். அப்போது எனது வயது 12. அந்தக் காலத்தில் முழு இரவும் கூத்தாடும் காலம். நான் இரவு முழுவதும் நடிப்பேன். இதுதான் என்னை கலை உலகிற்கு கொண்டு வந்த கதை.

**கேள்வி:- உங்களின் இத்துறையின் வழிகாட்டியாக யாரைக் குறிப்பிடுகிறீர்கள்?**

**பதில்:-** எனது தாயார், மூத்த சகோதரர் மிருதங்க வித்துவான் அமரர் ரீ.பாக்கியநாதன், அமரர் ரீ.யோசப் (கட்டப்பொம்மன்), ரீ.பிலிப் அண்ணாவியார் சாமிநாதன், கலையார்வன், கு.ராயப்பு, சி.எம்.நெல்சன் அண்ணாவியார், பேக்மன் ஜெயராசா இவர்களைக் குறிப்பிடலாம்.

**கேள்வி:- இதுவரை எத்தனை நாடகங்கள், நாட்டுக் கூத்துக்களில் பங்கெடுத்துள்ளீர்கள்?**

**பதில்:-** ஏறத்தாழ 30 நாடகங்களில் 50-க்கும் மேற்பட்ட கூத்துக்களில் பங்குபற்றியுள்ளேன். அவற்றில் சில 'குமுதம்', 'நிராசை', 'திருந்திய உள்ளம்', 'பொறுமையின் எல்லை', 'சாம்ராட் அசோகன்', 'மலர்ந்த ரோஜா', 'யூலியஸ் சீசர்', 'குமணன்', 'காணாத தூரம்', 'போர்க்களம்', 'களம் தந்த களங்கம்', 'புவலயம் புகுந்த புனிதன்', போன்ற பல நாடகங்களும் 'சுழியார்', 'செபஸ்ரியார்', 'மூவிராசாக்கள்', 'தர்மசீலன்', 'யூதகுமாரன்', 'செந்தூது', 'புரட்சித்துறவி', 'வீரமாதேவி', 'சங்கிலியன்', 'யாழ்பாடி', 'கம்பர் மகன்' போன்ற பல கூத்துக்கள்.

**கேள்வி:- நாடகங்களை பயிற்றுவித்திருக்கின்றீர்களா? அவை எவை?**

'திருந்திய உள்ளம்', 'கள்ளோகாவியமோ' (நகைச் சுவை இசை நாடகம்) 'பொறுமையின் எல்லை', 'மலர்ந்த ரோஜா', 'துன்பத்தின் பின்' போன்றவையும், 'போர்க்களம்', 'மூவிராசாக்கள்', 'பத்துக் கன்னியர்', 'மலை மேற் கொலை', 'தேவநாயகம் பிள்ளை' போன்ற தென்மோடி நாட்டுக் கூத்துக்களையும் பயிற்றுவித்துள்ளேன்.

**கேள்வி:- கலைத்துறை சேவைக்காக கிடைத்த பட்டங்கள், பாராட்டுக்கள் எவை?**

திருந்திய உள்ளம் நாடகத்தில் சிறந்த நடிகனாகவும், 'புரட்சித் துறவி' சிறந்த நாட்டுக்கூத்தாகவும், 'சாம்ராட் அசோகன்' நாடகத்தில் சிறந்த நடிகனாகவும் 'தேவநாயகம் பிள்ளை' நாட்டுக்கூத்தில் அண்ணாவியார் பட்டமும், பொன்னாடையும் போர்த்தி கௌரவித்தார்கள். 2004இல் குருநகர் யாகப்பர் கலை மன்றம் அண்ணாவியார் பட்டமும் பொன்னாடையும் 2005 யாழ். பிரதேச செயலகம் பொன்னாடை போர்த்தியும் 2007 கலைக்காற்றிய சேவைக்காக திருமறை நாட்டுக்கூத்து மன்றம் கௌரவிப்பும் பொன்னாடையும், 2008இல் குருநகர் நாட்டுக்கூத்து மன்றம் பதக்கமும், பொன்னாடையும் 2011இல் யாழ்.பிரதேச செயலகத்தால் யாழ்.ரத்னா விருதும், 2012 இல் கலாபூஷணம் பட்டம் என்பன வழங்கப்பட்டன.

**கேள்வி:- தொய்வடைந்துள்ள நாடக உலகை தூக்கி நிறுத்துவதற்கு நீங்கள் கூறுவது?**

**பதில்:-** அக்காலத்தில் எமது குருநகர்ப் பகுதிகளில் பல நாடக, நாட்டுக்கூத்து மன்றங்கள் இயங்கி வந்தன. நாடக நாட்டுக்கூத்து போட்டிகளும் நடத்தப்பட்டன. இன்று அப்படி ஒன்றும் இல்லாமலே போய்விட்டன. அது கவலைக்குரிய விடயமாகும். எமது சமுதாயத்தில் சினிமா தொலைக்காட்சி சின்னத்திரை நாடகங்கள் ஊடுருவி விட்டன. இன்றைய காலங்களில் நாடகத்தையோ நாட்டுக் கூத்தையோ எழுதுவதற்கும் பயிற்றுவிப்பதற்கும் திறமைசாலிகள் இல்லை. தமிழர்களின் பண்பாட்டுக் கலை வடிவமான நாட்டுக்கூத்தை அழிந்துவிடாமல் சிரமங்கள் மத்தியிலும் முன்னெடுக்க வேண்டுமென் பரந்து வாழும் கலைஞர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

**கேள்வி:- இறுதியாக நீங்கள் கூற விரும்புவது?**

**பதில்:-** பாரம்பரிய இயலிசை நாடக, வடிவமான நாட்டுக்கூத்தை பயிற்றுவிக்கும் அண்ணாவிமார்கள் தாளநயத்தை மிகவும் கவனிக்கவேண்டும். தற்போதைய கலைஞர்களிடையே அந்தக் குறைபாடு இருந்து வருகிறது. அண்ணாவியார்



சாமிநாதன், பேக்மன் ஜெயராசா போன்ற பழம்பெரும் கலைஞர்கள் மத்தியில் பழமைவாய்ந்த நாட்டுக்கூத்து மெட்டுக்களையே மரபு கெடாமல் நவீனப்படுத்தி ஆடும் ஆற்றல் இருந்திருக்கிறது. மேலும் தொலைக் காட்சிப் பெட்டியையே நம்பி இருக்கும் எமது இளைய சமூகத்தினரை திசைதிருப்ப நடிப்பிலும், பாடும் மெட்டுக்களிலும் புதுமையை புகுத்தி கேட்போர், பார்ப்போர் மத்தியில் விழிப் புணர்வை தோற்றுவிக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அப்பொழுது எதிர்காலத்தில் நமது பாரம்பரிய கலை வடிவமான நாட்டுக்கூத்தை அழிய விடாமல் காப்பாற்ற முடியுமென்பது எனது கருத்தாகும்.



**நேர்கண்டவர்:**
**தேவி பரமலிங்கம்**

## இன்றைய அரசியல் சூழலுக்கேற்ற கவிஞர் கண்ணதாசன் சொன்ன கதை!

எமதர்மன் சித்திரகுப்தனிடம் "இனிமேல் சாகிறவர்களின் நாக்கை மட்டும் தனியாக அறுத்துக் கொண்டு வந்துவிடு" என்று சொன்னான்.

அதுபோல் சுமார் ஆயிரம் நாக்குகளை அவன் அறுத்துக் கொண்டு வந்தான். அறுத்த பின்னாலும் சில நாக்குகள் துடித்துக்கொண்டு கிடந்தன. சில நாக்குகள் மரத்துப்போய் இருகூறாகப் பிளந்து கிடந்தன.

"மரத்துப்போய் இரட்டையாகக் கிடக்கும் நாக்குகளெல்லாம் யாருடயவை?" என்று கேட்டான் எமதர்மன்.

"இரட்டையாகக் கிடக்கும் நாக்குகளெல்லாம் ஆளும் கடசிக்காரர்களுடைய நாக்குகள் பிரபு! துடித்துக்கொண்டிருக்கும் நாக்குகளெல்லாம் எதிர்க்கட்சிக்காரர்களுடைய நாக்குகள் பிரபு!" என்றான் சித்திரகுப்தன்.

"ஒரு உணர்ச்சியும் இல்லாத மற்ற நாக்குகள்?" என்று கேட்டான் எமன்.

"அவர்களுக்கு ஓட்டுப் போட்டவர்களுடைய நாக்குகள்" என்று அமைதியாகச் சொன்னான் சித்திரகுப்தன்.



# நிராகரிக்கப்படும் கிரேக்க மக்களின் தீர்ப்பு



கடன்களை புதுப்பிக்கவேண்டுமானால், சிக்கன நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தவும், ஆழப்படுத்தவும் வேண்டும் என்ற ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் நிபந்தனையை, ஜூலை 5ஆம் திகதி நடத்தப்பட்ட நாடுதழுவிய கருத்துக்கணிப்பில் பெரும்பான்மை கிரீஸ் மக்கள் நிராகரித்திருந்தனர். இப்போது, கிரீஸ் மக்கள் நிராகரித்த அதே நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதாக ஐரோப்பிய நிதி நிறுவனங்களின் கால்களில் விழுந்திருக்கிறார் அந்நாட்டின் பிரதமர் அலெக்சிஸ் சிப்ராஸ்.

வாக்கெடுப்பின் முடிவை பயன்படுத்தி ஐரோப்பிய கடன் நிறுவனங்களிடம் புதிய வலுவுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக அறிவித்திருந்தார் அலெக்சிஸ் சிப்ராஸ். அதன்படி ஜூலை 7ஆம் திகதி அவர் முன்வைத்த கடன்கோரிக்கையை ஐரோப்பிய மத்திய வங்கி, ஐ.எம்.எ.்.ப் மற்றும் ஐரோப்பிய நாடுகள் அவர் முகத்திலேயே தூக்கி எறிந்துவிட்டன. மாறாக, அடுத்த 48 மணிநேரத்துக்குள் கிரீஸ் மக்களால் நிராகரிக்கப்பட்ட சிக்கன நடவடிக்கைகளை அம்மக்கள் மீது சுமத்துவதற்கான புதிய திட்டத்தை வகுத்துத் தருமாறு உத்தரவிட்டிருந்தன.

அதாவது, ஜூலை 9ஆம் திகதிக்குள் கடன்கொடுத்தவர்களுக்கு உகந்த ஒப்பந்தத்தை போட்டுக்கொள்ளாவிட்டால், ஜூலை 12ஆம் திகதி மற்ற ஐரோப்பிய நாட்டு தலைவர்கள் ஒன்றுகூடி கிரீசை ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற்றுவது குறித்து முடிவெடுப்பார்கள். இதில், கிரீஸ் மக்களின் விருப்பம், முடிவு, ஜனநாயகம் எதற்கும் இடமில்லை. இதற்குப் பணிந்து சிப்ராஸ் கடன் நிறுவனங்கள் முதலில் சொன்ன நிபந்தனைகளையே ஏற்றுக்கொள்ளும் திட்டத்தை சமர்ப்பித்திருக்கிறார்.

இந்தச் சூழலில், கிரீஸ் ஐரோப்பாவுக்குள் தொடர்வது உலக நிதித்துறை கட்டமைப்புக்கு தேவையானது என்று ஒருபுறமும், கிரீஸ் போன்ற ஊதாரி, பொறுப்பற்ற நாட்டை வெளியேற்றுவதுதான் சரியானது என்று இன்னொரு புறமும் வாதங்கள் வைக்கப்படுகின்றன. ஒவ்வொரு பொருளாதார நெருக்கடியின் போதும் முதலாளிகளின் தவறுகளை மக்கள்மேல் சுமத்துவது ஒரு தந்திரம். உண்மையில் கிரீஸின் இன்றைய நெருக்கடிக்கும் அதன் கடன்சுமைக்கும் யார் பொறுப்பு?

ஐரோப்பிய பொருளாதார சமூகத்திலும் (1962), ஐரோப்பிய ஒன்றியத்திலும் (1981), யூரோ ஒற்றை நாணய அமைப்பிலும் (2001) ஆரம்பத்திலிருந்து உறுப்பினராக ஆன நாடு கிரீஸ். தெற்கு ஐரோப்பாவில் உள்ள அந்நாட்டின் இப்போதைய மக்கள் தொகை சுமார் 1 கோடி, அதன் பரப்பளவு தமிழ்நாடு அளவுக்கு சமமானது. மத்திய தரைக் கடல் பகுதியில் முக்கியத்துவம்வாய்ந்த இடத்தில் அமைந்திருக்கும் கிரீசின் வரலாற்றுப் பெருமையும் அனைவரும் அறிந்ததே.

பாரம்பரிய விவசாய நாடான கிரீஸ், விவசாயத்துடன் மீன்பிடித் தொழில், கப்பல் கட்டும் தொழில் ஆகியவற்றை சார்ந்திருந்தது. முன்னேறிய வடக்கு ஐரோப்பிய நாடுகளுடன் பொருளாதார ரீதியாக இணைக்கப்பட்ட பிறகு கிரீஸின் சுயசார்பு பொருளாதாரம் அழிக்கப்பட்டு விவசாயத்தின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டது. அதன் தொழில்துறை, ஏற்றுமதி சார்புடையதாக மாற்றப்பட்டது. அதன் தீவுகளும், பொருளாதாரமும் சுற்றுலாத் துறையை சார்ந்திருக்கும்படி மாற்றப்பட்டன. இன்று கிரீஸின் உழைக்கும் மக்களில் 5இல் ஒருவர் சுற்றுலாத்துறையில் நேரடியாக பணிபுரிகின்றனர்.

ஐரோப்பிய ஒற்றை நாணய யூரோவை ஏற்பதன்மூலம் இலாப வேட்டையாட காத்திருந்த வங்கிகளும், முதலாளிகளும் கிரீஸின் நிதி நிலைமை அதற்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்யாதநிலையில் மோசடி கணக்கு தயாரித்தனர். நாட்டின் நிதி பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 வீதம் என்று குறைத்துக்காட்டி யூரோவில் சேர்வதற்கான நிபந்தனையை நிறைவு செய்தனர். இதற்கு அமெரிக்காவின் கோல்ட்மேன் சாக்ஸ் நிறுவனம் ஆலோசகராக இருந்து வழிகாட்டியது.

கிரீஸ் அரசின் கடன்பத்திரங்கள் யென், டொலர் நாணயப் பெறுமதிக்கு மாற்றப்பட்டன. அரசாங்கம் கொடுக்க வேண்டிய கடன் நிலுவைகளை எதிர்காலத்தில் கொடுப்பதாக வேறொரு கணக்கில் குறித்தார்கள். மேலதிகமாக கோல்ட்மேன் சாக்ஸ் வங்கியே 100 கோடி யூரோ இரகசியக் கடனாக கொடுத்து சரிக்கட்டியது. 2001இலிருந்து இந்த மோசடி நடந்து வந்திருப்பது 2010இல் கண்டுபிடிக்கப்பட்டது.

கிரீஸ் ஐரோப்பிய ஒற்றை நாணயத்தை பயன்படுத்த தொடங்கியது, வெளியிலிருந்து பாய்ந்த மூலதனமும், கடன்களும் ரியல் எஸ்டேட், 2004 ஒலிம்பிக் போட்டி கட்டுமானங்கள் (2,000 கோடி) என்று கிரீஸ் கிரேக்க நாட்டு முதலாளிகளின் பைகளை நிரப்பியது. மேலும், கிரேக்க முதலாளிகள் அந்நாட்டு வரிகளை தவிர்க்க தமது நிறுவனங்களை வெளிநாடுகளில் பதிவு செய்துகொண்டனர். உதாரணமாக, கிரேக்கர்களுக்கு சொந்தமான 3,760 கப்பல்களில் 2,898 கப்பல்களை வெளிநாடுகளில் பதிவுசெய்யப்பட்டு கிரீஸ் நாட்டு வரிகளை ஏய்க்கின்றனர். கடந்த 15 ஆண்டுகளில் கிரீஸ் கப்பல் முதலாளிகளுக்கு 58 வெவ்வேறு வகையான வரி வெட்டுகள் வழங்கப்பட்டன.

1980 முதல் 2010 வரை கார்ப்பரேட் வரி விதிப்பு 49 வீதத்திலிருந்து 20வீதமாக குறைக்கப்பட்டது. இருந்தாலும், முதலாளிகள் மோசடிமூலமும், இலஞ்சம்மூலமும் பெருமளவு வரிகளை ஏய்த்தனர். 2000-க்கும், 2007-க்கும் இடையே கார்ப்பரேட் வரி விதிப்பு வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.1 வீதத்திலிருந்து 2.6 வீதமாக வீழ்ச்சியடைந்தது. மாறாக, பெரும்பான்மை உழைக்கும் மக்கள்மீது சுமத்தப்படும் மறைமுக வரிகள் மொத்த வரி வருவாயில் 60வீதத்தைவிட அதிகமாக உள்ளது. (ஐரோப்பிய சராசரி 36.2வீதம்).

கடந்த 20 ஆண்டுகளில் அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளிலிருந்து கிரீஸ் $2,140 கோடி மதிப்பிலான இராணுவ தளவாடங்களை இறக்குமதி செய்தது.
அந்நாட்டுக்குத் தேவையற்ற, பன்னாட்டு நிறுவனங்களுக்கு பணத்தை கடத்தும், உள்நாட்டு தரகர்களின் பையை நிரப்பும் இந்த இறக்குமதிகள்மூலம் கிரீஸ் மக்கள் கொள்ளையடிக்கப்பட்டனர்.

கிரீஸ் வங்கிகளும், மற்ற ஐரோப்பிய நாட்டு வங்கிகளும் கிரீஸ் அரசின் கடன் பத்திரங்களை வாங்கி வரி வசூல் பற்றாக்குறை, ஆயுத இறக்குமதி, ஆடம்பர கட்டுமானப் பணிகள், முதலாளிகளுக்கு வரிச்சலுகைகள் ஆகியவற்றை சாத்தியமாக்கின.

இந்நிலையில் 2008ஆம் ஆண்டு அமெரிக்காவில் வெடித்த உலகளாவிய நிதி நெருக்கடி ஐரோப்பிய நாடுகளையும் தாக்கியது. கிரீஸ் அரசு திவாலாகும் நிலைக்கு தள்ளப்பட்டது. அப்போது கிரீஸ் அரசு கடன் பத்திரங்களுக்கு பணம் கொடுக்க முடியாதநிலையில் ஐரோப்பிய, அமெரிக்க வங்கிகள் திவாலாகியிருக்கும். உடனே, ஐரோப்பிய மத்திய வங்கியும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும், ஐ.எம்.எ.்.ப்-ம் தலையிட்டனர். அதன்படி 11,000 கோடி கடன்வசதி கிரீஸ் அரசுக்குக் கொடுக்கப்பட்டது. அதில் பெரும்பகுதியை, ஐரோப்பிய வங்கி நிறுவனங்கள், வணிக வங்கிகளிடமிருந்து கடன்பத்திரங்களை வாங்கிக்கொண்டு செலவை கிரீஸ் அரசின் கணக்கில் எழுதிக்கொண்டன. 2012இல் கிரீஸ் அரசின் கடன்களில் 80வீதம் தனியார்வங்கிகள் வாங்கிய கடன்பத்திரங்கள் வடிவில் இருந்தது, 20வீதம் பொதுத்துறை நிறுவனங்களிடம் இருந்தது. இப்போது அந்த நிலைமை நேரெதிராக மாறியிருக்கிறது.

கிரீஸ் அரசு கடன் கட்டமுடியாமல் போனதற்குக் காரணம், கல்வி, மருத்துவம் உள்ளிட்ட பொதுத்துறை செலவுகள், ஓய்வூதியங்கள், மக்கள்மீதான வரி விதிப்பை அதிகரிக்காதது இவைதான் காரணம் என்றுகூறி அவற்றை சரிசெய்யும்படி உத்தரவிட்டன. அதே ஒப்பந்தத்தில் அமெரிக்காவிடமிருந்தும் ஜெர்மனியிடம் இருந்தும் வாங்கத் திட்டமிட்டிருந்த ஆயுதங்களை வாங்கத் தவறிவிடக்கூடாது என்றும் கூறின. திவாலாகிப் போன கிரீஸ் அரசு மக்கள்மீது நிதிச்சுமையை அதிகரிக்க வேண்டும்.

ஆனால் ஆயுதம் வாங்குவதை நிறுத்திவிடக்கூடாது. இதுதான், இவர்களது சிக்கன நடவடிக்கைகளின் ஜோக்கியதை.



கிரீஸின் 1 கோடி மக்கள் தொகையில் பாதிப்பேர் சம்பளம்பெறும் தொழிலாளர்கள். அவர்களது சராசரி நிகர ஆண்டு வருமானம் "9,000 யூரோ மட்டுமே. இது அந்நாட்டின் தனிநபர் சராசரி வருமானத்தில் பாதியைவிடக் குறைவு. பெரும்பான்மை மக்கள் சுரண்டப்பட்டு மிகச் சிறுபான்மை கிரேக்க முதலாளிகள் கொழுக்கின்றனர் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

2010-க்குப் பிறகு கிரீஸின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 25வீதம் வீழ்ச்சி அடைந்துள்ளது. மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் வறுமைக் கோட்டுக்குக்கீழ் உள்ளனர்.

இத்தகைய கடும் நெருக்கடியினால் அழுத்தப்பட்ட கிரீஸ் ஆசிரியர்கள், மாணவர்கள், மருத்துவத்துறை ஊழியர்கள், அரசு ஊழியர்கள், தொழிலாளர்கள் என்று நாடுமுழுவதும் இலட்சக்கணக்கான உழைக்கும் மக்கள் சிக்கன நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடினர். இத்தகைய போராட்டங்களுக்கு மத்தியில் அடுத்தடுத்து ஐரோப்பிய வங்கிகளுக்கு கிரேக்க மக்களின் நலன்களை பலிகொடுத்துக் கொண்டிருந்த இடது, வலதுசாரி கட்சிகளை எதிர்த்து சிக்கன நடவடிக்கைகளை நிராகரிப்போம், கடன்கள் ரத்து செய்யக் கோருவோம் ஆகிய முழக்கங்களை முன்வைத்து போட்டியிட்ட சிரிசா என்ற தீவிர இடதுசாரி கூட்டணி 2015 ஜனவரி மாதம் நடந்த தேர்தலில் ஆட்சியைப் பிடித்தது.

தனது வாக்குறுதிப்படி, கடன் வசூலிக்கும் மும்மூர்த்திகளின் நிபந்தனைகளை மறுபரிசீலனை செய்யக் கோருவதாக அறிவித்தது, பிரதமர் அலெக்சிஸ் சிப்ராஸ் தலைமையிலான சிரிசா அரசு. அதைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. கடன் கொடுத்த நிறுவனங்கள், ஐரோப்பிய வங்கிகள், உலக நிதி நிறுவனங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்கள், கடன்வாங்கினால் கட்டுவதுதான் சரி என்று கண்டிப்புக் காட்டினர். தாங்கள் சொல்லும் நிபந்தனைகளே ஏற்றே தீர வேண்டும் என்று கட்டாயப்படுத்தினர்.

பார்சிலோனா, மாட்ரிட், லிஸ்பன், டப்ளின், பாரிஸ், பிரஸ்ஸல்ஸ் போன்ற நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கிரீஸ் மக்களுக்கு ஆதரவாக பேரணியாகச் சென்றனர். ஜூலை 3ஆம் திகதி ஏதென்சின் சின்டாக்மா சதுக்கத்தில் இல்லை தரப்பு ஆர்ப்பாட்டத்தில் 1.5 இலட்சம் மக்கள் கலந்துகொண்டனர்.

ஆளும் வர்க்கங்களின் அச்சுறுத்தல்களுக்கும், பயமூட்டும் பிரசாரங்களுக்கும் மத்தியில் 61வீதம் மக்கள் ஐரோப்பிய கடன் நிறுவனங்களின் நிபந்தனைகளை நிராகரித்திருக்கின்றனர். 18 முதல் 25 வயது இளைஞர்களில் 85வீதம் ஏகாதிபத்திய நிதிக்கொடுங்கோன்மையை எதிர்த்து வாக்களித்திருக்கின்றனர்.

ஆனால், மீண்டும் கடன்கொடுத்த நிறுவனங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தப்போவதைத் தவிர மாற்று திட்டம் எதுவும் இல்லாத போலி இடதுசாரி கூட்டணிதான் சிரிசா என்பது நிரூபணமாகியிருக்கிறது.

பன்னாட்டு முதலீட்டாளர்கள் தமது ஐரோப்பிய கடன்பத்திரங்களை விற்க ஆரம்பித்தால் யூரோவின் மதிப்பு பெருமளவு சரியும். வடக்கு ஆபிரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்குள் (மத்திய தரைக்கடல் வழியாக) நுழையும் அகதிகளை கிரீஸ் நாட்டின் உதவியின்றி ஐரோப்பா கையாளமுடியாது.

தொகுப்பு
வேணுகிருஸ்ணா


எப்படியானாலும், தீரமுடியாத, நிரந்தரமான, ஆழமான நெருக்கடியில் சிக்கியிருக்கும் உலக முதலாளித்துவ பொருளாதாரக் கட்டமைப்பின் பலவீனமான கண்ணிகளில் ஒன்றான கிரேக்க நாட்டில் ஏகாதிபத்திய நிதிக் கட்டமைப்பு நொறுங்கிக் கொண்டிருக்கிறது. அதை தக்க வைத்துக்கொள்ளும் ஆளும் வர்க்கங்களின் முயற்சிகள் உழைக்கும் மக்களின் எதிர்ப்புக்கு முன்பு திணறிக் கொண்டிருக்கின்றன. பெரும்பான்மை மக்களுக்கு எதிரான இந்த முதலாளித்துவ கட்டமைப்பை தூக்கி எறிந்து மக்களுக்கான அமைப்பை கட்டியமைப்பதற்கான போராட்டத்தில் கிரீஸ் மக்களுக்கு துணை நிற்க வேண்டியது உலகெங்கிலும் உள்ள உழைக்கும் மக்களின் கடமை.






ஆசிரியர்:
8 மாம்பழங்களை...
6 பேருக்கு எப்படி
சரியாக பிரித்து
கொடுப்பது...?

மாணவர்:
ஜூஸ் போட்டு..
6 டம்ளர்களில்
சரியான அளவாக
ஊற்றி கொடுக்கலாம்..!



இப்பகுதிக்கு சிறுவர்களிடம், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## வாரம் ஒரு திருக்குறள்




### கள்ளாமை

**களவென்னும் காரறி வாண்மை
அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண்ட இல்.**

களவு என்பதற்கு காரணமான மயங்கிய அறிவு உடையவரா யிருத்தல், அளவு அறிந்து வாழ்தலாகிய ஆற்றலை விரும்பினவரிடத்தில் இல்லை.


குறள் 287

# மின் விசிறிகள்!!!



வௌவாலின் சிறகுகளைப் பார்த்து வியந்த ஜப்பானியர்கள் கி.பி.8ஆம் நூற்றாண்டில் அத்தகைய விசிறிகளை உருவாக்கினர். பெண்கள் அந்த விசிறியை அணிகலனாகவும் பயன்படுத்தினர். வண்ணம்பூசி அவற்றை அழகுபடுத்தினர். சீனர்களும் அத்தகைய விசிறிகளைப் பின்னர் உருவாக்கினர். பின்பு போர்த்துக்கல் வழியாக ஐரோப்பிய நாடுகளுக்கும் இத்தகைய விசிறிகள் பரவின.

மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் ஸ்கைலர் வீலர் (Schuyler Wheeler) என்பவர் 1886ஆம் ஆண்டு நியூயோர்க் நகரில் மின்விசிறியைக் கண்டுபிடித்தார். இதன் தொழில்நுட்பம் மிகவிரைவாகப் பிறநாடுகளுக்கும் பரவி மக்களிடம் பெரும் புகழ்பெற்றது. இன்று இந்தியா உட்படப் பல நாடுகளிலும் தொங்கும் மின்விசிறி மற்றும் மேசை மின்விசிறி ஆகிய இரண்டும் பெருமளவுக்குப் பயன்பாட்டில் உள்ளன.



# "விளையும் பயிரின் முளை!"

வீதி வழியாகப் பார்வையைச் செலுத்தி வருகையில் சோமசுந்தரத்தின் சிநேகிதர் இடையில் சந்தித்து, வீதி மருங்கில் நின்று இருவருமே அளவளாவத் தொடங்கி விட்டனர்.

இருவரது கதைகளைக் காது கொடுத்துக் கேட்டுக்கொண்டே அவ்வீதி ஓரத்தை நோட்டமிட்டான் சேகரன்.

என்ன ஆச்சரியம்!! அவனுடன் படிக்கும் சந்திரன் அவ்வீதி மருங்குகளில் இருந்த சப்பாத்துப் பொலிஸ் செய்யும் கூட்டத்தில் ஒருவனாக உட்கார்ந்திருந் ததைக் கண்டான்.

சந்திரன் என்ன இதிலை...

கதைத்து நின்ற தந்தையையும் சிநேகிதரையும் விட்டு, வீதியின் மறுபக்கம் உந்தப்பட்டு வந்துசேர்ந்த சேகரனின் உதடுகளில் இருந்து வார்த்தைகள் தெறித்து விழுந்தன.

"யார்... சேகரனா.. ஒண்ணும் இல்லைத் தெரியாதே... இஞ்சால ஒருக்கா வாரும்"

தனியாகச் சேகரனை அழைத்துப்போன சந்திரன், குடும்பப் பொருளாதார நிலையை கூறி தந்தையின் வருமானத்தில் கல்வியைத் தொடர முடியாததால் இவ்விதம் உழைக்கும் வருமானத்தாலேயே படிப்பைத் தொடரமுடிகிற தென்றும் ஒரே மூச்சில் கூறிவைத்தான்.

இவ்விதம் கல்வியைக் கற்கும் தன்நிலையை வேறொவருக்கும் கூறவேண்டாமென்று இரந்து நின்ற சந்திரனைக் கண்கொள்ளச் சேகரனால் ஆச்சரியம் தாளவில்லை.


"பைத்தியம்.. பைத்தியம் அப்படிக் கூறிவிடுவேனா... கூறவில்லை சரிதானே" இருவரும் சந்தித்துக் கதைத்த பின்பு சந்திரனிடம், சேகரன் விடைபெற்று வீதியின் மறுபக்கம் வந்தடையவும் தந்தை சிநேகிதரிடம் உரையாடலை முடித்து, சேகரனைப் பார்க்கவும் சரியாக அமைந்தது.



பரமண்ணா

(தொடரும்)

# புயல்களுக்கு பெயர்வைக்கும் முறை எப்படி வந்தது?



1970இல் ஜெனிவாவில் நடைபெற்ற மாநாட்டின்போது, பசிபிக் பெருங்கடலில் உருவாகும் புயல்களுக்கு பெயர் வைக்கும்படி அந்த பகுதியை சேர்ந்த நாடுகளை உலக வானிலை அமைப்பு முதல் முறையாக கேட்டுக்கொண்டது.

அதேபோல், வடக்கு இந்தியப் பெருங்கடலில் உருவாகும் புயல்களுக்கு பெயர் வைக்கும்படி, 2000இல் நடைபெற்ற உலக வானிலை அமைப்பு, ஆசிய, பசிபிக் நாடுகளுக்கான ஐக்கிய சபை பொருளாதார மற்றும் சமூக ஆணைய த்தின் மாநாட்டில் இந்த பகுதியில் அமைந்துள்ள நாடுகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

அதன்படி, வடக்கு இந்திய பெருங் கடல் பகுதியில் அமைந்துள்ள இந்தியா, வங்கதேசம், மாலைதீவு, மியன்மார், ஓமன், பாகிஸ்தான், இலங்கை, தாய்லாந்து ஆகிய 8 நாடுகளும் சேர்ந்து 64 பெயர்களை கொண்ட பட்டியலை தயாரித்தன. வடக்கு இந்திய பெருங்கடலில் உருவாகும்.

புயல்களுக்கு இந்த பட்டியலில் இருந்து ஒவ்வொரு பெயராக வைக்கப்பட்டு வருகின்றன.

ஒரு முறை ஒரு நாடு தேர்வு செய்த பெயர்வைக்கப்பட்டால், அடுத்த முறை வேறு நாடு தேர்வுசெய்த பெயரில் புயல் அழைக்கப்படுகிறது. இதுபோல், 8 நாடுகளின் பெயர்களும் சுழற்சி முறையில் வைக்கப்படுகின்றன. அதன்படி, அண்மையில் கரை கடந்த புயலுக்கு பாகிஸ்தானின் லைலா பெயர் வைக்கப்பட்டது. இதற்கு முன்பாக, ஓமன் பரிந்துரை செய்த பெயரான வார்டு" வைக்கப்பட்டது. புயல் உருவாகி கரை கடந்ததும், பட்டியலில் இருந்து அந்த பெயர் நீக்கப்படுகிறது. பிறகு, அந்த நாட்டின் சார்பில் புதிய பெயர் பரிந்துரை செய்யப்படுகிறது.

கடைசியாக, 8 நாடுகளின் சார்பில் புயல் களுக்கு வைக்கப்பட்ட பெயர்களின் விவரம் வருமாறு:

நர்கீஸ் (பாகிஸ்தான்),
ரஷமி (இலங்கை),
காய்ரூமுக் (தாய்லாந்து),
நிஷா (வங்கதேசம்),
பிஜ்லி (இந்தியா),
அய்லா (மாலைதீவு),
பியான் (மியன்மார்),
வார்டு (ஓமன்)



சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் வண்ணம்

**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 03.08.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 110G**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 110G**

எம்.மதிவதனி,
திருநாவற்குளம், வவுனியா.

பரிசுக்குரியவர்: 1104

பாராட்டுக்குரியவர்கள்

01. சி.அக்சயா, பிரதான வீதி, புத்தளம்.
02. மா.தாமிரன், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு.
03. எம்.நந்திதா, ஜின்னாநகர், திருகோணமலை.
04. கி.மாளவிகா, புன்னாலைக்கட்டுவன், யாழ்ப்பாணம்.
05. ற.லொசியா, பசல்ஸ் லேன், வெள்ளவத்தை.
06. த.பவித்திரன், சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.
07. ஆர்.இமயவண்ணன், பதுளை.
08. நு.இஸாரா, பிரதான வீதி, சாவகச்சேரி.

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 100




"இனி அந்த முட்டாள்களை அனுப்பவேண்டாம். பாதுகாப்பை அதிகப்படுத்துவதாக கூறி இருக்கிறேன். பாதுகாப்பு பிரிவு போல் உனது ஆட்களை சீருடை அணிவித்து அனுப்பிவை என்று உத்தரவிட்டான்.

பாதுகாப்பு என்ற போர்வையில் வெறும் வலை ஒன்றே விரித்துவிட்டான் அமீன் என்று சியம்பா உணர்ந்துகொண்டார்.

கலாசார அமைச்சுக்குள் அலுவல் ஒன்றின் நிமித்தமாக இராணுவ அதிகாரி ஒருவர் வந்திருந்தார். அவர்தான் முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பிரிவுக்கு பொறுப்பானவர். சியம்பாவுக்கு நன்கு அறிமுகமானவர்.

உங்களுக்கு நான் நன்றி கூறவேண்டும் என்றார் சியம்பா. எதற்கு என்று புருவம் உயர்த்தினார் அதிகாரி.

என் பாதுகாப்புக்கு உங்கள் ஆட்களை அனுப்பியதற்கு என்ற சியம்பாவை ஆச்சரியமாக நோக்கிய அதிகாரி நான் யாரையும் அனுப்பி வைக்கவில்லையே. தவிரவும் உங்களுக்கு பாதுகாப்பு கொடுக்குமாறு எவரும் எனக்கு உத்தரவிடவில்லையே என்றார்.

சியம்பாவுக்கு தன் சந்தேகம் சரியானது என்று தெரிந்துவிட்டது.

ஓ அப்படியா, சரி சரி ஜனாதிபதி தனது பாதுகாப்பு பிரிவில் இருந்து ஆட்களை அனுப்பி இருக்கலாம் என்று சமாளித்தார் சியம்பா.

உண்மை தெரிந்தால் அந்த அதிகாரியும் தன்னை மதிக்கமாட்டார் என்பதால் அந்த சமாளிப்பு.

மறுநாள் சியம்பாவை அமீன் அழைத்திருந்தான். வெகு சரளமாக அவருடன் உரையாடினான்.

வாருங்கள் உலாவிவிட்டு வரலாம் என்று சியம்பாவை அழைத்துக் கொண்டு ஜனாதிபதி மாளிக்கைக்குள் இருந்த பூங்காவிற்கு சென்றான்.

அங்கு லாண்ட் ரோவர் வண்டி ஒன்று நின்றது. புத்தம் புதிய வண்டி அது. அதனை சியம்பாவிடம் காண்பித்தான். நேற்றுத்தான் வாங்கினேன் என்றான்.

லாண்ட் ரோவரில் ஒலிபரப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன. அதற்கான விளக்கத்தையும் அமீனே கூறினான். பார்த்தீர்களா ஒரு வானொலி நிலையமே இங்கு இருக்கிறது. உகண்டா வானொலி நிலையத்தை எதிரிகள் சுற்றிவளைத்தால்கூட நான் இங்கிருந்தே நாட்டு மக்களுக்கு உரையாற்றுவேன். அத்தனை வசதி இதில் இருக்கிறது என்று கூறினான்.

பின்னர் சியம்பாவை அழைத்துச் சென்று புதிதாக அமைக்கப்பட்டுள்ள நீச்சல் தடாகத்தை காண்பித்தான். தினமும் நீச்சலடிப்பது உடல் நலத்துக்கு ஏற்றது என்று சியம்பாவின் தோளில் பலமாக தட்டினான்.

போயிங் விமானத்தை வாங்குவதையே அநியாயமான செலவீனம் என்று அபிப்பிராயம்கூறிய தன்னிடமே நீச்சல் தடாகத்தை அமீனும் காண்பிக்கிறான். லாண்ட் ரோவர் வாகனத்தை காண்பித்தான். இதற்கு என்ன அர்த்தம் என்று யோசித்தார் சியம்பா.

தனக்கு யாரும் புத்திசொல்லக் கூடாது. தான் நினைத்ததை செய்து முடிப்பேன் என்று காண்பிக்கும் வீம்புத்தனம்தான் இதுவெல்லாம் என்று நினைத்தார்.

அவரது நினைப்பை மெய்யாக்குவது போல என்ன இதெல்லாம் வீண் ஆடம்பரமாகத் தெரிகின்றதா என்று கேட்டான்.

அப்படியல்ல. சில வசதிகள் தேவைதான் என்றார் சியம்பா. அதற்கு அமீன் சிரித்த சிரிப்புக்கு அர்த்தம் கேலியா, திருப்தியா என்று சியம்பாவால் இனம் காண முடியவில்லை.

கம்பாலாவில் உள்ள சர்வதேச ஹொட்டலில் பிரத்தியேகமான மசாஜ் கிளினிக் ஒன்றை அமீன் அமைத்திருந்தான்.

வாரம் ஒரு தடவையாவது உடம்பை மசாஜ் பண்ணவேண்டும். அதனால் உடல் மட்டுமல்ல உள்ளமும் உற்சாகம் பெறும். நீரும் அங்கு செல்லலாம் பதினாறில் இருந்த முப்பது வயதுவரை அழகிகள் விதம் விதமாக, ரகம் ரகமாக இருக்கிறார்கள். உடம்பெங்கும் அவர்கள் கைகளை விளையாடுவதே தனிச்சுகம்தான் என்று விசமமாகப் புன்னகைத்தான்.

தான் அபிப்பிராயம் கூறியது எத்தனை பெரிய மடத்தனம் என்று நொந்துகொண்டார் சியம்பா.

சில நாட்களின் பின்னர் வானொலியைத் திருப்பிய சியம்பாவுக்கு மற்றுமொரு அதிர்ச்சி காத்திருந்தது.

வானொலியில் அமீனின் செய்தியை வாசித்தார்கள்.

நாட்டின் பொருளாதார நிலை வீழ்ச்சியடைந்துள்ளது. அதனால் மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். சிக்கனமான வாழ்க்கை வாழ்வதற்கு பழகிக்கொள்ள வேண்டும். நாட்டுநலனுக்கு இவை மிக முக்கியமாகும் என்று அமீன் தெரிவித்ததாக வானொலி கூறியது.

இக்காலகட்டத்தில் அமீன் எதிர்பாராத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

(தொடரும்..)

---

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

## குறுக்கெழுத்துப் போட்டி - 635

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | ■ | 9 | 10 | 11 | 12 |
| 13 | ■ | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | ■ | 30 |
| 31 | ■ | 33 | 34 | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 633 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மா | 2 ன் | 3 க | 4 ரா | 5 த் | 6 தே |
| 7 சா | 8 க | 9 ம் | ■ | 11 த | 12 வ |
| 13 த் | 14 மு | 15 ப | 16 ல் | 17 ர | 18 த |
| 19 து | 20 க | 21 த் | ■ | 23 சி | 24 த் |
| 25 வ | 26 ங் | 27 த | 28 கு | 29 ல் | 30 த |
| 31 ன் | 32 சி | 33 ம் | 34 ன | ■ | 36 ன் |

**இடமிருந்து வலம்**

01. அட்டகணிதத்தில் எண் கூட்டல் இப்படி கூறப்படுகின்றது.
09. குழி, நீர்க்குண்டு. (குழம்பியுள்ளது)
15. சிவிகை. (மூன்றாம் எழுத்து விடுபட்டு குழம்பியுள்ளது)
19. ஏழு லோகங்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
25. இலட்சம் கோடி ; ஒரு நாடகத் தமிழ்நூல். (குழம்பியுள்ளது)
33. அரிதாள்; கதிரறுத்தாள். (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. அழகு ; ரூபலாவண்ணியம்.
03. ஒரு பிரபந்தம் ; ஒரு கணித நூல். (குழம்பியுள்ளது)
04. ஆசைப்பெருக்கம். (குழம்பியுள்ளது)
05. பதனழிவு. (குழம்பியுள்ளது)
06. இரண்டல்லானது ; ஒன்றானது. (திரும்பியுள்ளது)
20. நாங்கள்.

**போட்டி விதிகள்:**


இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **03.08.2015** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - **635**
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.633 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**


த.தமிழ்ச்செல்வி,
இல. 69, வன்னேரிக்குளம், கிளிநொச்சி

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. அ.மதுரநாத், E.S. பெர்னான்டோ மாவத்தை, கொழும்பு - 06
02. அ.மரின்குமார், மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
03. ஆர்.ஜோசெப், கோவில் வீதி, வவுனியா.
04. எம்.அஸ்ரப், வாகரை, மட்டக்களப்பு.
05. கு.மயூரதி, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
06. எம்.எஸ். இயாஸ், பிரதான வீதி, புத்தளம்.
07. இ.சங்கவி, எருக்கலம்பிட்டி, மன்னார்.
08. ச.சங்கரன், ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு.
09. எ.கம்ஸா, சங்கத்தானை, சாவகச்சேரி
10. மு.விதுசன், அராலி தெற்கு, அராலி.







# மலரும் நினைவுகள்



எஸ்.பி.பி பாடின நிறம் மாறாத பூக்கள் படத்தில் "முதல் முதலாக காதல் டூயட் பாட வந்தேனே!" பாட்டை கேட்டிருப்போம். ராதிகாவும் சுதாகரும் தோன்றும் அந்தப் பாட்டு 70 களின் சிறந்த டூயட்டுகளில் கட்டாயம் இடம்பெறும். அந்தப் பாட்டுக்கு பின்னால் ஒரு சுவையான கதை.

எஸ்.பி.பியும் பாரதிராஜாவும் சினிமாவுக்கு வந்து பிரபலமாவதற்கு முன்னால் ஒரு ஃப்ளாஷ்பேக். இரண்டுபேரும் ஒரே அறையில் தங்கி சினிமாவுக்கு முயற்சி செய்திருக்கிறார்கள். ஒரே சட்டையை மாற்றி மாற்றி போட்டுக்கொள்ளும் அளவுக்கு இரண்டுபேரும் நெருக்கம். எஸ்.பி.பி ஒரு பாடகர் அந்தஸ்தை பெற்று பிரபலமான சில வருடங்களுக்குப் பிறகே பாரதிராஜாவுக்கு பதினாறு வயதினிலே இயக்கும் வாய்ப்பு கிடைத்தது. பட்த்தின் முதல் பாட்டு ரெக்கார்டிங். பாட்டு "ஆட்டுக்குட்டி முட்டையிட்டு..." இளையராஜா அருமையாக இசையமைத்து ஒரு பாடகரை வைத்து ட்ராக் பாடி பாடல் எஸ்.பி.பி வருகைக்காக வெயிட்டிங். எஸ்.பி.பி வந்தார்.

ட்ராக்கில் பாடலைக் கேட்டார். கேட்டபின் "இந்தக் குரலே நல்லாத்தான் இருக்கு! இதை இப்படியே வச்சிடுங்க! இதைவிட நான் இந்தப் பாட்டை சிறப்பா பாடமுடியாது!" என்று சொல்லிவிட்டார். பாரதிராஜா எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. பாடலை ட்ராக் பாடிய பாடகர் வாசு என்ற மலேசியா வாசுதேவன். மலேசியா வாசுதேவன் அந்தப் பாடல்மூலம் அறிமுகமாகி தமிழ் இசையுலகில் ஒரு நிரந்தர இடத்தைப் பிடித்தார். அந்தவகையில் நல்லது நடந்தாலும் வேறொருவகையில் இது பிரச்சினையைக் கிளப்பியது. இயல்பிலேயே கொஞ்சம் ரோஷக்காரரான பாரதிராஜா இதை தனக்கு நேர்ந்த ஒரு அவமானமாகவே எடுத்துக் கொண்டார்.

அதனால் அவர் எஸ்.பி.பியை இனி தன் எந்தப் படத்திலும் பாடவைப்பதில்லை என்று ஒரு முடிவெடுத்தார். அதை செயலும்படுத்தினார். பதினாறு வயதினிலே, கிழக்கே போகும் ரயில் என்று தன் ஆரம்ப படங்களில் எஸ்.பி.பியை பயன்படுத்தவே இல்லை.

அப்புறம் இரு நண்பர்களும் மனம்விட்டுப் பேசியபிறகு எஸ்.பி.பி சக கலைஞனை மதிக்கும் விதத்திலேயே அந்தப் பாட்டை பாடவில்லை என்ற உண்மை பாரதிராஜாவுக்கு புரிந்தது! இரு நண்பர்களும் நிறம் மாறாத பூக்களில் முதல் முறையாக ஒன்று சேர்ந்தார்கள். பாடல் ஆசிரியரும் குறும்பாய் "முதல் முதலாக காதல் டூயட் பாட வந்தேனே!" என்று நிலைமையைப் புரிந்து எழுத அதை எஸ்.பி.பி பாடினார். பின்னர் "பொன்மாலைப் பொழுது" முதல் "மானூத்து மந்தையில்" வரை எத்தனையோ பாரதிராஜா படங்களை எஸ்.பி.பி.யின் குரல் அலங்கரித்தது!



# விஷ்ணு ஹேப்பி மச்சான்

"இவர், எம்.பி.ஏ-வில் எனக்கு சீனியர் அப்ப நாங்க ஜஸ்ட் ஃப்ரெண்ட்ஸ் மட்டும்தான். திடீர்னு நடிக்க ட்ரை பண்ணிட்டிருக்கேன்"னு சொன்னார். எனக்குச் சிரிப்பு வந்தது. ஏன்னா, அப்ப விஷ்ணு வெயிட் பார்ட்டி. நல்லா கொழுக்மொழுக்னு குண்டா இருப்பார். அதுவும்போக் ரொம்ப வெட்கப்படுவார் தயக்கம், கூச்சம். "இப்படி எல்லாம் இருந்துட்டு எப்படி சினிமாவுல நடிக்கமுடியும்?"னு நான் அதை சீ எடுத்துக்கலை. ஆனா, சொன்னமாதிரியே சினிமாவுக்கு வந்துட்டார்."

காதல் கணவரின் வாழ்க்கை கிராஃபில் சஸ்பென்ஸ் கட் செய்கிறார் மனைவி ரஜினி. உற்சாக பூரிப்பாகச் சிரிக்கிறார் விஷ்ணு விஷால். முண்டாசுப்பட்டி, ஜீவா, இன்று நேற்று நாளை என ஹே மகிழ்ச்சி.

"ஹேய்... கதையை முடிப்பா, நான் குண்டா இருக்கேன்னு சொல்லி நிறுத்திட்ட" என வி சொல்ல... தொடர்கிறார் ரஜினி. "அப்படியே பேசிப் பேசிப் பழகினதுல ஜஸ்ட் ஃப்ரெண்ட்ல கொஞ்சம் நெருக்கமாகி பாய் ஃப்ரெண்ட் ஆனார் என மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றார்.

# தெலுங்கு இயக்குநர்களுடன் இணையும் சூர்யா?

மாஸ் படத்தையடுத்து தொடர்ந்து 24 படத்தில் பிசியாக நடித்துவருகிறார் சூர்யா. இந்த படத்தில் நாயகி சமந்தா. தெலுங்கில் நாகார்ஜுன், நாக சைதன்யா, சமந்தா, ஸ்ரேயா ஆகியோர் நடிப்பில் வெளியாகி ஹிட்டடித்த படம் மனம். இந்த படத்தின் இயக்குநர்தான் விக்ரம் குமார் தான் சூர்யாவின் 24 படத்தை இயக்கிவருகிறார். இந்த படத்தின் நிறைவையடுத்து ஹரி இயக்கத்தில் சிங்கம் 3 படத்தில் நடிக்க இருக்கும் சூர்யா அதைத் தொடர்ந்து சதுரங்க வேட்டை இயக்குநர் வினோத் இயக்கத்தில் அடுத்த படத்தில் இணைய உள்ளது குறிப்பிடத்தக்கது. இது தவிர்த்து இப்போது த்ரிவிக்ரமுடன் புதிதாக ஒரு படத்தில் நடிக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

த்ரிவிக்ரம் தெலுங்கில் பவன் கல்யாண் நடிப்பில் வெளியான அத்தாரிண்டிக்கி தாரெடி மற்றும் அல்லு அர்ஜுனின் S/O சத்யமூர்த்தி படங்களை இயக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் சூர்யாவின் படங்களுக்கு தெலுங்கிலும் வரவேற்புகள் அதிகம் இருப்பதே இதற்கு காரணமாக சொல்லப்படுகிறது.

# விஜய்யின் முடிவு

இளைய தளபதி விஜய் மற்றும் தல அஜித் தான் தமிழ் சினிமாவின் சூப்பர் ஸ்டாருக்கான ரேஸில் முதலிடத்தில் இருப்பவர்கள்.

இந்நிலையில் அஜித் தற்போதெல்லாம் தன் வயதை காட்டிக்கொள்ளாமல் எதார்த்தமான தோற்றத்திலேயேதான் நடிக்கின்றார்.

ஆனால், விஜய் இன்றும் இளமையாகத்தான் தன் படங்களில் தோன்றுகிறார். முதன் முறையாக அட்லீ படத்தில் அஜித்தை போலவே விஜய்யும் ஒரு அதிரடி முடிவை எடுத்துள்ளார். அது என்னவென்றால் இப்படத்தில் எந்தவிதமான ஆடம்பரமும் இல்லாமல் தன் நிஜ வயதான 40 வயதிலேயே படத்தில் தோன்றவுள்ளதாக கூறப்படுகின்றது.

# பேய்க்கதையில் நடிக்... சந்தான...

சந்தானம் கதாநாயகனாக நடித்த இனிமேஇப்படித்த ஓரளவு வரவேற்பையும் பெற்றது. அதைத் தொடர்ந்த இயக்கத்தில் ஆர்யா நாயகனாக நடிக்கும் வாசுவும் ச படிச்சவங்க படத்தின் வேலைகளில் இருந்தார் என்று

அதற்கடுத்து அவர் நடிக்கும் படம் பற்றி எந்தத் யாரும் அவரைத் தேடிவராவிட்டாலும் அவரே தயாரி தெம்பாக இருந்தும் அடுத்த படம் பற்றி அறிவிப்பு அவரை வைத்துப் படமெடுக்க யாரும் தயாராக இல் என்றுகேட்டால், இனிமே இப்படித்தான் படத்துக்குப் கதாநாயகனாக நடிக்கும் படத்தை எடுக்கவும் சிலர் இருந்தனராம். நல்ல கதைக்காக அவர் காத்திருந்தா இப்போது அடுத்த படத்தைப் பற்றி முடிவுசெய்துவிட்

லொள்ளுசபா புகழ் ராம்பாலா இயக்கவிருக்கும் அவர் நடிக்கிறார், அந்தப் படத்தை தேனான்டாள் தயாரிக்கவிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இன்றைக் தயாரிப்பு நிறுவனமாக இருக்கும். அவர்கள் தயா படவெளியீடு சிறப்பாக இருக்கும் என்பதால் கொண்டுள்ளதுடன் அந்தப் படத்தின் க பேய்க்கதை என்பதுதான் விசேஷம என்று சொல்கிறார்கள்.





# மச்சான் !

...ண்ட்ஸ் மட்டும்தான். திடீர்னு "சினிமாவுல ...வந்தது. ஏன்னா, அப்ப விஷ்ணு செம ...ம்போக் ரொம்ப வெட்கப்படுவார். நிறையத் ...க்கமுடியும்?"னு நான் அதை சீரியஸாவே

...ார் மனைவி ரஜினி. உற்சாகத்தில் ...ன்று நேற்று நாளை என ஹேட்ரிக் ஹிட்

...சொல்லி நிறுத்திட்ட" என விஷ்ணு ...கினதுல ஜஸ்ட் ஃப்ரெண்ட்ல இருந்து ...சியுடன் தெரிவிக்கின்றார்.

# ...தயில் நடிக்கிறார் ...தானம்

...யகனாக நடித்த இனிமேஇப்படித்தான் படம் வெளியாகி ...ம் பெற்றது. அதைத் தொடர்ந்து அவர், ராஜேஷ் ...நாயகனாக நடிக்கும் வாசுவும் சரவணனும் ஒண்ணா ... வேலைகளில் இருந்தார் என்று சொல்லப்பட்டது. ...ர் நடிக்கும் படம் பற்றி எந்தத் தகவலும் இல்லை. ...டிவராவிட்டாலும் அவரே தயாரிக்குமளவுக்குத் ...அடுத்த படம் பற்றி அறிவிப்பு எதுவும் இல்லை. ...டமெடுக்க யாரும் தயாராக இல்லையா? ...மே இப்படித்தான் படத்துக்குப் பிறகு அவர் ...கும் படத்தை எடுக்கவும் சிலர் தயாராக ...கதைக்காக அவர் காத்திருந்தாராம். ...த்தைப் பற்றி முடிவுசெய்துவிட்டாராம். ...ழ் ராம்பாலா இயக்கவிருக்கும் படத்தில் ...அந்தப் படத்தை தேனாண்டாள் பிலிம்ஸ் ...ச் சொல்லப்படுகிறது. இன்றைக்குப் பெரிய ...மாக இருக்கும். அவர்கள் தயாரித்தால் ... சிறப்பாக இருக்கும் என்பதால் ஒப்புக் ...ள்ளதுடன் அந்தப் படத்தின் கதை ...ப்க்கதை என்பதுதான் விசேஷமான தகவல் ... என்று சொல்கிறார்கள்.




# குழப்பத்தில் விக்ரம்

விக்ரம் ஐ படத்துக்கு பிறகு அவர் படங்களை மிகக்கவனமாக தேர்வுசெய்து வருகிறார். கிட்டத்தட்ட 3 வருடமாக ஐ படத்துக்காக தன் சினிமா வாழ்க்கையை அர்ப்பணித்த விக்ரம் அதன்பிறகு விஜய் மில்டனுடன் 10 எண்றதுக்குள்ள படத்தில் நடித்துள்ளார். இப்படம் பட்ஜெட் பிரச்சனை காரணமாக தள்ளிப்போய் கொண்டிருக்கிறது. இப்படத்தின் படப்பிடிப்புகள்கூட இன்னும் முழுமையாக முடியவில்லை. இந்நிலையில் அரிமா நம்பி படத்தை எடுத்த அனந்த் ஷங்கர் சொன்ன மர்ம மனிதன் கதை பிடித்து போக அதில் நடிக்க ஒப்புக்கொண்டார். முதலில் இப்படத்தை கலைப்புலி தாணு தயாரிக்க இருந்தது. இடையில் சில காரணத்தால் ஐங்கரன் நிறுவனத்துக்கு கைமாறியது. இதனால் படம் தொடங்க முடியாமல் கலைப்புலியால் சில பிரச்சினைகளில் விக்ரம் மாட்டிகொண்டார். அதேவேளையில் ராஜதந்திரம் படத்தை எடுத்த அமித் சொன்ன கதையும் பிடித்துப்போக அதை வெகுகாலத்துக்கு முன் கரிகாலன் படத்துக்கு தன்னுடைய கால்ஷீட் கொடுத்திருந்த Silverline Factory நிறுவனத்திடம் இப்படத்தை கொடுத்துவிடலாம் என்று இருந்தார்.

ஆனால் பிரச்சினையே அங்குதான், அமித் இந்த படத்துக்காக சொன்ன பட்ஜெட் ரூ. 19 கோடி. ஆனால் இந்நிறுவனமோ எங்களால் ரூ. 9 கோடிக்குத்தான் பண்ணமுடியும். அதுவும் எங்களுக்கு உடனே விக்ரம் நடித்து தரவேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர். என்ன செய்வ தென்று தெரியாமல் சமீபத்தில் முண்டாசுபட்டி படத்தை எடுத்த ராம்மிடம் ஒரு சிறு பட்ஜெட் கதை கேட்டுள்ளார் விக்ரம். இப்படத்தை இந்த நிறுவனத்துக்கு கைமாற்றிவிடலாம் எனற திட்டத்தில் உள்ளாராம்.





## பாபிசிம்ஹாவைப் பத்தி பேசுறதே வேணாம்னு நினைக்கிறேன்

## ரேஷ்மி மேனன் சிறப்புப் பேட்டி!

இனிது இனிது படம்மூலம் சினிமாவில் காலடி எடுத்து வைத்தவர் ரேஷ்மிமேனன். தொடர்ச்சியாக தேநீர் விடுதி, பர்மா, படங்கள்மூலம் தமிழுக்குப் பரிச்சயம். தமிழில் ஹிட் படத்தில் நடிக்கவில்லை என்றாலும் அழகிய முகம், பக்கத்து வீட்டுப்பெண் என்பதைவிட பக்கத்து வீட்டில் இப்படி ஒரு பெண் இல்லையே என்ற ஏக்கம் கண்டிப்பாக ரேஷ்மி மேனனைக் காணும் இளசுகளுக்குத் தோன்றும்.

பேஸிக் கேரளா ஆனா வளர்ந்தது, படிச்சது எல்லாமே சென்னைதான், கலகலவென ஆரம்பித்தார் ரேஷ்மி மேனன்.

**எப்படி சினிமாவுக்குள்ள வந்தீங்க?**

மீடியாவுல ஆர்வம் அதிகம். வீட்லயும் நல்ல சப்போர்ட். உனக்கு என்ன சரின்னு படுதோ அதையே செய்யுன்னு சொன்னாங்க. பிரகாஷ்ராஜ் சாரோட டூயட் மூவீஸ் மேலயும் நல்ல அபிப்பிராயம். என் மேல செம நம்பிக்கை. நான் கரெக்டாதான் முடிவெடுப்பேனு. அதுனால முதல் படம் இனிது இனிது.

**நிறையப் படங்கள்ல நடிக்கிறீங்களே? எந்த படத்தோட கேரக்டர் உங்களுக்கு ரொம்ப புடிச்சிருக்கு?**

நட்பதிகாரம் படத்தோட கேரக்டர் ரொம்ப நல்ல கேரக்டர். கனமான ரோலும்கூட.

**கிசு கிசு பத்தி?**

அது வரும் போகும். அதை ஏன் டிஸ்டர்ப் பண்ணிகிட்டு. பேசுவாங்க அப்புறம் மறந்துடுவாங்க.

**கொஞ்சம் டெரர் கேள்வி... பாபி சிம்ஹா?**

அதுக்கு இப்போதைக்கு எந்தப் பதிலும் இல்ல. இப்போது எங்களுக்குப் படம்தான் முக்கியம். இன்னும் ரெண்டு படங்கள் வேற இருக்கு. உறுமீன் ரெடியாயிடுச்சு. இது மட்டும்தான் எனக்கு ஒரே சிந்தனை.

**அப்போ நீங்க மறுப்பு குடுக்கலாமே?**

இதப் பத்தி பேசுறதே வேணாம்னு நினைக்கிறேன். திரும்ப ஒரு செய்தியாகும் எதுக்கு. அப்படியே போகட்டும் என்ன வருதோ வரட்டும். நாளைக்கே வேற நியூஸ் வந்தா இத மறந்துடுவாங்க.

## ஆர்யாவுடன் மோதும் ஜெயம் ரவி

ரோமியோ ஜூலியட் படத்திற்குப் பிறகு ஜெயம் ரவி தற்போது நடித்துள்ள படம் தனி ஒருவன். இப்படத்தை ஜெயம் ரவியின் அண்ணன் ஜெயம் ராஜா இயக்கியிருக்கிறார்.

இதில் ஜெயம் ரவிக்கு ஜோடியாக நயன்தாரா நடித்துள்ளார். முக்கிய கதாபாத்திரத்தில் அரவிந்த் சாமி நடித்திருக்கிறார். ஏ.ஜி.எஸ். நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு ஆதி இசையமைத்துள்ளார்.

விறுவிறுப்பாக நடந்து வந்த இப்படத்தின் படப்பிடிப்புகள் முடிந்து தற்போது இறுதிக்கட்ட பணிகளில் படக்குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர். இப்படத்தின் பாடல்களை ஜூலை 22ம் திகதி வெளியிட உள்ளனர். படத்தை சுதந்திர தினத்தை முன்னிட்டு ஓகஸ்ட் 14ம் திகதி வெளியிட இருக்கின்றனர்.

அன்றைய தினத்தில் ராஜேஷ் இயக்கத்தில் ஆர்யா, தமன்னா, சந்தானம் நடிப்பில் உருவாகியுள்ள "வாசுவும் சரவணனும் ஒண்ணா படிச்சவங்க" படம் வெளியாக இருக்கிறது. இவ்விரு படங்களும் ஒரே நாளில் வெளியாக இருப்பதால் ரசிகர்களிடையே பலத்த எதிர்பார்ப்பு நிலவி வருகிறது.

# தேன் கிண்ணம்

## அம்மா

கருவறையில் எனை சுமந்து
கருணையோடு எனை ஈன்றவளே
கருமை நிறமாக உன் கருவறை
இருந்தாலும்
உன் மனசு மட்டும் வெள்ளையடி தாயே.

விதவை என பலர் தூற்றும்போதும்
அதை மறந்து என்னை ஈன்றவளே
உனது உணர்வுகளை அடக்கி
எனது உணர்விற்கு உருவம் தந்தவளே.

பூமியில் எனை நடமாட வைத்த
பூமனது உடையவளே
எழு பிறப்பிலும் உன் மகளாகும்
வரம் வேண்டுகிறேன்.
உன் அன்பு வாழி.

லோ. ருக்சாயினி.

## அறிவும் தெளிவும்

வருமுன் காத்தல் சிறப்பாகும்
வந்ததும் வருந்துதல் வீணாகும்

குடி யாவும் முழு குடி முழுகும்
புகை யாவும் உடல் நலம் கெடுக்கும்

தீதென கண்டால் தவிர்ந்து விடு
நன்மையின் பால் நீ முந்தி விடு

உலகின் உய்வுக்கு உரமாகு
உருப்படியாக மாற்றமெடு

உண்மை தருமே உயர்வு
உலகம் போற்றும் சிறப்பு

குடித்திடு அறிவென்னும் அருமருந்து
அகற்றிடு மடைமைகள் அருவருப்பு

பேதமை வேண்டாம் தூய்மை பெறு
வாதங்களால் வீண் வம்புகள் எதற்கு

வாழ்க்கையில் மென்மை இலங்கட்டும்
வன்மங்கள் தொலைந்து போகட்டும்

ஈகையும் கருணையும் அருங்குணங்கள்
இறைவா கொடுப்பாய் அனைவருக்கும்!



ஏ.ஆர்.எம். நதார்,
ஜின்னாநகர்.

## நினைவுகள்

காலையிலும் மாலையிலும்
கனவிலும் நீதானடி
காதல் வேண்டுமா, கவிதை வேண்டுமா?
நிச்சயம் சொல்வேன் சத்தியம் செய்வேன்
கவிதைதான் வேண்டும்.
எனக்கு என்
கவிதை நீதானடி.

பா.கிளிங்சன், அளவெட்டி.

## இதயம்

நேற்றுவரை
இல்லாத வலி
என் இதயத்தில்
இன்று உன்னைப்
பார்த்த முதல்
ஏற்பட்டதடி.

த.நாகதேவன், மருதங்கேணி.

## இப்படியும் காதல்

பெண்ணே!
என் விழிகள் சந்தித்த
ஒவ்வொரு
பெண்ணிலும் நீயே
அழகு என்றேன்
தோல்விகள் மட்டும்
தொடரும் என் வாழ்வில்
நீயே வெற்றிப்படி
என்றேன்.

வாடாத ரோஜாவாய் என்
இதயத் தோட்டத்தில்
மலர்ந்தவளே
பலகோடி ஆசைகளுடன்
உன்னோடு மட்டுமே
வாழ நினைத்தேன்.

ஆசைப்பட்ட யாவும்
கற்பனை என்று
என் சிரிப்பை மறந்து
பலர் சிரிக்கச் செய்தவரும்
நீதானடி.

கோடை வெயில்
உடல் நனையும்
வியர்வையால்
கல் உடைப்பவன்
என்றுதானடி
என்னை தூக்கி
எறிந்தாய்.

இப்படியும் ஒரு காதல்
என்று
உள்ளம் நொந்தவனாய்
நீ தந்த காயங்களோடு
உன் நினைவால்
வாழுகிறேன்.



மு. இந்திராணி, விநாயகபுரம்.



# இதைச் செய்யலாமே

**எம்.சி.சி.** உலக கிரிக்கெட் சபையின் முக்கிய அங்கத்தவர்களில் ஒருவர் ரிக்கிபொன்ரிங். ஏனையவர்கள் முன்னாள் இங்கிலாந்து அணித்தலைவர் மைக் பிரெயர்லி, தென். ஆபிரிக்காவின் ஷோண் பொல்லொக் மற்றும் சௌரவ் கங்குலி. இவர்கள் விருப்பம் என்னவென்றால் ஒலிம்பிக் போட்டிகளில் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டிகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதாகும். ஆனால் ஒருசில பிரதான கிரிக்கெட் தேசங்கள், தம் நாட்டுப் போட்டிகளில் பாதிக்கப்படுமோ என்ற அச்சத்தில் இதற்கு அவ்வளவு ஆதரவுதருவதாக இல்லை. ஆனால் ஒலிம்பிக் போட்டிகளில் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டிகள் உட்கொண்டு செல்லப்படவேண்டும் என்பதில் ரிக்கி பொன்ரிங் பிடிவாதமாகவே இருக்கிறார். பொன்ரிங் இது பற்றி விலாவாரியாகப் பேசி இருக்கிறார். தமது அமைப்பில் உள்ள அனைவரும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் என்று கூறியுள்ளார்.

அதோடு கிரிக்கெட்டின் வளர்ச்சிக்கும், பரவலாக்கத்துக்கும் இது உதவிசெய்யும் என்றும் சுட்டிக்காட்டுகிறார். அதோடு இத்தகைய செயற்பாடு புதிய ரசிகர்கள் கூட்டத்தையும், பல்வேறு சந்தைவாய்ப்புக்களையும் உருவாக்கும் என்கிறார்.

மேலும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குகொள்ளும் அணிகள் 23 வயதுக்குட்பட்ட அணியாக அமைத்துக்கொள்ளும் அபிப்பிராயம் ஒன்றும் உண்டு என்று கூறுகின்றார். எனவே எதிர்காலத்தில் இந்த விடயம் தொடர்பான கருத்தாடல்கள் ஆரோக்கியமாக முன்னெடுக்கப்பட்டு நல்ல முடிவுகள் எட்டப்படலாம் என்று தோன்றுகிறது.

அடுத்து, நான்காண்டுகளில் நடைபெறப்போகும் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் (2019) பங்குகொள்ளும் அணிகளின் எண்ணிக்கையை பத்தாகக் குறைப்பது என்ற ஐ.சி.சி.யின் முடிவை பொன்ரிங் வரவேற்கவில்லை. வளர்ந்துவரும் நாடுகளின் கிரிக்கெட் ஆர்வத்தை அவர்களிடம் மழுங்கடிக்கச் செய்யும் காரியம் இதுவென்றும், கிரிக்கெட்டின் வளர்ச்சிக்கு இது ஆபத்தானது என்றும் எடுத்துக்காட்டும் பொன்ரிங், முன்னைய முறைபோல எல்லா நாடுகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கவேண்டும் என்கிறார். இவர் கூறியுள்ள இரண்டு விடயங்கள் தொடர்பிலான கருத்துக்களிலும் நிறையவே நியாயங்கள் உண்டென்பதை யாவரும் ஏற்றுக்கொள்வார்கள்.

# நிகரே இல்லை



**2015** விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டிகளில் செரினா வில்லியம்ஸ் ஆறாவது முறையாக கிண்ணம் வென்றுவிட்டார். இறுதிப்போட்டியில் ஸ்பானியாவின் கார்பைன் முகுருசாவை இவர் தோற்றகடித்திருந்தார். இந்த வெற்றியுடன் 21 கிராண்ட்ஸ்லாம்கள் வென்ற ஒரேயொரு கிராண்ட் ஸ்லாம் கிண்ணம் குறைவாக ஜேர்மனியின் ஸ்ரெபி கிராபின் பின்னால் இவர் நிற்கிறார். அதோடு தொடர்ச்சியாக நான்கு கிராண் ஸ்லாம் இரண்டு முறை வென்றவர் என்ற பெருமையும் இவரைச் சேர்கிறது.

ஆனால் ஒரு வருடத்தில் நான்கு கிராண்ட்ஸ்லாம்களையும் வென்றவர் என்ற சாதனையை மட்டும் இவர் நிகழ்த்த வில்லை. அடுத்த மாதம் தனது தாயகத்தில் யூ.எஸ். ஓப்பன் ரென்னிஸ் போட்டிகளில் செரினா வென்றால் அந்த மகத்தான சாதனையும் அவருக்குச் சொந்தம். இந்தவகையில் 1988ஆம் ஸ்ரெபிகிராப் ஒரு பருவத்தில் நான்கு கிராண்ட்ஸ் லாம்களையும் வென்றிருந்தார்.

செரினாவிற்குத் தாயக கிராண்ட்ஸ்லாம் இரண்டு சாதனைகளைச் சமன்படுத்தத் தேவைப்படுகிறது. அதுவும் ஒரே வீராங்கனைக்கு எதிராக அதுதான் ஸ்ரெபிகிராப். அதாவது 22 கிராண்ஸ்ட்லாம்களை வென்று ஸ்ரெபியுடன் சமன்செய்து கொள்வதுடன், ஸ்ரெபியின் சாதனையான ஒரே பருவத்தில் நான்கு கிராண்ட் ஸ்லாம் வென்றவர் என்ற சாதனையையும் சமன்செய்வார். செரினாவிற்கு இப்போது 34 வயது. இந்த வயதில் இவர் இப்படியாக ரென்னிஸ் போட்டிகளில் அசத்துவது ரென்னிஸ் உலகையே பிரமிக்கவைத்துள்ளது.

உலக ரென்னிஸ் சங்கம் செரினாவின் இன்னொரு சாதனையை பற்றிய குறிப்பொன்றையும் வெளியிட்டுள்ளது. அது ரென்னிஸ் வீராங்கனைகளின் தரவரிசைப் பட்டியல் புள்ளிகள் தொடர்பானதாகும்.

அதாவது தரவரிசை ஒன்றைக் கொண்டுள்ள செரினா பெற்றுள்ள புள்ளிகள் 13161. இவருக்கு அடுத்ததாக வரும் மரியா ஷரபோவா பெற்றுள்ள தரவரிசை இரண்டு புள்ளிகள் 6490. அதாவது ஏறத்தாள ஷரபோவாவைவிட புள்ளிகள் வித்தியாசம் இரண்டு மடங்கு அதிகம். இதுவும் ரென்னிஸ் உலகில் ஒரு சாதனையாகக் குறித்துக் காட்டப்படுகிறது.

எல்லா ரசிகர்களின் விருப்பும் யூ.எஸ் ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் வெற்றியை செரினா வெல்லவேண்டும் என்பதே. ஏனெனில் பல தடவைகளைத் தாண்டியே செரினா இன்றைய உச்சத்தைத் தொட்டு இருக்கிறார்.

உபாதைகள் இவருடன்கூடவே தொடர்வது துரதிர்ஸ்டம். அந்தத் தடை இல்லாதுவிட்டால் இன்னும் ஒரு சில கிராண்ட்ஸ்லாம்களை முன்னரே தனதாக்கி இருப்பார். இருந்தாலும் என்ன இந்த நூற்றாண்டின் அற்புத மங்கை செரினா வில்லியம்ஸ். யூ.எஸ். ஓப்பன் கிராண்ட் ஸ்லாம் வெல்வதற்கு நாங்கள் எல்லோரும் இப்போதே அவருக்கு வாழ்த்துத் தெரிவிப்போம்.

- ஜோசப் கிருஷ்ணா -

# சரியான பாதை

**ஐ.பி.எல்** இருபதுக்கு இருபது கிரிக்கெட் சுவாரஸ்யமானதுதான். ஆனால் ரசிகர்களுக்கு விளங்காத, ஆனால் ரசிகர்களால் வெறுப்புடன் பார்க்கப்பட்ட பல விடயங்கள் அருவருப்பானவைதான். ஐ.பி.எல் இன் போக்குகள் எல்லாம் நான் செய்வதைச் செய்வேன். யாரும் கேட்கமுடியாது என்ற பாணியிலேயே இதுவரை காலமும் நடைபெற்றுவந்தது. ஆனால் அந்தத் திமிருக்கு தற்போது சம்மட்டி அடி விழுந்து இருக்கிறது. சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் ராஜஸ்தான், றோயல்ஸ் அணிகள் இரண்டு இரண்டும் வருடங்களுக்கு ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

சகலவிதமான புறச்சக்திகளையும் பந்தாடித் தூக்கி எறிந்திருக்கிறது. இந்தியாவின் நீதித்துறை. சுருக்கமாகப் பார்த்தால் மனப்புழுக்கத்துடன் இருந்த அப்பாவி ரசிகர்களில் இருந்து பலம்வாய்ந்த ஊடகங்கள்வரை எல்லாரும் இந்தத் தீர்ப்பை வரவேற்றிருக்கிறார்கள். அந்தளவிற்கு நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியுடன் தொடர்புபட்ட குருநாத் மெய்யப்பன் சூதாட்டம் தொடர்பால் குற்றம் சாட்டப்பட்டு தனது வாழ்நாள் முழுவதும் கிரிக்கெட் தொடர்பான எந்த நடவடிக்கையிலும் ஈடுபடமுடியாதென்று தடை செய்யப்பட்டுள்ளார். அதேபோன்று ராஜஸ்தான், றோயல்ஸ் அணியின் இணையுரிமையாளரும், சில்பா ஷெட்டியின் கணவருமான ராஜ் குந்த்ரா இதேபோல தண்டனைக்கு உள்ளாகியுள்ளார்.

இது தொடர்பில் நிறையவே விடயங்களை ஊடகங்கள் சொல்கின்றன. ஆனால் எல்லாவற்றிலும் ஒரு திருப்தியும் மனநிறைவும் தெரிகிறது. இப்பொழுது அடுத்த கட்டம் பற்றிப் பேசப்படுகிறது. அதாவது கிரிக்கெட்டை சுத்தப் படுத்துவதும் அதற்கு சரியான சந்தர்ப்பம் இதைத்தவிர வேறதுவும் இருக்கமுடியாது. அதாவது முறை தவறிய நடவடிக்கைகள், ஊழல்கள், இலஞ்சம், ஆட்ட நிர்ணயங்கள் இன்னபுற முறைகேடுகள் எல்லாம் கண்டறியப் பட்டு சம்பந்தப்பட்டவர்கள் ஈவிரக்கமின்றித் தூக்கி எறியப்படவேண்டும்.




# மாதிரிக்கு இரண்டு

**சர்வதேச** கிரிக்கெட் சபைகள் பலதும், பரபரப்பான போட்டிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது இரண்டு விடயங்களுடன் கவனத்தைக் கவர்ந்தன. முதலாவது, பங்களாதேஷ் அணியின் எழுச்சி. பாகிஸ்தான், இந்திய அணிகளைக் கவிழ்த்த பங்களாதேஷ், தெ.ஆபிரிக்க அணியுடன் எப்படிச் சாதித்து விட முடியாது என்று பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மூன்று ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரை 2-1 என்று பங்களாதேஷ் அசத்தலாக வென்றிருக்கிறது. அதுவும் மூன்றாவது போட்டியின் 40 ஓவர்களில் 168 ரண்களுக்கு தெ.ஆபிரிக்காவை மடக்கியதும் (போட்டியே 40 ஓவர்தான்) தொடர்ந்து 9 விக்கெட்டுக்களால் வெற்றி என்ற சாதனையை 26 ஓவர்களிலேயே சாதித்ததும்தான். பங்களாதேஷின் திறமை முடிந்துபோன மூன்று தொடர்களும் பங்களாதேஷின் எழுச்சியைக் கட்டியம்கூறி நிற்கின்றன.




இன்னொரு விடயம் இலங்கை அணியின் குஷால் பெரேராவின் அதிரடி அரைச்சதச் சாதனை. பாகிஸ்தானை எட்டுவதற்குச் சிரமமான 287 இலக்கை, இலங்கை கடந்து அபாரமான வெற்றியைப் பதிவுசெய்யக் காரணமே குஷால் பெரேராதான். ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான இவருக்கு ஒரு முகவரி கொடுத்து ஆட்டம் இது.

17 பந்துகளில் அரைச்சதம் கடந்து சாதனை படைத்திருக்கிறார் இந்த இளைஞர். உலக சாதனை 16 பந்துகளில் அரைச்சதம் இதனை வைத்திருப்பவர். ஏ.பி.டி வில்லியர்ஸ். அதை அடுத்து 17 பந்துகளில் அரைச்சதம் சாதனையை வைத்திருப்பவர் சணத் ஜயசூரியா. தற்போது அதனைச் சமன் செய்துள்ளார் குஷால். எதிர் காலத்தில் இவரிடம் நிறைய அதிரடிகளை எதிர்பார்க்கலாம்.




# பிரச்சினையாகிவிட்ட பிரசவ வலி

பிரசவ வலி என்பது மிகுதியான வலி என்றாலும், பெண்களால் தாங்கக்கூடிய வலிதான்.

ஆனால், பிறர் மிகைப்படுத்திச் சொல்வதைக் கேட்பதால், இன்று பல பெண்களும், சுகப்பிரசவ வாய்ப்பிருந்தும், மருத்துவர்களை சிசேரியன் செய்யச் சொல்லி வற்புறுத்துகிறார்கள்.

சுகப்பிரசவத்துக்கான உடல்வலிமை இயற்கையாகவே இருக்கிறது என்பதை உணர்ந்து, அதற்கான மனவலிமையை ஒவ்வொரு பெண்ணும் பெருக்கிக்கொள்ள வேண்டும். கர்ப்பப்பை வாய்திறக்கவில்லை, இடுப்பு எலும்புக்குள் குழந்தையின் தலை வரவில்லை, குழந்தை வரும் வழியில் ஏதாவது பிரச்சினை, பெண்ணின் முதுகெலும்பு குறுகலாக இருப்பது, அதிக இரத்தப்போக்கு மற்றும் குழந்தைக்கும் தாய்க்கும் பிரச்சினை போன்ற சூழல்களில் சிசேரியன் தவிர்க்கமுடியாததும் அவசியமானதும்கூட!

சிலருக்கு பிரசவ திகதி கடந்தும், வலி ஏற்படாமல்போகும். வலியை உண்டாக்கும் ஊசி, ஜெல் என்று அதற்கான வலி ஊக்கிகளின் பயன்பாடு இன்று அதிகரித்திருக்கிறது. இதனால் சில பக்கவிளைவுகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இதயத் துடிப்பு குறைதல், விட்டுவிட்டு வலி ஏற்படுதல் போன்றவை வரக்கூடும். இந்த நேரத்தில் மருத்துவர்கள் மிகவும் கவனம் செலுத்தவேண்டியது அவசியம். இக்கட்டான சூழலில் வலி ஊக்கிகளைப் பயன்படுத்தாமல், வலிக்காகக் காத்திருந்தால் தண்ணீரின் அளவு குறையும், குழந்தை கர்ப்பப்பைக்குள்ளேயே சுவாசிக்க ஆரம்பித்துவிடும், குழந்தை வயிற்றுக்குள்ளேயே மோஷன் போக வாய்ப்பிருக்கிறது. இதுபோன்ற ஆபத்துக்கள் இருக்கும் பட்சத்தில், ஒப்பரேஷன் அவசியமாகிறது. பொதுவாக வலி ஊக்கிகள் பயன்படுத்தினாலும், இயற்கையாகவே தயாராகவே இருப்போம். சிக்கல் ஏற்பட்டால் மட்டுமே ஒப்பரேஷன் செய்வோம்.




# ஆண்களுடன் பெண்கள் மனம்விட்டு பேசலாமா?



தினமும் நாம் செல்லும் இடங்கள், சந்திக்கும் நபர்கள் என அனைத்து இடங்களிலும் பெண்களை மட்டுமே காண முடியாது. ஆண்களும்தான் இருப்பார்கள். எனவே அவர்களிடம் எப்படி அணுகவேண்டும், எப்படி பழகவேண்டும் என்பதை தெரிந்துகொள்ள சில டிப்ஸ்கள் இதோ.

- ஆண்களின் மத்தியில் நம்முடைய நடையும், நிற்கும் ஸ்டைலும், எந்தளவிற்கு நாம் தன்னம்பிக்கையுடன் இருக்கிறோம் என்பதைக் வெளிக்காட்டும். எனவே எப்பொழுதும் முதுகை நிமிர்த்தி, கழுத்தை நேராக வைத்து இருந்தால், அது தன்னம்பிக்கையுடன் இருக்கும் தோற்றத்தைத் தரும்.
- ஆண்களை ஈர்க்க, மற்றொரு வழி நன்றியுடன் இருத்தல். சில பெண்கள் தன்னம்பிக்கையுடன் இருக்கின்றோம் என்று நினைத்துக்கொண்டு, திமிராக நடந்துகொள்வார்கள். ஆனால் அது தேவையற்றது. ஆகவே அடக்கத்துடனும், அமைதியுடனும் நடந்துகொண்டாலே போதுமானது.
- தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள அனைவருடனும், அடக்கத்துடன் பழகவேண்டும். எல்லாவிதமான மனிதர்களுடனும் பழகமுடியும் என்ற நிலையை அடைய, அனைவருடனும் சகஜமாக பழகவேண்டும் என்பது மிக முக்கியம். பொதுவாக அனைவருடனும் பழகுவது என்பது, ஒருவரை முன்னோக்கி எடுத்துச்செல்லும். இதன்மூலம் ஆண்களிடையே, நன்றாக பழகக்கூடியவர் மற்றும் தன்னம்பிக்கை அதிகம் உடையவர் என்ற எண்ணங்கள் உண்டாகும்.
- பல பெண்கள் வெளியிடங்களில் பேசுவதே இல்லை. முக்கியமாக ஆண்களிடம் பேசுவதே இல்லை. இது முற்றிலும் தவறு. தோழமையோடு பேசினால்தான் அனைவருடனும், முக்கியமாக ஆண்களிடம் தன்னம்பிக்கையுடன் பழகமுடியும்.

# சினைப்பை கட்டிகள் உருவாவதை தடுக்கும் வழிமுறைகள்




கர்ப்பப்பையின் வலது, இடது பக்கங்களில் நெல்லிக்காய் அளவில் முட்டை உற்பத்தி செய்யும் பகுதிதான் சினைப்பை. மாதவிடாய் முடிந்த ஒரு வாரத்தில் இருந்து, இந்த சினைப்பை பகுதியில் நீர்க்கட்டிகள் உற்பத்தியாகும். இரண்டாவது வாரத்தில், இவைகள் வெடித்து, கருமுட்டையை வெளியேற்றும். இம்முட்டைகள் கருக்குழாய் வழியாக கர்ப்பப்பையை அடையும். சில சமயங்களில், ஹோர்மோன் சுரப்பிகளின் வேறுபாட்டால், இந்த நீர்க்கட்டி வெடிக்காமல் 25 செ.மீ.க்கும் மேல் வளர்ந்துவிடும்.

**சினைப்பை கட்டிகளுக்கான சிகிச்சை முறைகள் :**

15 வயது முதல் 25 வயது திருமணம் ஆகாத பெண்வரை ஹோர்மோன் சிகிச்சை குழந்தைப்பேறு இல்லாதவருக்கு நீர்க்கட்டி உடைந்துபோக மருந்துகள், குழந்தைகள் பெற்ற பெண் என்றால் மாதவிடாய் சீராக நடைபெற மாத்திரைகள் அல்லது, கட்டியின் அளவைப் பொறுத்து சிகிச்சைகள் கட்டிகளை நீக்கவேண்டும் என்றால், நுண்துளை அறுவை சிகிச்சை!

**சினைப்பையில் கட்டிகள் இருப்பதற்கான அறிகுறிகள்:**

அபூர்வமாக பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை மாதவிடாய் வரும் அல்லது மாதவிடாய் சில மாதங்களுக்கு வராமலே இருக்கும். உடல் பருத்துவிடும். முகத்தில் உரோமங்கள் முளைக்கும். தோலின் நிறம் மாறும். உடலில் பல்வேறு இடங்களில் கருமை அதிகரிக்கும். ஆண் தன்மை ஏற்படும்.

**சினைப்பை நீர்க்கட்டிகள் வராமல் தடுக்கும் முறைகள் :**

அதிகளவு எடை உள்ளவராக இருந்தால் எடை குறைக்கவேண்டும். நாள் தவறாத உடற்பயிற்சியும், உணவுக்கட்டுப்பாடும் அவசியம். அதிக கொழுப்புமிக்க பால் பொருட்கள், சொக்லெட், ஐஸ்கிரீம், ஆட்டிறைச்சி, எண்ணெய் பலகாரம் போன்றவற்றை தவிர்க்கவேண்டும்.

# பட்டர் சிக்கன்

## தேவையான பொருட்கள்

கோழி இறைச்சி - 1 கிலோ, தக்காளி 2, பெரிய வெங்காயம் - 2 இஞ்சி, பூண்டு விழுது - 2 மேசைக்கரண்டி, முந்திரி - 15, பட்டர் - 2 மேசைக்கரண்டி, கிரீம் - 2 மேசைக்கரண்டி, மிளகாய்ப் பொடி - 2 கரண்டி, எண்ணெய் - 50 கிராம், தந்தூரி மசாலா - 1 மேசைக்கரண்டி, கரம் மசாலா - அரை மேசைக்கரண்டி, எலுமிச்சை சாறு, 1 கரண்டி, தயிர் - 50 கிராம், சீரகப்பொடி -1 கரண்டி, உப்பு - தேவைக்கேற்ப.

## செய்முறை



ஒரு பாத்திரத்தில் தந்தூரி மசாலா, கரம் மசாலா, எலுமிச்சை சாறு, தயிர், சீரகப்பொடி, உப்பு முதலியவற்றைப் போட்டு கலந்து வைத்துக்கொள்ளவும். கோழி இறைச்சியை துண்டுகளாக்கி சுத்தம்செய்து கழுவி அதை கலவையில் போட்டு கிளறி ஒரு மணிநேரம் நன்கு ஊறவைக்கவும்.

ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து அதில் எண்ணெயை ஊற்றி, சூடேறியதும் மெலிதாக நறுக்கிய வெங்காயம், இஞ்சி பூண்டு விழுது முதலியவற்றை போட்டு பொன்னிறம் வரும்வரை வதக்கவும். அதில் அரைத்து வைத்துள்ள முந்திரி, மிளகாய்பொடி, தக்காளி சாறு, உப்புசேர்த்து சிறிது தண்ணீர் ஊற்றி கொதிக்க வைத்துக்கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் சிறிது எண்ணெய் ஊற்றி அதில் கோழி இறைச்சியை போட்டுப் பொரித்துக் கொள்ளவும். பொறித்த சிக்கனை மசாலாவில் கொட்டி அத்துடன் பட்டர், கிரீம் முதலியவற்றையும் போட்டுக்கிளறி வேகவிடவும். எல்லாம் புரண்டு வெந்து கெட்டியானதும் இறக்கிவிடவும்.

# அழகை மெருகூட்டுங்கள்



சில பெண்களுக்கு எத்தனை வயசானாலும் தோல் சுருங்காது. வளவளவெனச் சின்னப் பெண்ணைப் போலவே இருக்கும்!

எலுமிச்சை உடம்புக்கு நல்லது! குளிப்பதற்கு முன் - ஒரு வாளித் தண்ணீரில் ஒரு மூடி எலுமிச்சையைப் பிழிந்து கொள்ளுங்கள். சோப்பு தேய்த்துக் குளித்தபின், கடைசியாக ஒரு "லெமன் பாத்" எடுங்கள். இதன் புத்துணர்வையும் சரும மினுமினுப்பையும் அனுபவித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

மெருகுக்கு பப்பாளி! நன்கு பழுத்த பப்பாளியை நறுக்கி, மிக்ஸியில் போட்டு அடித்து, அத்துடன் ஒரு மூடி எலுமிச்சை சாறை விட்டுக் கலந்து, உடம்பில் தேய்த்து, ஒரு மணிநேரம் போல ஊறியபின் குளிக்கலாம்.

**250/= பரிசு வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

பரிசுப் போட்டி இல :-480

கேள்வி: பெண்கள் தன்னம்பிக்கையுடன் இருக்கிறோம் என்பதைக் வெளிக்காட்டும் தோற்றம்?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 03. 08. 2015

பரிசுப் போட்டி இல :- 478 இற்கான விடை :- சம உரிமை, வேலை நேரம், சம்பளம், தொழில்வாய்ப்பில் பாரபட்சமின்மை, சமையலறை, படுக்கையறை மன உணர்வுகள்.

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- க.றுசானா, தென்னங்கும்புர கண்டி.

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 480
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

**480**

பெயர் : ..............................

முகவரி : ..............................

தே.அ. அட்டை இல : ..............................

விடை : ..............................

கையொப்பம் : ..............................



# தேர்தல் திருவிழா
## மொக்கன் கேட்கிறான்

எலக்ஷன் திருவிழா கொடியேறி அஞ்சாறு நாளாப் போச்சு. செத்துப்போன போராளிகளை விட்டு இப்ப புதுப்புதுப் போராளிகளென கொஞ்சப்பேர் வந்திருக்கினம். உதயன் முதலாளி சரவணபவனும் தானும் ஒரு ஊடகப்போராளியாம். அவருக்கு மேலால அவற்ற மச்சான் வித்தியாதரன் தானொரு ஊடகப் போராளி எண்டு வெளிக்கிட்டிருக்கிறார். இனி வரவர எலக்சனும் கிட்டக்கிட்ட போராளிகளுக்கு உணவு சமைச்சுக் குடுத்தபடியால சமையல் போராளிகள் எண்டும். சாப்பாடு கொண்டுபோய் குடுத்ததால சாப்பாட்டுப் போராளிகள் எண்டு சொல்லிக்கொண்டும் வேற ஆக்களும் வெளிக்கிட்டாலும் குறை சொல்லுறதுக்கு இல்லை. உதயன் முதலாளியும் ஒரு ஊடகப் போராளி எண்டால் உதை என்னெண்டு ஒரு கதையெண்டு எடுக்கிறது. அவரொரு போராட்ட இலட்சியம் படைச்சவரோ. அல்லது போரைப் பற்றி கதை ஏதும் எழுதினவரோ எண்டால் அது ஒண்டும் இல்லை. இப்பிடி பாத்தால் உலகத்தில உள்ள முதலாளிமாரெல்லாம் எல்லாரும் ஒரு வகைப் போராளிதான் எண்டு வந்திடும்.


ஜனநாயகப் போராளிகள் எண்டு சொல்லிக்கொண்டு சண்டையில தோக்கும் மட்டும் ஜனநாயகத்துக்கு விரோதமா செயற்பட்ட போராளிகளெல்லாம் இண்டைக்கு ஜன நாயகப் போராளிகள் எண்டு சொல்லிக்கொண்டு வந்திருக்கினம். காந்திஜி, அமெரிக்கான்ர கறுப்பினத் தலைவர் மார்டின் லூதர் கிங் எண்டவைதான் உலகத்தில ஜனநாயகப் போராளிகள் எண்டு அறியப்பட்டவை. இவை பதவி வகிக்கவும் இல்ல. ஆன இவ பார்லிமந்துக்கு போய்த்தான் போராடப் போறம் எண்டு சொல்லியினம். உதக் கேக்கத்தான் மொக்கனுக்கும், மொக்கிக்கும் சிரிப்புவருகுது.

முள்ளிவாய்க்கால்ல முடிவாய்த் தோக்கும் மட்டும் மூர்க்கத்தனமான போராளிகள், புலிப் போராளிகள் இண்டைக்கு பசுப்போராளிகளா வந்திட்டினம். இப்பிடி மாறினது பிழை எண்டு மொக்கன் சொல்ல வரேல்ல. ஆனா எலக்சன் கேக்க வெளிக்கிடுறதுதான் மொக்கனுக்கு பிழை எண்டு படுகுது. தெற்கில ஜே.வி.பி பெடியன்கள் பிறகு பிறகு ஜனநாயக போராளிகளா மாறினாங்கள். ஆனால் அவனுகளுக்கு ஓரளவு அரசியல் ஞானம் இருந்திச்சுது.

ஆனா இவைக்கோ, இவையின்ர தலைவருக்கோ ஜனநாயக அரசியலில் ஒரு ஞான மும் இருக்கேல்ல. ஒரு துளி நம்பிக்கையும் இருக்கேல்ல. இவையின்ர முன்னணி வேட்பாளரப் பாத்தால் பெரிய சந்தேகம் கிளம்புது. அவர் ஊடகப் போராளி எண்டு சொல்லிக்கொண்டுதான் முன்னுக்கு வாறார். இப்ப கதிரைக்காண்டி கொஞ்சப் போராளிப் பொடியன்களையும் தன்னோட சேத்துக்கொண்டு அவைக்கு தலைவரெண்டு எலக்சனில நிக்கிறாராம். இவருக்கு போன எலக்சனுக்கிளையே கதிரை ஆசை இருந்திச்சுது. ஆனா கூட்டமைப்புக்காரர் குடுக்கேல்ல. அவை பசையுள்ள பத்திரிகை முதலாளியும் இவற்ற மச்சானுமான சரவணபவனுக்கே சீற்றுக் குடுத்தினம். இவற்ற ஆசை நிராசையாப் போச்சுது. ஆசை இவரை விடயில்ல. அப்ப இண்டைக்கு ஜனநாயக போராளி எண்ட பெயரில எலக்சனுக்கு நிக்கிறார். அப்ப இவர பெரிய கதிரைக்கு ஆசைப்படுற பேராசைப் போராளி எண்டு ஏன் சொல்லக் கூடாதெண்டு மொக்கன் கேக்கிறான். அவங்களுக்குத் தலைமை தாங்க இவர் ஆர் எண்டு மொக்கியும் கேக்கிறாள். இந்தக் கேள்வியெல்லாம் சரியா? பிழையா? எண்டு மொக்கன் சனங்களையும் கேக்கிறான்.

தங்கத்துரை, குட்டிமணி செத்தது பிரபாகரனுக்கு தலைமையைக்குடுத்துது. திருகோணமலையில தங்கத்துரை செத்தது சம்மந்தருக்கு வாய்ப்பாய்ப் போச்சுது. அந்த மாதிரி கிட்டத்தட்ட 25 வரியத்துக்கு முந்தி நாபாத் தம்பியும் மற்றும் தோழமைப் பெடியங்களும் சென்னையில புலிகளால சுட்டுக்கொல்லப்பட்டது சுரேஸ் பெடியனுக்கு வாய்ப்பாப் போச்சுது. அவங்கள் சுட்டுக்கொல்லப்படேக்க அங்க நிண்டிருக்கவேண்டிய சுரேஸ் பெடியன் அங்க நில்லாதது இண்டைக்கும் ஒரு சந்தேகமாத்தான் கிடக்குது. பிறகு அவர் தலைமையைத் தன்ர கையில எடுத்துக்கொண்டு சுரேஸ் ஈ.பி.ஆர்.எல்.எவ் எண்டு எலக்சன் கேக்க வெளிக்கிட்டார். சந்திரிக்கான்ர அரசாங்கத்தில மீன்பிடி ஆலோசகராகவும் பதவி வகிச்ச பெருமை அவருக்கு உண்டு. பிறகு புலிகள் பெரிசாய் வந்தாப் போல புலிகளின்ர கூட்டமைப்பில தன்னையும் வலியச் சேத்துக்கொண்டார்.

இப்பிடிப் போய் ஒட்டிக்கொண்ட சுரேஸ் பொடியன் இண்டைக்கு கூட்டமைப்புக்கு தானே மூலகாரன், இண்டைக்கு மூளைகாரன் எண்டு பெருமையடிக்கிறத பார்த்தால் மொக்கனுக்கு சிரிப்பும் வருகுது. அழுகையும் வருகுது. தோழர்களை வஞ்சகத்தனமா கொண்ட புலிகளிடம் போய் தஞ்சமடைந்தபோதே அவற்ற பதவி ஆசைக்குணமும், நரித்தந்திரமும் நல்லா வெளிப்பட்டுது. புரட்சி அரசியல்ல இறங்கின சுரேஸ் பெடியன் தனக்கு பார்லிமந்து பதவி, தம்பி சர்வேஸ்வரனுக்கு மாகாண–சபைப் பதவி எண்டு பெற்று ஒரு குடும்ப அரசியல் புரட்சியையே செய்துபோட்டார். ஊடகப் போராளி எண்டு தம்பட்டம் அடிக்கிறதையும், புரட்சிப்போராளி எண்டு இண்டைக்கும் பெருமையடிக்கும் சுரேஸ் பெ்டியனும் ஆவணி பதினெட்டு மக்களட்ட அடி வேண்டி அரசியல் அநாதைகளாப் போடுவினம் எண்டு மொக்கன் நல்லா நம்புறான்.



புலி விழுந்தது நரிக்குத் தாயம் எண்டாப் போல இருந்தவனுகளெல்லாம் இப்பத்தான் முழுசத் தொடங்கீற்றினம். தெற்கில மகிந்தவும் குருநாகலில் களத்தில் குதிச்சிருக்கிறார். அங்க எங்கண்ட வல்வெட்டித் துறை சூரன் சிவாஜிலிங்கமும், மகிந்தவைத் தோற் கடிக்கிறதுக்காக களத்தில குதிக்கப்போறாராம் எண்டு சொல்லியிருக்கிறார். இவர் கேக்கமாட்டார். கேட்டாலும் நல்லாட்சிக் கூட்டுக்குப் போற தமிழ் வாக்குகளை பிரிச்செடுக்கிறதுதான் இவற்ற நோக்கமா இருக்கும். இவற்ற சகோதரன் விநோதலிங்கம் ஒரு ரொலோ ஆரம்ப ஆள். அவற்ற செல்வாக்கில தான் இவரும் கிளம்பினவர். அவர் வல்வெட்டித் துறை சேர்மனா இருந்தவர். இப்ப லண்டனில சீவிக்கிறார். சிவாஜிலிங்கம் இஞ்ச இருந்துகொண்டு அடிக்கடி தன்னை மலிவான முறையில் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வார். இந்த மலிவு விளம்பர அரசியல் இவருக்கு எத்தின காலம் நீடிக்கப் போகுதெண்டு மொக்கன் கேக்கிறான். மொக்கியும் கேக்கிறாள்.

**மொக்கன் இப்பவும் கேக்கிறான்**
**இனிமேலும் கேப்பான்.**

சிந்தனைக்கு சில தகவல்கள்

# நமக்கு இலக்குதான் முக்கியம்

"குருவே என்னால் வாழ்க்கையில் முன்னேற முடியவில்லை." என்று சலிப்புடன் சொன்னவனை நிமிர்ந்து பார்த்தார் குரு.

"வருத்தப்படாதே, என்ன பிரச்சனை?" என்று கேட்டார் குரு.

"என்னைப் பற்றி குறை கூறுபவர்கள் அதிகரித்து விட்டார்கள். அவர்களை எப்படி சமாளிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. என்றான் வந்தவன்.

வந்தவனின் பிரச்சினை குருவுக்குப் புரிந்தது. அவனுக்கு ஒரு சம்பவத்தைச் சொல்ல ஆரம்பித்தார்.

"அமெரிக்காவில் பரபரப்பான நகரில் ஒரு டாக்ஸியில் ஒருவர் பயணித்துக் கொண்டிருந்தார். காலை நேரம். நிறைய போக்குவரத்து. சிரமப்பட்டுதான் வண்டி ஓட்டவேண்டியிருந்தது.

பல இடங்களில் வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதுவதுபோல் வந்தன. ஆனால் டாக்சி ஓட்டுனர் கொஞ்சமும் பதட்டப்படவில்லை.

இப்படி சுமுகமாக பயணித்துக் கொண்டிருந்த போது ஒரு திருப்பத்தில் இன்னொரு கார் ஒன்று குறுக்கே வந்துவிட்டது.

இரு கார்களும் மோதுவதுபோல் சென்று மெல்லிய இடைவெளியில் இடிக்காமல் தப்பின. தவறு எதிரில் வந்தவனுடையதுதான்.

இருந்தாலும் ஆத்திரத்தில் டாக்சி ஓட்டுநரைத் திட்டினான். ஆனால் ஆச்சர்யம்!

பதிலுக்கு டாக்ஸி ஓட்டுனர் அவனை திட்டவில்லை. அவனைப் பொருட்படுத்தாமல் வண்டியை செலுத்தினார்.

இதேபோல் இன்னொரு சம்பவம்.

அதிலும் டாக்ஸி ஓட்டுனர்,

பொறுமை இழக்கவில்லை.

ஆத்திரப்படவில்லை. நிதானமாக இருந்தார்.

இதையெல்லாம் பார்த்த அவருக்கு வியப்பு.

இறங்கவேண்டிய இடம் வந்தபோது ஓட்டுனரிடம் கேட்டார்.

"எப்படி இவ்வளவு பொறுமையாய்,

யாருடைய திட்டுக்கும் பொருட்படுத்தாமல் வண்டி ஒட்டுகிறீர்கள்?"

அதற்கு அந்த டாக்ஸி ஓட்டுனர்,

"என்னுடைய இலக்கு உங்களை நீங்கள் சேரவேண்டிய இடத்தில் சேர்ப்பது.

வீதியில் போவோர் அள்ளிக்கொட்டும் குப்பைகளையெல்லாம் என் மனதில் சேர்த்துக்கொள்ளவில்லை.

அதையெல்லாம் பொருட்படுத்தி ஆத்திரப்பட்டு பதில் சொல்லிக்கொண்டிருந்தால் நாம் போய் சேரவேண்டிய இடத்தை அடையமுடியாது."

இந்தச் சம்பவத்தை குரு சொன்னதும் தான் செய்ய வேண்டியது என்ன என்பது வந்தவனுக்கு புரிந்தது.

அன்பு நண்பர்களே! - நமக்கு இலக்குதான் முக்கியமே தவிர இடையில் வரும், கொஞ்சநஞ்ச இடைஞ்சல்கள் அல்ல.



# நண்பேன்டா...




அண்மையில் Floridaவில் ஒரு சுவாரஸ்சியமான சம்பவம் நடந்திருக்கின்றது. ஒரே வகுப்பில் படித்த இருவர் நீதிமன்றத்தில் சந்தித்துக் கொள்கிறார்கள். ஒருவர் நீதிபதியாக, மற்றவர் குற்றவாளியாக.

தீர்ப்பு வழங்குமுன் அங்கிருந்த பெண் நீதிபதி நீங்கள் Nautilus Middle என்ற கல்லூரியில் என்னோடு ஒன்றாகப் படித்த நண்பர்தானேஎன்று குற்றவாளியுடன் அறிமுகமாகின்றார். தனது பாடசாலை நண்பிதான் நீதிபதி என்று அறிந்து கொள்ளும் குற்றவாளி கண்ணீர்விட்டு அழுகிறார்.

பின்னர் அந்த பெண் நீதிபதி: உங்களை இப்படி சந்திக்கக் கிடைத்ததை எண்ணி நான் மிகவும் வருத்தமடைகிறேன். எமது கல்லூரியில் இருந்த சிறந்த கால்பந்து வீரர் இவர். கல்லூரிக் காலத்தில் மிகத் திறமையான மாணவர் என்று அந்த குற்றவாளி நண்பரை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தினார் நீதிபதி. அதோடு உங்களது பாதையை மாற்றிக்கொள்ளுங்கள் என்று கூறி தனது நண்பருக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார். ஒரு நல்ல நிலைமைக்கு வந்ததும் ஒன்றாக இருந்த நண்பர்களை கண்டும்காணாமல் இருப்பவர்களுக்கு மத்தியில் ஒரு நீதிபதியாக இருந்து கொண்டு ஒரு குற்றவாளியை தனது நெருங்கிய நண்பர் என்று அறிமுகம் செய்த அந்த பெண் நீதிபதியின் பண்பு அழகானது.

# காதலுக்கு மரியாதை !!




பொது இடத்தில் காதலர்கள் ரொம்ப நெருக்கமாக நடந்துக்கொள்வது அவர்களை மட்டுமல்ல காதலையும் கொச்சைப்படுத்தும் ... பொது இடத்திற்கு வந்துட்டா சமூகத்தின் பார்வை உங்கள்மீதும் இருக்கும். எல்லைமீறி நடந்துகொண்டால் ஆண்களை தவறான கண்ணோட்டத்தில் இந்த உலகம் பார்க்குதோ இல்லையோ பெண்களை ஒழுக்கம் இல்லாமல் சித்தரித்துவிடும்... உலகம் எப்போதும் உங்கள் வீட்டின் நான்கு சுவர் ஆகாது. அதை புரிந்து கொண்டு நடந்தால் நல்லது... தனக்குரிய மரியாதை மட்டுமின்றி, தன்னுடன் வரக்கூடிய பெண்ணுக்கும் மரியாதையை தேடிதருவதுதான் காதலனுக்கு அழகு, காதலுக்கு மரியாதை.

# தேர்தல் களமும் கட்சிகளின் நிலைப்பாடும்

**மக்களுக்கான முழுமையான சேவையை செய்துவரும் ஒரு கட்சி என்னும் வகையிலும் மற்றும் வன்னியிலும் மிகுந்த செல்வாக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு உள்ளமையினாலும் ஈ.பி.டி.பியினரின் வளர்ச்சியிலே தளர்ச்சி காணமுடியாது என்ற கருத்தும் நிலவுகின்றது.**

**ஏழு ஆசனங்கள் மட்டுமே உள்ள வடக்கின் யாழ்.மாவட்ட நிலை என்னவாக அமையும் என்பதனை தீர்மானிக்கும் சக்தி மக்களிடம் மட்டுமே உள்ளன.**

அளவெட்டி
ப.உதயகுமார்



தேர்தல் திருவிழா தொடங்கிவிட்டது. ஒருவரை ஒருவர் பிடித்துத் தின்னும் அளவுக்கு தேர்தல் காய்ச்சல் இம்முறை சூடுபிடிக்கும் என்பதிலே ஐயமில்லை. ஒன்றிரண்டு கட்சிகளுடன் போட்டி நடைபெற்ற வடக்கின் தேர்தல் களமானது இம்முறை பலமுனைப் போட்டியுடன் அரங்கேற்றம் காண இருக்கின்றது! இத் தேர்தலில் வடக்கு மக்களின் வாக்குகள் குரங்கு அப்பம் பங்கீடு செய்த கதை போல சிதறடித்துச் செல்லவும் வாய்ப்புகள் அதிகமாயுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி, புதிய போராளிகள் அமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் தேசிய முன்னணி உட்பட சுயேட்சை குழுக்களுடன் தென்னிலங்கை பெரும்பான்மைக் கட்சிகளும் இம்முறை களமிறங்கும் நிலையிலே இருக்கின்ற வாக்குகள் சிதறுண்டுபோவதற்கு இடமிருக்கின்றது!

பல கட்சிகள் போட்டியிட்டாலும் வெற்றிகளை குவித்துவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இம்முறை சனீஸ்வரன் உச்சநிலைக்கு வந்திருக்கின்றதுபோல உள்ளது. சனியைப்போல கொடுப்பாருமில்லை, அவனைப் போலப் பறிப்பானுமில்லை என்று பழமொழி சொல்லக் கேள்விப்பட்டுள்ளேன்.

எல்லாக் கட்சிகளும் இம்முறை துடிப்புடன் உள்ளமையால் யாருடைய கோட்டையிலே மண்விழும் என்று மக்கள் இம்முறை கணக்கிட்டு உள்ளனர். அதிக ஆசனங்களுடன் ஆட்சிப்பீடமேறி, மக்களுக்கு எதையுமே செய்யாமல், மக்கள்நலன் பற்றி எதுவுமே சிந்திக்காதவர்களாகி, மைத்திரி அரசுடன் கைகோர்த்தும், மக்கள்நலன்களை துளியேனுமே திரும்பிப் பார்க்காத கட்சியொன்றுக்கு இம்முறை வடக்கின் தேர்தலிலே பலத்த அடிவிழலாம் என்று கருத்தியலாளர்கள் கருதுகின்றனர்.

நிலைமை இவ்வாறிருக்கும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு நேரடி எதிரிகளாக சில கட்சிகள் களமிறங்குவதனாலும் பாதிப்பினை உண்டாக்கக் கூடிய சூழல்கள் காணப்படுகின்றன.

இலங்கையிலே நடைபெற்ற யுத்தமானது நிறைவுக்கு வந்த பின்பு நடைபெற்ற சகல தேர்தல்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிவாகை சூடியே வந்திருக்கின்றது.

இதற்கெல்லாம் காரணமாய் அமைந்தவர்கள் புலிகளே! அவர்கள் சுவடு தெரியாமல் மறைந்துபோனாலும், அவர்களினால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சகல தேர்தல்களிலும் புலிப்புராணம் பாடியே வாக்கு வேட்டையிலே ஈடுபட்டுவந்தனர். வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றபோது இந்நாள் முதல்வர் வடமராட்சியிலே பேசும்போது சொன்னார், பிரபாகரன் காலத்தால் அழிக்கமுடியாத பெரும் தலைவன் என்றெல்லாம் புகழ்மாலை சூட்டி வெற்றிவாகை சூடினார். பின்பு புலிகளை இகழ்ந்து பேசும் நிலைக்கு கூட்டமைப்பினர் வந்துவிட்டனர்.

இப்படியாகவே, புலிகளை துதி பாடியவர்கள் இம்முறை அவர்களை துதி பாடி வாக்கு கேட்கமுடியாத சூழ்நிலையும் இவர்களுக்கு உள்ளது! ஜனநாயகப் போராளிகள் கட்சி இந்த தடவை கூட்டமைப்புக்கு எதிராகவே களமிறங்யுள்ளது.

யார் இந்த ஜனநாயக போராளிகள் கட்சி? என்று சொன்னால் முன்னாள் புலிப் போராளிகளாக இருந்து பின்பு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துகொண்டு மக்கள் சேவையாற்றவேண்டும் எனும் எண்ணத்துடன் வந்துள்ளனர். இந்த ஜனநாயக போராளிகள் கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பிலே இடம் கேட்டிருந்தனர்.

இவர்களைப் பார்த்து சம்பந்தன் ஐயா சொன்ன பதில் இவர்களை சுயேட்சையாக போட்டியிட வாய்ப்பினை வழங்கியுள்ளது.

நீங்கள் இராணுவப் புலனாய்வாளர்களாக வந்துள்ளீர்கள். உங்களை நாங்கள் இணைத்துக்கொண்டால் வெளிநாடுகள் எல்லாம் பயங்கரவாதிகள் என்றே பார்க்கும் என்று சம்பந்தன் ஐயா சொல்லிவிட்டார்.

யுத்தம் முடிய முன்பு புலிகளால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது! அப்போது புலிகள் பயங்கரவாதிகள் என்று சம்பந்தனுக்கு தெரியாதா? புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று சம்பந்தன் அன்று சொன்னது புலிகளை திருப்திப்படுத்தவா? சொன்னார். அவர்களினால் (புலிகளால்) உருவம் பெற்ற கூட்டமைப்பு பற்றி ஜனநாயக போராளிகள் கட்சி பிரமுகர் வேந்தன் இவ்வாறு சொல்லியுள்ளார்.

எங்களுடைய தலைவரினால், எங்களால் வளர்த்தெடுக்கப்பட்ட கூட்டமைப்பை பலம்பொருந்திய கட்சியாக உருவாக்கத் திட்டமிட்டிருந்தோம். 2004ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலைவரை சைக்கிளில் வீடு வீடாகச் சென்று வாக்கு கேட்க கட்சியை வளர்த்திருந்தோம் என்றும் கூட்டமைப்பிலுள்ள ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இந்த மண்ணிற்காகவும், மக்களுக்காகவும், தங்கள் பிள்ளைகளை அர்ப்பணிப்பார்களா? புலிகளையும் எமது மக்களையும் வைத்து கேவலமான பிழைப்பு நடாத்துகின்றார்கள். தேர்தல் வரும்வேளைகளில் புலிகளை இழுத்து தமிழ்தேசியம் கதைக்கின்றார்கள். பிரபாகரன் மாவீரன் என்றும் சொல்லுவார்கள். தேர்தல் முடிந்ததும் அவர்களது கொள்கை வேறு, எங்களின் கொள்கை வேறு என்று கூறுகின்றார்கள். கூட்டமைப்பினர் மக்களுக்கு சிறந்த சேவையாற்றி இருந்தால் நாங்கள் தேர்தலில் போட்டியிட்டிருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது என்றும் வேந்தன் சொல்லியுள்ளார்.

முக்கியமான காலகட்டமான இவ்வேளையில் ஜனநாயக போராளிகள் அமைப்பு தோற்றம்பெற்றதும், அவர்கள் உண்மைகளை மக்கள் முன்னெடுத்துக் சொல்வதும், கூட்டமைப்பின் கோட்டையிலே ஓட்டைவிழும் கதையாகவே இருக்கப்போகின்றது!

கணிசமான வாக்குப் பலம் ஜனநாயகப் போராளிகள் அமைப்புக்கு கிடைக்க வாய்ப்புள்ளது என்று மக்கள் கருதுகின்றனர். இதேவேளை கூட்டமைப்பினரால் தூக்கியெறியப்பட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பத்மினி, குதிரை கஜேந்திரன் ஆகியோர் இந்த தேர்தலில் சைக்கிள் சின்னத்திலே போட்டியிடுகின்றனர். இவர்களுக்கு விழப்போகும் வாக்குகளும் கூட்டமைப்பின் வாக்குகளில் சேதாரத்தையே உண்டு பண்ணப்போகின்றது. கூட்டமைப்பின் அதிருப்தியாளர்கள், போராளிகள் குடும்பத்தினரின் வாக்குகளும் சிதறுண்டு போகவே வாய்ப்புகள் காணப்படுகின்றது.

இதேவேளை ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினர் அரசியலில் நீரோட்டத்திலே களமிறங்கிய பின்பு மக்களுக்கு நிறையவே செய்துள்ளனர்.

இருந்தும் கூட்டமைப்பினர், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியை காட்டிக்கொடுப்பவர்கள், எட்டப்பர்கள் என்றெல்லாம் சொல்லி வருகின்றனர். ஆனாலும் அக்கட்சியின் வாக்கு வங்கியிலே சரிவு உண்டானதாக இல்லை. ஏனெனில் மாகாண சபை தேர்தலின் பின் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஈ.பி.டி.பியின் வாக்கு வளர்ச்சியடைந்தே காணப்படுகின்றது. இம்முறை அவர்கள் தமது சொந்த சின்னத்திலே களம் குதிப்பதனால் இன்னும் செல்வாக்கு கூடினாலும் இம்முறையும் மூன்று ஆசனம் கிடைக்கும் என்பது சந்தேகமே. ஆசனக் குறைப்பின் காரணமாக ஒரு தளம்பல் ஏற்படலாம்.

இருந்தும் மக்களுக்கான முழுமையான சேவையை செய்துவரும் ஒரு கட்சி என்னும் வகையிலும் மற்றும் வன்னியிலும் மிகுந்த செல்வாக்கு ஈழ மக்கள் ஜனநாயக கட்சிக்கு உள்ளமையினாலும் ஈ.பி.டி.பியினரின் வளர்ச்சியிலே தளர்ச்சி காணமுடியாது என்ற கருத்தும் நிலவுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியினை பொறுத்த மட்டிலே அக்கட்சியின் வடக்கின் பிரதான வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன் தனது கட்சிக்கு மூன்று ஆசனம் கிடைக்கும் என்று கூறியுள்ளார்.

இது ஒருபோதுமே சாத்தியமில்லை. இருந்தும் அவர்களின் வடக்கின் இருப்புக்கு பாதகம் உண்டாகாது என்ற கருத்தே நிலவுகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இம்முறை தனித்து களம் இறங்குகின்றது! அங்கயன் இராமநாதன் தலைமையில் வெற்றிலைச் சின்னத்திலே போட்டியிடுகின்றது. இதுவரை காலமும் ஈ.பி.டி.பி.யினருக்கும் இணைந்து இருந்தமையினால் வெற்றி வாய்ப்பு கிடைத்தது. இருந்தும் அங்கயன் இராமநாதனும் கணிசமான வேலை வாய்ப்புக்களை இளம் சந்ததிக்கு வழங்கியுள்ளார். வாங்கியவர்கள் நன்றியினை மறக்காதவரை வெற்றியினை நோக்கி நகரவே வாய்ப்புக்கள் உள்ளன எனும் கருத்தும் நிலவுகின்றது.

கடந்த பல தேர்தல்களில் தோல்வியடைந்த தமிழர் விடுதலைக் கூட்டணியும் நீதித்துறை சார்ந்த முக்கியஸ்தர் ஒருவரின் தலைமையிலே போட்டியிடுகின்றது. இவர்களினால் வெற்றிக்கனியினைப் பறிக்கமுடியுமா? என்பது மக்களின் கரங்களிலே தங்கியுள்ளது. இக்கட்சியும் கூட்டமைப்பினரின் தவறுகளை சுட்டிக்காட்டியே வாக்கு வேட்டையாடுவார்கள் என்னும் கருத்து மேலோங்கி நிற்கின்றது.

ஜனநாயக போராளிகள் அமைப்பு புதிய கட்சியாக சுயேட்சையாக சிலந்தி வலை சின்னத்திலே களமிறங்குகின்றனர்.


ஆக ஏழு ஆசனங்கள் மட்டுமே உள்ள வடக்கின் யாழ்.மாவட்ட நிலை என்னவாக அமையும் என்பதனை தீர்மானிக்கும் சக்தி மக்களிடம் மட்டுமே உள்ளன.



Dr. சி.யமுனாநந்தா

# நீர் வெறுப்பு நோய்





**நீர் வெறுப்பு நோய் எமது சமூகத்தில் உருப்பெருக்கம் அடையும் உயிர்க்கொல்லியாக மாறுபட்ட பரிமாணத்தில் உருவெடுத்துள்ளது. பொதுவான சுகநலப் பிரச்சினையான நாய். பூனை போன்ற செல்லப்பிராணிகளின் தீண்டல்களின் பாதிப்பினை இக்கட்டுரை விளங்குகின்றது. இந்நோய் தொடர்பான விழிப்புணர்வினை மக்கள் அறியவேண்டியது அவசியமாகிறது.**

## தொற்றுக்கு ஏதுவான நிலையில் சிகிச்சை
## PET (Post Exposure Treatment)

| | மிருகத்தின் நிலை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அவதானிக்கக் கூடியது | ஆரோக்கிய மானது | நாய்க்குத் தடுப்பூசி மருந்து கொடுக்கப்பட்டது | நாய்க்குத் தடுப்பு மருந்து கொடுக்கப்படவில்லை | சந்தேகத்துக்குரிய நோய்வாய்ப்பட்ட நாய் | நோய் உறுதிப்படுத்திய நாய் | காட்டு மிருகம் | நோயாளிக்கான முகாமைத்துவம் |
| தொற்றுதலுக்கு பாரிய ஏது நிலை | ✓ | ✓ | | ✓ | | | | PET தாமதித்து →14 நாட்களுக்கு நாயினை அவதானித்தல். |
| | ✓ | | | | ✓ | | | PET தொடங்கி →14 நாட்களுக்கு நாய் ஆரோக்கியமாக இருந்தால் நிறுத்தலாம். |
| | | | | | | ✓ | | PET தொடங்கி முழுச் சிகிச்சை |
| | | | | | | | | PET தொடங்கி முழு அளவு |
| | X | | | | | | ✓ | முழுச் சிகிச்சை |
| தொற்றுக்கு சிறிய ஏது நிலை | ✓ | ✓ | ✓ | | | | | தாமதித்து 14 நாட்களுக்கு அவதானிக்கவும் |
| | ✓ | | | | | | | தாமதித்து |
| | | | | | ✓ | | | PET தொடங்கி முழுச் சிகிச்சை |
| | X | | | | | | | PET முழுவதும் |

### 2. தொற்றலுக்கான சிறிய ஏதுநிலை

- தனியான, மெல்லிய கடித்தல் அல்லது கீறல், குருதி வெளிவராமை, (கால்கள், கைகள், வயிறு, முதுகு) ஆகிய இடங்களில்.
- நகத்தினால் தோலில் கீறல்கள்
- திறந்த காயத்தில் விலங்கின் உமிழ்நீர் சிந்துதல்.
- தனிமையான அல்லது பல கடிகள் அல்லது கீறல்கள், குருதிப்பெருக்கு இன்றி உடலின் எப்பாகத்திலும்.
- பாதிக்கப்பட்ட பசு அல்லது ஆட்டின் பாலை கொதிக்கவைக்காது குடித்தல்.

### கடித்தல் விலங்கினை கணிப்பிடல்

**I. தொற்றுக்கு பாரிய ஏதுவான நிலையில் காயம் கடித்த நாயினை அல்லது பூனையினை**

- விலங்கு ஆரோக்கியமாகவும், அவதானிக்கக்கூடியதாகவும், இருப்பின், குறைந்தது இரண்டு விலங்குகளின் விசர் தடுப்பு மருந்து அவ்விலங்கிற்கு ஏற்றப் பட்டும், அதில் கடைசி தடுப்பு மருந்து கடந்த ஒரு வருடத்தினுள்ளும், இரண்டு வருடத்திற்கு மேற்படாமலும் இருப்பின் தொற்றுக்கு ஏதுவான நிலைக்கான சிசிச்சையினை பிற்போட்டு, விலங்கினை 14 நாட்கள் அவதானிக்கலாம்.

- விலங்கு சந்தேகத்திற்கு உரியதாக அமைந்து ஆனால் அவதானிக்கக்கூடிய தாக அமையின் தொற்றுக்கு ஏதுவான நிலையில் சிகிச்சையினை ஆரம்பித்து, கடித்த மிருகத்தினை அவதானித்து 14 நாட்களுக்கு மிருகம் ஆரோக்கியமாக இருக்குமாயின் தடுப்பு மருந்தினை நிறுத்தலாம்.

(தொடரும்...)



திருமணமாகி ஆறுமாதமான நிலையில் மகள்... சுபா கையில்... பெட்டியுடன்.. தாய்வீடு திரும்பினாள்! அவள் பதை பதைத்துக் கொண்டு தனியாக வரத் தாயும் தந்தையும் அதிர்ச்சி அடைந்தனர்.

என்னடி... இது.. ஒரு போன்கூட பண்ணாமல்... திடீர்ன்னு... கையில் பெட்டியோடு வந்துநிக்குறே...? என்று கேட்டாள் தாய் சத்தியவதி.

"ஏன் வரக்கூடாதா? மகள் எதிர்க்கேள்வி?" வரக்கூடாதுன்னு நான்... அப்பா சொல்லலே. உன் கணவனோடு சேர்ந்து வந்திருந்தா கேள்வி இல்லை. தனியாக வந்து நிற்கிறியோ... அதனால்தான் கேட்கிறேன்... பதில்சொல்லாமல் தாயை எரித்து விடுவதைப்போலப் பார்த்தாள் சுபா... ஒரே மகள். செல்ல மாக வளர்ந்த பெண். ஆயிரம் கனவு-களோடு ஏராளமான காசு பவுண் கொடுத்து ஆயிரமாயிரம் கனவுகளோடு மணமுடித்து புகுந்த வீடு அனுப்பினார்கள்!

மாப்பிள்ளை பல வருடம் வெளி நாட்டில் வேலை செய்துவிட்டு வந்து இங்கு அரச நிறுவனம் ஒன்றில் நல்ல வேலைபார்க்கிறார். கைநிறைய சம்பளம். அந்த நிறுவனம் கொடுத் துள்ள வீட்டில் அவர்கள்... வசித்து வந்தார்கள். தாய் கேட்ட கேள்விக் கெல்லாம் பதில்சொல்லாமல் பக்கத்தில் உள்ள தோட்டக் கிணத்துக்கு குளிப்பதற்கு புறப்பட்ட சுபாவை யாரும் தடுக்கவில்லை! தோட்ட கிணத்துக்கு பக்கத்தில் அவளின் சிநேகிதி மரகதத்தின் வீடு தன்னுடன் ஒன்றாக படித்த பழைய தோழியை சந்தித்தாள். அவளுக்கும் திருமணமாகி ஒரு கைக்குழந்தையும் உண்டு.

தன் உள்ளத்தின் வேதனைகளை யெல்லாம் ஆதியில் இருந்து அந்தம் வரை ஒன்றுவிடாமல் தோழியிடம் சொல்லிமுடித்தாள். சுபா... மல்லிகா... திரும்மணமாகி நானும் அவரும்... மனமொத்த வாழ்க்கை வாழ்ந்து வந்தோம். இவர்... வெளிநாட்டில் "வாறினில்" வேலை செய்த ஏழு... எட்டு வருடமாக... அங்கு ஒரு முதலாளி வீட்டில் வேலை செய்த எங்கள் நாட்டு பெண்ணுடன் நெருங்கிய தொடர்புகள்... இருந்ததாம். இவரே என்னிடம் சொன்னவர். எப்போ இலங்கையில் கால்வைத்தவுடன் அந்த தொடர்புகள் ஒன்றும் இல்லை என்று மாமாவும் மாமியும் இது எல்லாம் அறிந்து இவருடன் சண்டை பிடித்தவர்கள்.

மல்லிகா... திருமணமாகி... நானும் அவரும் பழையது எல்லாம் மறந்து மனமொத்த வாழ்க்கை வாழ்ந்து வந்தோம்... இவரது நடத்தையில் மாற்றம் ஏற்பட்டது... இரவில் வீட்டு க்கு நேரம்... கழித்து வரத்தொடங்கினார்... ஏன் இவ்வளவு நேரம் கழித்து வருகிறீர்கள்? என்று கேட்டால்.. ஏதோ ஏதேதோ... சாக்குப்போக்கு சொல்லுவார்... அவர் எதையோ என்னிடம் மறைக்கிறார்... என்று சந்தேகம் என் மனசில் ஆழமாக. வேரூன்றத் தொடங்கிவிட்டது.. சரி... இவரைக் கொஞ்சநாள் காயப் போட்டால்தான் சரியாக வருவார் என்று நினைத்தேன். அதுதான் இங்கே புறப்பட்டு வந்துவிட்டேன்.

சுபா... நீ.. இங்கே.. உன் பெற்றோர் வீட்டுக்கு வந்து... எவ்வளவு நாள் ஆகிறது... இரண்டு நாட்கள் ஆவுது. போன்கூட பண்ணலையா... வரக்கூட இல்லையா உன்னைத்தேடி.. தப்பு பண்ணிட்டியே சுபா... நீ அவரைக் காயப்போட்டு விட்டதாகப் பீற்றிக் கொள்கிறாயே... அவர் எங்காவது மேய்ச்சலில் புகுந்துவிட்டாரென்றால் என்ன செய்வே? நீ உந்த ரீவி.. நாடகங்கள் பார்ப்பது இல்லையா? தவறாமல்... ஒன்றும்விடாமல் பார்ப்பேன். அதுதானே பொழுது போக்கு எனக்கு. "ஒரு கை ஓசை" தொடரில் மனைவி சானுவை அவள் கணவன்படுத்தும் பாடும் பாத்தும் நீ இப்படி பண்ணிட்டியே! எடி விசரி ஏதும் தப்பு நடந்து நேருக்கு நேர் கண்டிருக்கணும் அல்லது இதைப் பற்றி உனது அப்பா அம்மாவுக்கு அல்லது மாமா... மாமிக்கு இதைப்பற்றி ஒன்னும் சொல்லாமல் கொம்மா வீட்டுக்கு தனி யாக எந்த துணிவுடன் திடீரென்று புறப்பட்டுவந்தாய்.

சுபா... உனக்கு... முதல் எனக்கு... திருமணம் நடந்தது. இந்த இரண்டு வருடங்களில் எங்கள் குடும்பத்தில் எத்தனையோ ஓயாத அலை கள் வந்து போய்விட்டது. என்னுடன் சண்டை வரும்போது சொல்வார்... இங்கு இனி உன்னுடன் இருக்கமுடியாது. இப்பவே புறப்படு. எனக்கு பெரிய வீடு வளவு இருக்குது. என்று நான் சொல்கிற பதிலால் பெட்டிப்பாம்பாக அடங்கிவிடுவார். சுபா அந்த விசயத்தில் ஆண்கள் நீறுபூத்த நெருப்பு மாதிரி.

# பெண் புத்தி பின் புத்தி



எப்ப கொழுந்துவிட்டு எரியும்னு சொல்லமுடியாது... உன் கணவரை நீ நல்லா புரிஞ்சுக்க. அப்புறம் அவர்கிட்ட நயமாக நடந்து நளினமாகப் பேசி அவர் மேலே உனக்கு இருக்கிற சந்தேகங்களை நிவர்த்தி பண்ணிக்கிற வழியைப்பாரு. அதை விட்டுட்டு... காயப்போடுறேன்னு சொல்லிவிட்டு இப்படிப் பொறுப்பு... இல்லாம பிறந்த வீட்டிலே வந்து உட்கார்ந்திருக்கியே. எவளாவது அவரைப் பிடித்து முந்தானை யில் முடிஞ்சுக்க போறா. நீ அவரை காயப்போடுகிறேன் என நினைத்து நீதான் காய்ந்த சருகுபோல படபடக்கிறாய்.

சுபாவின் மனசுக்குள் சுனாமி அலை வீசத் தொடங்கிவிட்டது. எதிர்த்த வீட்டில் சாந்தி... என்று ஒரு பெண் கணவனைப் பிரிந்து... தனியே வாழுகின்றாள். சுமார் 35 - 40 வயது இருக்கும். ஆனால் சின்ன வயது போலத் தெரிவாள். அவளைப் பற்றி நல்ல பேச்சு கிடையாது! எதிர்த்த வீட்டு குமுதினி தக்காளிப் பழம்போல தளதளன்று இருப்பாளே. ஐயையோ இவர் தனியா வேறே இருக்கிறாரே.. ஏதாச்சும் ஏடாகூடமா நடந்துவிடுமோ என்றெல்லாம் எண்ணிக் குமுறினாள்.

எவ்வளவு வேகமாக வீட்டுக்கு திரும்ப முடியுமோ? அவ்வளவு வேக வேகமாக வீட்டுக்கு ஓடிவந்தாள். சேலையை மாற்றிக்கொண்டு கையில் பெட்டியை எடுத்தவாறே நான் போயிட்டு வர்றேம்மா என்று மட்டும் ஒரு வரியில் சொல்லிவீட்டுப் புறப்பட்டாள்!

சத்தியவதி ஆச்சரியமாகப் பார்த்தாலும் தடுக்கவில்லை.

பரந்தன் சந்தியில் இறங்கி தட்டுவன் கொட்டிக்கு ஆட்டோ பிடித்தாள்... பூட்டி யிருந்த வீட்டைத் தன்னிடமிருந்த மாற்றுச் சாவியால் திறந்தாள். சுபா கையிலிருந்த பெட்டியை ஒரு பக்கமாக வைத்துவிட்டு வீடு முழுவதையும் மோப்பம் பிடித்தாள். படுக்கை அறையையும் துருவித்துருவிப் பார்த்தாள். எந்த மாற்றமும் தெரிய வில்லை எதிர்வீட்டை நோக்கினாள். வீடு பூட்டப்பட்டு இருந்தது.

ஐயையோ... இவரை அழைத்துக் கொண்டு எங்காவது போயிருப்பாளோ? அவள் பதை பதைத்தபோது வேகமாக "ஸகூட்டி"யில் வந்து இறங்கினான் அவள் கணவன் ரவி.

வா... சுபா.. எப்ப.. வந்தே இப்பத் தான்.. வந்தியா..? ஊரில்... மாமா மாமியெல்லாம் சுகம்தானே? என்று நயமாகக் கேட்டான். எல்லாம் நல்லா இருக்காங்க.. என்ற சுபா நீங்கள் எங்கே போயிருந்தீங்க? என்று கேட்டாள். இன்று ஞாயிற்றுக்கிழமைதானே தியேட்டரில் படம்பார்த்து பல மாதமாச்சு. வீட்டில் நீயும் இல்லையா நண்பர்களுடன் "எலி" படம் பார்க்கப்போனேன் என்றான். அவன்...

சுபா.. இப்படி வா.. நான் சொல்வதை கவனமாகக் கேட்கவேண்டும்... நீ.. இது இரண்டாவது முறை.. எனக்கு சொல்லாமல் உனது வீட்டுக்குபோனது திருமணமாகி ஒரு வருடம் கூட ஆகவில்லை. இப்படி நீ நடந்தால் என்னைப் பற்றி ஊர்ச்சனம் என்ன கதைக்கும். பெண்டாட்டி தாசன் என்றுதான் சொல்லும். நீ என்னைப் பற்றி வீண் கற்பனைகள் பண்ணிக் கொண்டு ஒன்றும் சொல்லாமல் கொள்ளாமல் ஏதோ நான் கழுத்தைப் பிடித்து தள்ளியதுபோல் போகிறாய் வருகிறாய். இது ஒரு குடும்பப் பெண்ணுக்கு அழகல்ல. இதுவே கடைசி முறையாக இருக்கட்டும் இனிமேல் இப்படி செய்தால் அவ்வளவு தான் நீ பிறந்த வீட்டிலேயே இருக்க வேண்டிவரும்.. அதோ பார் மாடுகள்... ஓடி... ஓடி.. எத்தனை இடங்களில் மேயுது பார்த்தியா. அதே மாதிரி என்னையும் எடைபோட்டு... உன் தலையில் நீயே மண்ணை அள்ளிக் கொட்டிப் போடாதே... குடும்பத்தை கோயிலாக மதித்து வாழவேணும். நான் கஸ்ரப்படுவது, உழைப்பது நாங்கள் நலமுடன் செல்வாக்காக இருக்கவேணும் என்றுதான். உன் வயிற்றில் வளரும் குழந்தைமேல் சத்தியம். இனிமேலும் என் பொறுமையை சோதிக்காது என்னை முட்டாள் ஆக்கவேண்டாம். சரி... சரி... யாரோ வருகினம். இத்துடன் இதை எல்லாம் கெட்ட கனவாக மறந்துவிடு.

இரவு அவளே கணவனை சினிமா வுக்கு... அழைத்தாள். இருவரும் ஸ்கூட்டியில் போனார்கள் அவள்.. அவனுடன் பல்லிபோல் ஒட்டிக் கொண்டாள். படம்பார்த்ததும் ஹோட்டலில் இரவு கொத்துரொட்டி சாப்பாடு. வீடு... திரும்பும்போது ஸ்கூட்டியில் அவள் அவனோடு அழுத்த ஒட்டிக்கொண்டாள். அவளது அழுத்தத்தைக்கொண்டே அவளது "மூடு" அவனுக்குத் தெரிந்தது! வழியில் ஸ்கூட்டியை நிறுத்தி ஏதோ வாங்கிக்கொண்டான்.

ஐயாவுக்கு "மூடு" வந்துவிட்டது! என்று அவள் உள்ளுக்குள் சிரித்துக்கொண்டாள்!

அன்று இரவு அவர்களுக்கு விடியாத இரவாக ஆகிவிட்டது. "காதல் சுனாமி" அவர்களைப் புரட்டி எடுத்தது! இரண்டுநாள் பிரிவை ஒரே நாளில் தீர்த்துக்கொண்டார்கள்.

**வ. குணபாலசிங்கம், நல்லூர்.**






# வேற்றுக் கிரகவாசிகளின் கதை

ஒரு காலத்தில் உயிர் வளர்ச்சிக்கு சாதகமாக இருந்த செவ்வாயின் வளி மண்டலம், நம்மில் பலரும் வணங்கும் சூரியனின் நாசகரமான கதிர்வீச்சு களினாலேயே தகர்க்கப்பட்டது. அதனால் நீர் வற்றி, வறண்ட குளிர்ந்த பிரதேசமாக மாறிவிட்டது.

குழந்தை பிறக்கும்போதே இறப்பது போல, பிரபஞ்சத்தில் ஒரு கோளில் உயிர்கள் தோன்ற ஆரம்பிக்கும் சமயம், அந்தக் கோள் பிரபஞ்சத்தின் அழிவுசக்தியால் ஒரு உபயோக மில்லாத இடமாய் மாறிவிடுகிறது.

பூமியில் இந்த காந்தப்புலன் வடக்கிலிருந்து தெற்காக வந்து கொண்டிருக்கின்றது. அப்படி தொடர்ந்து எப்பொழுதுமே நடந்துகொண்டிருக்காது. சில காலத்திற்குப் பிறகு அது தடம் மாறி தெற்கிலிருந்து வடக்காக செல்ல ஆரம்பிக்கும். அதிர்ச்சியான் செய்தி என்னவென்றால், அந்த மாற்றம் பூமியில் ஆரம்பித்துவிட்டது என்று சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தால் பூமியில் உள்ள உயிரினங்கள் எல்லாம் அழிந்து போகும் வாய்ப்புண்டு. இதுபோன்ற பல அழிவுகள் எப்போது வேண்டு மானாலும் வரலாம் என்பதனால்தான், மனிதனை வேறு ஒரு கோளில் குடியமர்த்துவதற்கு அறிவியலாளர்கள் முயற்சிகள் ஆரம்பித்துள்ளனர்.

நமது சகோதரி என்று அழைக்கப் பட்ட வெள்ளி, பித்தளை ஆனாலும் பரவாயில்லை. பழைய துருப்பிடித்த தகரம் ஆகிவிட்டது. எல்லோராலும் ரசிக்கப்படும், ஒருகாலத்தில் பூமியைப்



போன்று இருந்த வெள்ளி, அதிபயங்கர புயல்களையும், கந்தக அமில மழையையும், நச்சு வாயுக்களை கொண்டதுமான, உயிர்கள் பரிணமிக்க முடியாத ஒரு நரகமாக மாறிவிட்டது.

"சொர்க்கமாக நாம் நினைத்தது வெறும் நரகமாக மாறிவிட்டது". வெள்ளி மற்றும் செவ்வாயின் பரிணாம வளர்ச்சியைக் காணும் நாம், நம் பூமிக்கும் வயதாகிக் கொண்டிருக் கின்றது என்ற உண்மையை மனதில் கொள்ளவேண்டும்.

நமக்கெல்லாம் ஆதாரமாயிருக்கும் சூரியனுக்கும் வயதாகிக்கொண்டு இருக்கிறது. அது தன் பாதி வயதை எட்டிவிட்டது.

ஏராளமான குழந்தைகள் பிறக்கும் போது இறப்பது, ஐந்து வயதை கடப்பதற்குள் போதிய உணவின்றி இறப்பது, வாலிபப் பருவம் அடைவதற் குள் இன்னும் ஏராளமானவர் இறப்பது போல, பிரபஞ்சத்திலும் உயிர்தோன்றும் போதே அழிந்துபோகும் கோள்கள். உயிர்தோன்றிய சில காலத்திலேயே அழிந்துபோகும் கோள்கள், உயிர் தோன்றி மனிதனைப் போன்ற பரிணாம வளர்ச்சி அடைவதற்குள் அழிந்து போகும் பல கோள்கள் உள்ளன. ஆகவே பிரபஞ்சத்தில் பலப் பல நிலைகளில் உயிர்கள் பரிணாம வளர்ச்சியடைந்தக் கோள்களை காண வாய்ப்புண்டு.

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய்விடுமோ?

சரி, ஒரு கோளிலிருந்து செய்தி வந்துவிட்டது. அதற்கு நாமும் பதில் அனுப்பிவிட்டோம். இருவருக்கும் மற்றவர்கள் பிரபஞ்சத்தில் எங்கிருக் கின்றனர் என்று அறிந்துவிட்டது. மேலே என்ன செய்வது? ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள் அங்கேயும் நாம் இங்கேயும் இருந்து கொள்ளவேண்டியது தான். எப்படி அவர்களைப் போய் சேர முடியும்?

மேலைநாடுகளில் நடந்த விஞ்ஞான வளர்ச்சி நம்மை ஆச்சரியப்பட வைக் கின்றன. பாராட்டப்படவேண்டிய பல முன்னேற்றங்கள். நிலவுக்கு மனிதன் சென்றுவிட்டான். ஆனால் பிரபஞ்ச தொலைவுகளை கணக்கில் எடுக்கும் போது மிகமிக அருகில் உள்ள நிலவு வரைக்கும்தான் மனிதன் சென்றுள்ளான் என்பதுதான் உண்மை. இன்னும் சில வருடங்களுக்குப் பிறகு சூரியனின் மற்ற கோள்களுக்கும் செல்லமுடியலாம். ஆனால் பல நட்சத்திரக் கூட்டங்களைக் கடந்து, வேறு எங்கோ உள்ள ஒரு கோளுக்குச் செல்ல இப்போதைய விஞ்ஞானத்தில் வழியில்லை. ஏனென்றால் நட்சத்திரங்களைக் கடந்து செல்வது என்பது மிகமிகக் கடினம்.

நமக்கு மிக அருகில் இருக்கும் நட்சத்திரம் சுமார் நான்கு ஒளியாண்டுகள் தொலைவில் இருக்கின்றது. ஒளியாண்டு என்பது சுமார் ஒன்பதரை இலட்சம் கோடி கிலோமீற்றர்களாகும். அதாவது அருகிலுள்ள நட்சத்திரமே சுமார் நாற்பது லட்சம் கோடி கிலோமீற்றர்கள் தொலைவில் உள்ளது. சில புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கோள்கள் ஆயிரம் ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளன.

மீண்டும் நினைவில் கொள்ள வேண்டியது வினாடிக்கு மூன்று இலட்சம் கிலோமீற்றர்கள் செல்லக் கூடிய வாகனத்தில் பயணித்தால் அந்த நட்சத்திரத்தை சென்றடைய நான்கு ஆண்டுகள் ஆகும். வேண்டிய வேகம் வினாடிக்கு மூன்று இலட்சம் கிலோ மீற்றர். நாம் நம் விஞ்ஞான வளர்ச்சியில் அடைந்துள்ள வேகம் மிகக் குறைவு. விண்மீன்களை போய்ச்சேர, இப்போது நம்மிடமுள்ள வாகனத்தில் சென்றால் பல நூறு ஆண்டுகள் பிடிக்கும்.

பல நூறு ஆண்டுகள் விண்வெளியில் பயணம் செய்வது மிகமிகக் கடினம். அத்தனை காலத்தில் அண்டவெளியின் கதிர்வீச்சு மனிதனைக் கொல்ல நிறைய வாய்ப்புகள் உள்ளன. வெகுகாலம் பூமியைவிட்டு பயணிக்கும்போது நிச்சயமாக மனிதன் மனத்ளவில் பாதிக்கப்படுவான். அவன் உடலுறுப்புக் கள் பல பாதிக்கப்படும். எல்லாவற்றிற்கும் மேலாக, மனிதனின் ஆயுட்காலம் அதற்கு இடம்கொடுக்காது.

ஒரு நீண்ட அண்டவெளி பயணத்தில் மனிதனுக்கு ஏற்படும் பல பிரச்சினை களைத் தீர்க்க கடும் ஆராய்ச்சியில் இறங்கியுள்ளனர் அறிவியலாளர்கள். உதாரணத்திற்கு ஒன்றே ஒன்றை எடுத்துகொள்வோம். முக்கியமானது மனிதனின் ஆயுட்காலம். அதை மரபணு மாற்றம் மூலமாக நீட்டிக்க வழி வகை களை ஆராய்ந்து, அந்த ஆய்வின் விடையை சில பிராணிகளில் செலுத்தி அதன் வாழும் காலத்தை அதிகரித்து ஆரம்ப வெற்றியும் பெற்றுள்ளனர் என்பது மிகவும் முக்கியமான செய்தியாகும்.

துருவக்கரடிகள் வருடத்தில் பல மாதங்கள் கடும் குளிர்காரணமாக, உண்ணாமல் உறங்கிக்கொண்டே இருக்கும். மாதக்கணக்கான இந்த தொடர் உறக்கத்தை ஆங்கிலத்தில் ஹைபெர்நேசன் (HYBERNATION) என்று கூறுவார்கள்). அந்த மிருகத்தில் இதற்குக் காரணமான மரபணுக்களை கண்டுபிடித்து அதை மனிதனின் உடலில் செலுத்தி, பயணநேரத்தை தூங்கிக் கழிக்க வழிசெய்யும் உத்தியை விஞ்ஞானிகள் பயன்படுத்த முயற்சி செய்கின்றனர்.

ஆண், பெண் இணையாகத்தான் அனுப்பமுடியும். குழந்தை பிறப்பு, வளர்ப்பு உட்பட நீண்ட பயணத்தின் போது விண்வெளி வீரர்கள் சந்திக்கும் இதுபோன்ற பிரச்சினைகள் ஏராளம். அவை ஒவ்வொன்றையும் தீர்க்க விஞ்ஞான உலகம் கடினமான, ஆச்சிரியப்படவைக்கும் ஆராய்ச்சிகளை செய்துகொண்டிருக்கின்றது. இந்த வகையான ஆராய்ச்சிகளில் வெற்றி கிடைக்குமா என்பதெல்லாம் பொறுத்திருந்து பார்க்கவேண்டியதுதான்.

அதனால் வேறு ஒரு கோளில் அறிவுஜீவிகள் இருப்பது தெரிந்தும் கூட, கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பதுபோல நாமும் அவர்களும் அவரவர் இடத்தில் இருந்துகொள்ள வேண்டியதுதான். சந்திப்பதற்கு இப்போது வழியே இல்லை.

**வருங்காலத்தில் என்ன நடக்கும்?**

வருங்காலத்தில் அறிவியல் மேலும் வளர்ச்சி அடையும்போது, ஒளியின் வேகத்தில் செல்லும் வாகனத்தைக் கண்டுபிடித்து, அதில் பயணம்செய்யும் சிரமங்களையும் நிவர்த்தி செய்தபின் அல்லது வேறு சில உத்திகளின்மூலம் நட்சத்திரப் பயணத்தை எளிதாக்கி, பூமியை விட்டுச்சென்று மனிதன் வெகுதொலை வில் உள்ள பல கோள்களில் வசிக்கத் துவங்குவான். அப்போது விசித்திரமான, வினோதமான, எதிர்பார்க்காத ஒரு பரிணாம வளர்ச்சி அந்த கோள்களில் உள்ள மனிதர்களுக்கு நடக்கும்.

விண்வெளி ஆராய்ச்சியின் ஆரம்ப கட்ட நாட்களில் விண்வெளியில் சிலநாட்கள் இருந்துவிட்டு வந்த விண்வெளி வீரர்கள், இங்கே பூமியில் இறங்கும்போது, அவர்களால் நிற்க முடியாது. அவர்களை தூக்கிக்கொண்டு தான் செல்வார்கள். ஏனென்றால் வெளியில் ஈர்ப்பு விசை இல்லை. நம் கைகளைக் காட்டிலும் கால்கள் பலமானதாக இருக்கக் காரணம், நாம் நடக்கும்போது நம் கால்கள் தான் ஈர்ப்புவிசையை எதிர்த்து நம் உடலை தூக்கிக்கொண்டு செல்கின்றது. அதனால் கால்கள் வலுப்பெறுகின்றன. ஈர்ப்பு விசை இல்லையென்றால் கால் கள் கைகளைப் போலத்தான் இருக்கும். அதனால்தான் விண்வெளி வீரர்கள் சில மாதங்கள் கழித்து திரும்பி வரும்போது, அவர்களால் நிற்க இயலவில்லை.

(தொடரும்...)

# பூக்காடு



"படையெடுத்து வருகிறார்கள்
பகைவர்கள்! உடைவாள்
உருவுங்கள் வீரர்காள்!"

முரசு அறைந்து அழைப்பு
விடுத்தது, சிரசு குனியாத
பல்லவ அரசு!

இதயச் சந்திரன் அழைப்பை
ஏற்றான்! கங்க நாட்டவர் தங்கத்
தமிழ்நாட்டை பங்கம்செய்வதற்கு
கங்கணம் கட்டிவிட்டார்!

பொங்குதமிழ் வீரம்
மங்கவில்லை என்று 'சிங்கத்
தமிழ் இளைஞர் எங்கும்
எழுந்திடுவீர்!

இதயச்சந்திரன் வீதி வீதியாக
பிரசார பீரங்கியாய் சுற்றினான்!
கங்கர் படைகளை நாங்கள்
எதிர்ப்பதா? விபரீதம்
நிகழும் வீண் அழிவு நேரும்!"

"கங்கரின் கையாட்கள்
கைநீட்டி வாங்கிய வெள்ளிக்
காசுகளுக்காக எள்ளி
நகையாடினார்கள்!"

கங்கர் ஆட்சியில் பொங்கும்
சலுகைகள்! பால் ஆறு ஓடும்!
தேன் ஆறு பாயும்!

பல்லவ அரசின்கீழ்
வாழ்ந்தது போதும்!
கங்கருக்கு வணங்கி
பங்கமின்றி வாழலாம்!

போரிட்டால் அழிவு வரும்
கும்பிட்டால் வாழ்வு வரும்!
கங்கரின் அடிமைகள்
கதையளந்து திரிந்தன!

"பல்லவ நாடு பணிந்து
போகாது! பகைக்கு பயந்து
குனிந்து நிற்காது!"

கங்கரின் அடிமைகளுக்கு
தர்ம அடி விழுந்தது!
எங்கள் மண்ணில்
வீசும் தென்றலும் எதிரிக்கு
மட்டும் தீயாய்தான் வீசும்!

எங்கள் மண்ணில் பாயும் அருவியும்
எதிரிக்கு மட்டும் காட்டாறாய் மாறும்!
எங்கள் மண்ணில் கத்தும் குயிலும்
எதிரியின் செவியில்
கேட்டானாய் கூவும்.

"எதிரியின் கையில் பொம்மையாய்
இருப்பதைவிட எங்கள் கையில்
நீர் துரும்பாக இருப்பினும்
பெரும் கௌரவம்!"

மக்கள் விளக்கியும் கங்கரின்
கையாட்கள் மனம் மாறவில்லை
இறுதியில் பல்லவ அரசு
கையாட்கள் அனைவரையும் கைது
செய்தது! பலருக்கு சிறைவாசம்.
சிலருக்கு சிரச்சேதம்.
மக்களின் கண்கள் கலங்கவே
இல்லை! வெடித்தது யுத்தம்
விரிந்தது களம்!

கங்கர் படைகள் வெள்ளமாய்
புகுந்தன! பல்லவர் படை
வெள்ளமாய் இல்லைத்தான் - ஆனால்
அவர்கள் உள்ளத்தில் உரம்
அதிகம்!

நீதி நம் பக்கம் மோதி
வென்றிடலாம்! வெற்றி வெற்றி
என மந்திரம் ஓதிடலாம் பல்லவ
மன்னன் பரமேஸ்வரவர்மன்
முழங்கினார்.

பல்லவ படையின் முன்னணி
தளபதி வல்லவன்
இதயச்சந்திரன் எதிரணி
அம்பினால் உயிரினை இழந்தான்!
செய்தி கேட்டதும் பல்லவ தேசம்
சோகத்தில் சுருண்டது!
பரமேஸ்வர மன்னரின்
உரநெஞ்சம் கசிந்தது!

களத்தில் இருந்து புகழுடம்பு
மீண்டது. இறுதி அஞ்சலிக்காக
பல்லவம் திரண்டது!

மக்கள் அழுதனர் மன்னனும்



அழுதான்! எதற்கும் அஞ்சாத
சிங்கம் மன்னன் அவனே அழுவதா?

மந்திரிகள் கலங்கினர்.

வீரனே! தீரனே! எங்கள்
வெற்றிக்கு வித்தான முத்தே!
மானம் எங்கள் உயிர் என்று
கானம் இசைத்தவனே!

"உன் வித்தில் பலர் வருவர்!
எம் வெற்றி அவர் பெறுவர்
நம் நெற்றி ஒருபோதும்
பகைவர் கால்மீது ஒற்றாது!
தாளாது! இது உறுதி"

பரமேஸ்வர வர்மன்
வீரவணக்கம் செய்தான்!
விழிகள் அருவியாகின!
அப்போது எழுந்த
புலவர் சொன்னார்.

தன் உயிரை அவன் தந்தான்!
தன் மக்கள் தன் தலைவன்
விழிகளிலே அருவியினை
வரவைத்தான் இதைவிடப் பேறு
வேறுண்டோ? இரந்து
பெறத்தக்க பேறு இதுவன்றோ!

உத்தமர்கள் விழிகள்
உகுக்கின்ற கண்ணீரால்
சாக்காடும் பூக்காடு
ஆகுமன்றோ அவன்
மரணமும் அழியாத
சாசனமாய் ஆகுமன்றோ!

"புரந்தார் கண் நீர்மல்கச்
சாகிற்பின் சாக்காடு
இரந்து கோள் தக்கது உடைத்து"

அதிகாரம்: 78 - பாடல்: 780

(04 ஆம் பக்க தொடர்ச்சி...)

## பேரம் பேசும் சக்தி எது?)

அதன்பின்னர் சிங்கள அரசிடம் தமிழர்கள் எதற்காகவும் கையைக் கட்டி காத்திருக்கத் தேவையில்லை என்றெல்லாம் கூறினார்கள்.

தமிழ் மக்கள் அதையும் செய்தார்கள். கூட்டமைப்பு பெரும்பான்மையோடு மாகாணசபையை வெற்றிபெற்றது. ஆனால் இன்றுவரை நூற்றுக்கு மேற்பட்ட நடைமுறைச் சாத்தியமற்ற தீர்மானங்களை ஆளுக்கொன்றாக நிறைவேற்றியுள்ளார்களே தவிர, இரண்டுவருடங்கள் ஆகப்போகின்ற நிலையிலும் முதலமைச்சர் குறை கூறிக்கொண்டுதான் திரிகின்றார்கள். கூட்டமைப்பினரோ இனிமேல்தான் மாகாண சபையோடு தாம் இணங்கிச் செயற்படப்போவதாக வாயளவில் கூறியிருக்கின்றார்கள்.

மாகாண் சபையை சவால்களுக்கு மத்தியிலும் விருப்பத்தோடும், ஆளுமையோடும் முன்னகர்த்தியிருக்கவேண்டும். வடக்கில் மத்திய அரசு செய்கின்ற தேசியப் பணிகளைத் தவிர ஏனைய அத்தனை காரியங்களையும் மாகாண சபை தனது வேலைத் திட்டத்திற்குள் கொண்டு வந்திருக்கவேண்டும். ஆனால் கூட்டமைப்பினர் அதைச் செய்யவில்லை.

இந்த நிலையில் தற்போது தேர்தலில் பேரம்பேசும் பலத்தை தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வழங்கவேண்டும் என்று கூட்டமைப்பு கோருகின்றது. அதுவும் வடக்கு, கிழக்கில் இருபது நாடாளு மன்ற உறுப்பினர்களை கூட்டமைப்பு வெற்றி பெறவேண்டுமாம். தமிழ் மக்கள் கடந்த காலத்தை சிந்திக்காமலும், கூட்டமைப் பினரின் ஏமாற்றையும், துரோகத்தையும் கவனத்தில் கொள்ளாமலும், செயற்திறனற்ற போக்கை பொருட்படுத்தாமலும், காதையும், கண்களையும் இறுக்கமாக மூடிக் கொண்டு வாக்களிக்கவேண்டுமென கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது.

கூட்டமைப்பினரின் துரதிர்ஷ்டம் என்னவென்றால், கடந்த ஆறு முக்கிய மான தேர்தல்களில் கூட்டமைப்புக்கு வாக்களித்து ஏமாற்றப்பட்ட தமிழ் மக்கள் தற்போது விழிப்புணர்வு பெற்றி ருக்கின்றார்கள். கூட்டமைப்பை நம்பி பயனில்லை என்ற எழுச்சி, கடந்த தேர்தல்களில் கூட்டமைப்புக்காக வாக்குக் கேட்டுத்திரிந்த பலர் குறிப்பாக முன்னாள் போராளிகள், மாணவர் அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள், தமிழ்த் தேசியவாதிகள் ஆகியோர் இம்முறை கூட்டமைப்புக்கு எதிராகவே களத்தில் இறங்கியிருக்கின்றார்கள்.

பேரம்பேசும் அரசியலில் அடிப்படையே கூட்டமைப்பின் தலைமைகளிடம் இல்லை. அதற்கான தகுதிகளான செயற்திறன், ஆளுமைத்திறன், இணக்கம், நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறை, வெளிப் படைத்தன்மை, ஜனநாயக வெளியைப் பாதுகாக்கும் தன்மை என்பவற்றை கடந்த காலங்களில் கூட்டமைப்பிடம் காணப்படவே இல்லை.

இந்நிலையில் பேரம்பேசும் சக்தி என்பது கூட்டமைப்பில் இருப்பவர் களுக்கு நாடாளுமன்றப் பதவிச்சுகத்தைப் பெற்றுக்கொடுப்பதும், சிங்கள அரசு சர்வதேசத்துக்குப் பயந்து காரியங்களைச் செய்யவேண்டும் என்பதுமா? இம்முறை ஆசனங்கள் குறைந்தால் சிலருக்கு பதவிகள் பறிபோகும் அப்படிப்போனால் அவர்களின் குடும்பங்கள் அனுபவிக்கும் சுகபோகங்களை இழக்கநேரிடும் என்பதே கூட்டமைப்பிலுள்ளோரின் பிரதான பீதியாகவுள்ளது.




✪ **சிந்தியா! இம்முறை 20 ஆசனங்களை வெற்றிகொள்ள வேண்டும் என்ற இலக்கை சம்பந்தன் முன்வைத்திருக்கிறார். இது நிறைவேறுமா?**

இருபது ஆசனங்களை பெற்றுக் கொள்வதை இலக்காக அவர் வைக்க வில்லை. தமிழ் மக்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவும், ஏனைய போட்டி யாளர்களுக்கு சவாலாகவும் அந்த இலக்கை தீர்மானித்துள்ளார். இதனோடு இன்னொன்றையும் கூறியிருந்தால் சம்மந்தரின் அபிமானிகள் எண்ணிக்கை பல இலட்சங்களாக அதிகரித்திருக்கும்.

அதாவது கூட்டமைப்பு இருபது ஆசனங்களை வெற்றி பெறாவிட்டால், தமது கோரிக்கையையும், தமது அரசியல் தலைமைத்துவத்தையும் தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டார்கள் என்பதை ஏற்றுக்கொண்டு, கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்கு நிறைவேற்றமுடியாத பல வாக்குறுதிகளை வழங்கி தவறாக வழிநடத்தியதற்காகவும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அரசியலில் இருந்து ஒதுங்கி குடும்பத்தோடு இந்தியாவிலேயே இருந்துவிடுகின்றேன் என்று கூறியிருக்க வேண்டும். பதவி ஆசையில் அவ்வாறு அவர் கூறவில்லை.

✪ **சிந்தியா! அரசாங்கம் புலி களுடன் செய்த யுத்தத்தில் அரசாங்கம் வெல்வதற்கு நானே முக்கிய காரணமாக இருந்தேன் என்று கருணா கூறியிருக்கிறார்.**

**அப்படியிருந்தும் அவருக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியில் இடம்கொடுக்காதது ஏன்?**

எத்தனை நாளைக்கு தேசியப் பட்டியலையே நம்பிக் கொண்டிருப்பது. அவர் நம்பிக்கை இருந்தால் சுயேட்சையாக மக்களிடம் போகவேண்டும் என்று அதே கட்சிக்காரர்கள் கூறியிருக்கின்றார்கள். இவருக்கு மட்டுமல்ல பலருக்கு இம்முறை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இடம் கொடுக்கவில்லை. வேட்புமனுவில் இடம்பிடிப்பதற்குள் மகிந்த ராஜபக்சவே பல சோதனைகளைச் சந்திக்கவேண்டியிருந்த சூறாவளியில் அம்மானுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் போயிருக்கும்.

✪ **வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியம் உருவாக்கப்பட்டால் மக்களுக்கு நன்மை கிடைக்குமா?**

அதைப் பற்றி நாம் ஏதாவது கூறினால் அதற்குள் சுழித்துவிடுவார்கள். முதலில் அந்த நிதியத்தை அமைக்கச் சொல்லுங்கள். அதைக் கூறிக்கொண்டே காலத்தை இழுத்தடிக்க வேண்டாம் என்றுதான் கூறுகின்றேன். எவ்வளவு வாக்குறுதி களை கூறிவிட்டார்கள். ஆனால் ஒன்றை யும் நடைமுறையில் காட்டவில்லையே.

✪ **யாழில் வீதி நாடகங்கள் அதிகரித்துள்ளதே. இதை நாடகத்தின் வளர்ச்சி என்று கருதலாமா? அல்லது மறைமுக பிரசாரமா?**

"கேள்வியும் நீங்களே, பதிலும் நீங்களே. இன்னொரு வகையாகக் கூறினால் வேடிக்கைபார்க்கும் சமூகமாக நாம் இருக்கின்றோம் என்பதை இவர்கள் சரியாக மதிப்பீடு செய்திருக்கின்றார்கள்.

✪ **தமிழ் இசை உலகு யாராலும் நிரப்ப முடியாத ஒருவரை இழந்துள்ளதே?**

எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாததுதான். படிக்காத மேதை அவர். நிறைந்த பண்பாளன். சக இசையமைப்பாளர்களை பூரணமாக ஏற்றுக்கொண்டு மதித்து வரவேற்ற மஹானாக வாழ்ந்தவர். பாடல்களை உயிரோட்டமாக படைத்த பிரமன். இராஜகவி ராஹில் அவர்கள் துயரம் சுமந்து எழுதிய கவிதை ஒன்றில், "கறுப்பு வெள்ளைத் திரையில் வர்ணம் உங்கள் இசை" என்று எழுதியிருந்தார். அவருக்காக நாம் பாடும் நிலா பாலசுப்பிரமணியம் கூறியதைப்போல் "ஆயர் பாடி மாளிகையில் தாய்மடியில் கன்றினைப்போல்... மாயக் கண்ணன் தூங்குகிறான் தாலே...லோ" என்ற பாடலை அவருக்காகப் பாடுவோம்.

✪ **சிந்தியா! 'செல்பி' மோகம் அதிகரித்துள்ளதே? இதன் விளைவு?**

"பரம மனநோய் அல்லது மரணம் இரண்டில் ஒன்று நிச்சயம்.

✪ **சிந்தியா! தற்போது எல்லா நிகழ்வுகளுக்கும் வெடிகொழுத்தும் கலாசாரம் மேலோங்கி வருகின்றதே இது பற்றி உங்களின் கருத்து என்ன?**

நீண்டகாலமாக வெடிகுண்டுகள், துப்பாக்கிச்சூடுகள், ஓலக்குரல்கள் என்று வாழ்ந்துவிட்டதால் நாம் சத்தங்களுக்கு அடிமையாகிவிட்டோமா? அல்லது கொத்துக் கொத்தாக மரணங்களைக் கண்டதால், அழாமலே இருந்து விட்டோம் என்பதற்காகவும், சத்தங்களின்போதெல்லாம் அதிகமாக மௌனமாகவே இருந்துவிட்டோம் என்பதற்காகவும் இப்போது எல்லாவற்றுக்கும் சத்தங்களை சேர்த்துக் கொள்கின்றோமோ?

# காதிலை பூகந்தசாமி

**வணக்கமுங்கோயூ தேர்தல் அறிவிக்கப்பட்டு வாக்குக் கேட்டு வீடு வீடாக எங்கட தலைவர்மார் வரத் தொடங்கியிருக்கினமுங்கோ. அவை ஒவ்வொருவரும் சொல்லுகின்ற கதைகளை கேட்கேக்கதானுங்கோ ஆச்சரியமாக இருக்குது.**

சம்பந்தமானவர் திருகோணமலையில வீடாக வீடு போகமாட்டாராம். திருகோணமலைச் சனத்துக்கு சம்மந்தமானவரை விட்டால் யாருக்கு வாக்குப் போடுறது என்ற தெரிவே இல்லை. அவ்வளவுக்கு திருகோணமலைச் சனம் மொக்குச் சனம் எண்டு கணடாவில சொல்லிச் சிரிச்சவராமுங்கோ.

மகிந்தவுக்கு எதிராக தமிழ் மக்களை வாக்களிக்கச் செய்ததற்கு கைக்கூலியாக வாங்கிய பணம் எங்கே பதுக்கி வைச்சிருக்கிறியள் எண்டு கனடாவில் கேட்கப்பட்டபோது, சம்மந்தமானவருக்கு இரத்தக்கொதிப்பு வந்திட்டுதாமுங்கோ.

இவ்விதமாக கேள்வி கேட்கிறதாக இருந்தால் நான் இந்தக் கூட்டத்தில இருந்து வெளிநடப்புச் செய்யிறன் எண்டு எழுந்திட்டாராமுங்கோ. அவரை சமாதானம் செய்வதற்காக, வடமாகாண முதலமைச்சர் சொன்னதாலதானே அப்புடிக் கேட்டனாங்கள். நீங்கள் சின்னபிள்ளை மாதிரி கோவிக்கிறியளே எண்டு கேட்டதுக்கு,

அந்த மனுசன் சொன்னதை நம்பாதீங்கோ, அவருக்கு கொஞ்சக் காலமாக கொஞ்சம் மாறாட்டமாக இருக்கிறார். இப்பக்கூட அமெரிக்காவுக்கு அவரை தனியாக அனுப்பிப் போட்டு நாங்கள் நிம்மதி இழந்துதான் இருக்கிறம். அவரை தனியவிட்டு விட்டால் ஆள் கண்டதையும் பேசி காரியத்தைக் கெடுத்துவிடுகின்றார்.

அதாலைதான் தேர்தல் நேரத்தில அவரை அங்கு தேர்தல் மேடைகளில ஏறி பிரசாரம் செய்யும்படி கூறாமல் வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தில் விட்டிருக்கின்றோம். அவர் அரசியலுக்குப் புதியவர். அனுபவம் இல்லாதவர். ஆகையாலை அவர் சொல்வதை பெரிசாக எடுத்துப்போடாதேங்கோ, எண்டாராமுங்கோ.

சரி அவருக்கு அனுபவம் இல்லை எண்டதை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். ஊரில நல்லாட்சி அரசாங்கம் உங்கட கைப்புள்ளைக்கு பி.எம் டபள்யு கார் வாங்கிக் கொடுத்திருக்குதே அதை என்னவென்று சொல்லுவீங்கள். எண்டு கேட்டதுக்கு,

அட அவன் சுமோவையே கேக்கிறீங்கள். அவன் சின்ன வயசில இருந்து ஒரு கார் பைத்தியம். அதுக்காக பென்ஸ் கஜேந்திரன் மாதிரி பைத்தியமில்லை. இவன் சுமோ ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் செல்லப் பிள்ளைமாதிரி, அவைக்கு ஆரம்பத்தில சப்போர்ட் பண்ணவேணும் எண்டு கூட்டமைப்பை வற்புறுத்தியதில் தொடங்கி, பிறகு பத்தொன்பதாவது திருத்தம், இருபதாவது திருத்தம் தயாரிக்கிறதிலையும், தேசிய நிறைவேற்றுச் சபையில இருக்கிறதிலையும் இவன் தம்பி ரொம்ப விசுவாசமாக இருந்ததாலை அவனுக்கு விருப்பமான அந்தக் காரை வேண்டிக் கொடுத்திருக்கினம்.

அதைப்போய் நான் எப்புடித் தடுக்கிறது. இவ்வளவு திறமை இருந்தும் அவன் தம்பிக்கு ஒரேயொரு கவலை உண்டு தேசியப் பட்டியலில எம்.பி ஆகாமல் சனம் தெரிவுசெய்து எம்.பியாக வேணும் அது நடக்குமே எண்டதுதான்.

ஆனால் யாழ்ப்பாணத்தில ஒன்பதாக இருந்த எம்.பி எண்ணிக்கை, இப்படி ஏழாகக் குறைந்து போயிருக்குது. ஏற்கெனவே யாழ்ப்பாணத்தில ஈ.பி.டி.பிக்கு எத்தனை போகுமோ தெரியாது. ஏனெண்டால் புலிகள் துப்பாக்கி கொண்டு சனத்தை அச்சுறுத்திய போதும்கூட சனம் வாக்குப் போட்டு டக்ளஸ் தேவானந்தாவை எம்.பியாக்கி எங்களுக்கு எதிராக பார்ளிமெண்டுக்கு அனுப்பினது சனம் யாழ்ப்பாணத்துச் சனம்.

அதுக்குப் பிறகும் என்னதான் நாங்கள் தமிழர் தேசியம், ஒற்றுமை எண்டு தலைகீழாக நிண்டாலும் டக்ளசையும் எம்.பியாக்குவதை சனம் விட்டபாடில்லை. இந்த நிலையில அவைக்கு போக மிச்சமாக இருக்கிறதைத் தான் நாங்கள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

கூட்டமைப்பு சார்பில அநேகமான முக்கியஸ்தர்கள் யாழ்ப்பாணத்தைத்தான் நம்பி இருக்கின்றோம். பத்துப்பேர் போட்டியிட்டாலும் நாலுபேர் தெரிவு செய்யப்பட்டாலும் அதிலேயே ஆறு பேருக்கு ஆப்புத்தான். ஆனால் தம்பி சுமோவும் அந்த ஆறுபேரில ஒரு ஆளாகிவிடுவார் என்றுதான் என்னுடைய மனம் சொல்லுது.

தம்பி சுமோவுக்கும் அந்தப் பயம் இப்போதுதான் பிடிச்சிருக்குது. இந்த நிலைமையில தம்பி கார் ஓடுறதைப் பற்றி யாரும் கேள்வி கேட்காதீங்கோ.

அது சரி ஐயா, ஆனந்தி எண்டவா உங்களை கண்டபடி திட்டிக் கொண்டு திரியிறாவே என்ன நடந்தது? எண்டு கேட்டதுக்கு,

கொடுப்புக்குள்ள சிரிச்சுக்கொண்டு என்னைப் பாருங்கோ. சும்மா நடக்கிற துங்கே உங்களில் யாருடைய கையை யாவது பிடிச்சுக் கொண்டுதான் நடக்கிறன். என்னைப்போய் இப்புடி சந்தேகப்பட்டு கேக்கிறியளே. நான் அவாவுக்கு ஒண்டும் செய்யவில்லை.

இவன் சுமோதான் ஒருக்கால் அமெரிக்காவில வைச்சு, எண்டுபோட்டு தனக்குள்ளேயே சிரிச்சுக்கொண்டு நீங்கள் நினைக்கிற மாதிரி ஒண்டுமில்லை. அந்தப் பொடிச்சியை ஆட்களை சந்திக்கும்போது புலிகள், விடுதலை எண்டு எதையும் உளறிப்போடாதை எண்டு சொல்லியதை இந்தப் பெட்டை விளங்கிக் கொள்ளாமல் கதைச்சுப் போட்டுதாம்.

அதுக்காக தம்பி அவாவை கண்டபடி திட்டியிருக்கிறான். அது அந்த பொடிச்சிக்கு பிடிக்கயில்லை. கூட்டமைப்புக்காரர் தமிழ் மக்களிடம் வாக்கு கேட்கும்போது சர்வதேசம் பார்க்குது, சர்வதேசத்திடம் பிரச்சனைகளைப் பேச தமிழ் மக்கள் அங்கீகாரத்தை தரவேணும் எண்டெல்லாம் வாக்குக் கேட்டு பதவிக்கு வாறாங்கள்.

ஆனால் சர்வதேசத்துக்கு முன்னாலையும், சர்வதேச பிரதிநிதிகளுக்கு முன்னாலையும் தமிழ் மக்களைப் பற்றியே பேசுறாங்களும் இல்லை. பேச விடுறாங்களும் இல்லை. இவங்கள் தமிழ் மக்களை ஏமாத்துறாங்கள் எண்டும், தமிழ் மக்களின் துரோகிகள் இவங்கள் தான் எண்டும் பொடிச்சி புலம்பிக் கொண்டு திரியுது.

தம்பி பொடிச்சி புருசனை ஆமிக்காரரிடம் கையளிச்சனான் எண்டு சொல்லுறது பெருமையோ, எண்ட புருசன் ஆமியிடம் பிடிபடாமலிருக்க சைனட் அடிச்சு வீரச்சாவடைந்தவர் எண்டு சொன்னால் அது பெருமையோ. எது சரி எண்டு தெரியாமலே உளறிக்கொண்டு திரியுது.

இந்த நிலையிலதான் இந்த முறை எம்.பியாகவும் வரவேணும் எண்டு பல திருகுதாளங்களை அரங்கேற்றிப் பார்த்தது. நான் அதுகளுக்கு எடுபடவில்லை. பிறகு தனியாக கேட்கப்போவதாக சொன்னது. அப்புடி தனியாக தேர்தல் கேட்டால் மாகாண சபை பதவியையும் இழக்கநேரிடும் எண்டு சொல்லி ஆளை மடக்கிப் போட்டன். எண்டு சொன்னவர் தம்பி இதென்ன கேள்வியும் பதிலும் நிகழ்ச்சியோ, கேள்விகேட்பதை விட்டுப்போட்டு, எங்களுக்கு தேர்தல் செலவுகளுக்காக எவ்வளவு தரப்போகிறீர்கள் என்பதை சொல்லுங்கோ எண்டு அந்தக் கூட்டத்தில இருந்து தப்பிச்சாராமுங்கோ.

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**

# இந்தவாரம் உங்கள் பலன்

**(23.07.2015 தொடக்கம் 29.07.2015 வரை)**

## மேடம்

குடும்பத்தில் திருமணம் போன்ற சுப காரிய நிகழச்சிகள் நடைபெற வாய்ப்பு உள்ளது. புதிதாக வீடு, வாகனம் மற்றும் நிலபுலன்கள் வாங்க வாய்ப்பு உள்ளது. திருமணம் போன்ற சுப காரிய நிகழ்சிகளுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். கூட்டுத்தொழில் செய்வோர்கள் முன்கோபத்தைத் தவிர்ப்பது சிறந்ததாகும். தாயின் உடல்நிலையில் பாதிப்புகள் உண்டாகுவதோடு மருத்துவச்செலவுகள் ஏற்படும். பொருளாதாரத்தில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து நிம்மதி அடைவீர்கள். உற்றார் மற்றும் உறினர்களிடம் இருந்த எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறும். பிள்ளைகளுக்கு வெகுகாலமாக எதிர்பார்த்து வந்த வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

## இடபம்

நீண்டகாலமாகத் தடைப்பட்டுவந்த குலதெய்வ ஆலயங்களைத் திருத்திக் கட்டப்போட்ட திட்டங்களில் தடைகள் நீங்கி வெற்றியடைவீர்கள். ரேஸ் லோட்டரி போன்ற விசயங்களினால் பணம் கைவிட்டுப் போகலாம். அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தலையிட்டு மனக்கவலை அடையாதீர்கள். கூட்டுத்தொழில் முயற்சிகளைத் தொடங்கினால் நல்ல பலன்கள் கிடைக்கும். பண விசயங்களுக்கான நீண்டதூரப் பயணங்களைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லது. கொடுக்கவேண்டிய பழைய கடன்களைக் கொடுத்துப் பதிய கடன்களை வாங்கத் திட்டம் போடுவீர்கள். குடும்பச் சொத்துக்கள் போன்ற விசயத்தில் நல்ல தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## மிதுனம்

ஒரு சிலருக்குப் புதிய இடமாற்றம் ஏற்படக்கூடிய காலமாகும். வெகு காலமாக எதிர்பார்த்து இருந்த வங்கிகளின்மூலமாக கடன்தொகைகள் கிடைக்கும். விளையாட்டுத் துறையைச் சார்ந்தவர்கள் மிகவும் கவனமுடன் இருப்பது நல்லதாகும். வராத கடன்கொடுத்துள்ள பணம் எதிர்பாராமல் திரும்பக் கிடைக்கும். உத்தியோகம் பாரப்பவர்கள் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாகி மனநிம்மதியை இழக்கவேண்டாம். முன்கோபத்தை தவிர்த்து அண்டை அயலாருடன் கவனமாகப் பேசிப்பழகுதல் நல்லது. குலதெய்வ வழிபாடு செய்துவருதலால் கிரகதோசங்கள் நீங்க வாய்ப்பு உள்ளது. புதிய கூட்டுத்தொழில் முயற்சிகளை சற்று காலதாமதமாக தொடங்குவது நல்லது.

## கடகம்

கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். அண்டை அயல்வீட்டுக்காரர்களுடன் மிகவும் எச்சரிக்கையுடன் பேசிப் பழகுதல் நல்லதாகும். வேற்றுமதத்தவரால் ஆதாயம் இல்லை. காணாமற்போன பொருட்கள் காவல் துறையினர்களின் உதவியால் திரும்பக் கைவந்து சேரும் காலமாகும். உற்றார், உறவினர்களின் வருகையால் பொருட்செலவுகள் உண்டாகலாம். புதிய நண்பர்களின் சேர்க்கையால் காரணமற்ற பிரச்சினைகள் வந்துசேரும் என்பதால் எச்சரிக்கையுடன் இருக்கவும். விபரீத எண்ணங்களைவிட்டுக் காரியத்தில் மிகக் கவனமாய் இருங்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் முன்கோபத்தை தவிர்த்துப் பணியாற்றுதல் நல்லது.

## சிங்கம்

உற்றார் மற்றும் உறவினர்களின் வரவால் பொருள்வரவும் மனச்சந்தோசமும் உண்டாகும். உத்தியோகத் துறையினர்களுக்கு பதவி உயர்வுகள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவுகள் நிரம்ப உண்டாகும். பொருளாதாரத்தில் இருந்துவந்துள்ள சுமாராகக் காணப்படும். மாணவர்கள் கல்வியில் நல்ல மதிப்பெண்களையும் பரிசுகள் மற்றும் பாராட்டுதல்களையும் பெறுவார்கள். புதிய வீடுகளை வாங்கப்போட்ட திட்டங்களுக்காக வங்கிகளில் எதிர்பார்த்திருந்த கடன்தொகைகள் கிடைக்கக்கூடிய காலமாகும். சம்பந்தம் இல்லாத நபர்களால் எதிர்பாராத தனவரவுகள் உண்டாகலாம். வீட்டைத் திருத்திக் கட்டுவதில் மிகுந்த அக்கறையுடன் திட்டம் போடுவீர்கள்.

## கன்னி

ஆதரவற்ற ஏழைகளுக்காக உதவி செய்து அதனால் மனமகிழ்ச்சி அடைவீர்கள். வீடு, நிலம் வாங்குவது போன்ற முயற்சிகளில் அரசு சம்பந்தமாக எதிர்பார்த்து வந்த உதவித் தொகைகள் கிடைக்கும். கணவன் - மனைவி உறவு களில் இருந்துவந்த பிரச்சினைகள் நீங்கி சுமூகமான சூழல் உருவாகும். விட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. நெடுநாட்களாகப் பிரச்சினையில் இருந்த குடும்பச் சொத்துக்கள் கைக்கு வந்து சேரக்கூடிய காலமாகும். உடம்பில் மூளை நரம்பு எலும்பு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். பலகாலமாகத் தீராத நோய்களுக்கு புதிய மருத்துவர்களின் உதவியால் நோய்நீங்கும்.

## துலாம்

சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். மற்றவர்களுக்காக ஜாமீன் போடுவதை தவிர்க்கவும். பெண்கள் விசயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நன்று. புதிய கடன் வாங்குவதற்காக முயற்சிப்பீர்கள். நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மனநிம்மதி அடைவீர்கள். மஹான்களின் தரிசனங்களால் மனநிம்மதி அடைய வாய்ப்பு உள்ள காலமாகும். உடல்நிலையில் இருந்துவந்த நாட்பட்ட நோய்கள் நீங்கி மனநிம்மதி உண்டாகும். புதிய பெரிய மனிதர்களையும் நண்பர்களிடம் இருந்து எதிர்பார்த்து இருந்த ஆதாயங்கள் கிடைப்பதில் இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம்.

## விருச்சிகம்

திடீர் அதிர்ஷ்டமாகிய ரேஸ் லோட்டரி மற்றும் சேர் மார்க்கெட் தொழிலில் ஈடுபடுவோர்களுக்கு நல்ல பலன்கள் கிடைக்கும். வெகு காலமாகப் பிரிந்துபோன கணவன், மனைவி இருவரும் ஒன்றுசேருவார்கள். நீண்டநாட்களாக வராத கடன்கொடுத்து இருந்த பணம் பொருட்கள் திரும்பக் கை வந்துசேரும். தன்னிடம் பணிசெய்யும் அடிமை ஆட்களால் பிரச்சினைகளும் பொருள் இழப்பும்வர இருப்பதால் கவனம் தேவை. மாணவர்கள் கல்வியில் பரிசு மற்றும் பாராட்டுக்களைப் பெறு வதோடு அரசு உதவித்தொகைகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. பழைய வாகனங்களை விற்று புதிய வாகனம் வாங்குவதற்கான முயற்சிகளில் சற்று பின்னடைவுகள் ஏற்பட்டு விலகும்.

## தனுசு

பழைய கடன்கள் மீண்டும் தொல்லைதர வாய்ப்பு உள்ளது. வெகுதூரப் பயணங்களில் மிகுந்த எச்சரிக்கையுடன் சென்றுவருவது நல்லது. உடல்நிலையில் கண் மற்றும் காதுகளில் மிகக் கவனம் தேவை. கூட்டுத்தொழில் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். விபரீதமான எண்ணங்களை விட்டொழித்து காரியத்தில் கவனமாய் இருங்கள். நீண்டகாலமாகப் பூர்வீகச் சொத்துகளில் இருந்துவந்த பிரச்சினைகள் பெரிய மனிதர்களின் தலை யிடுதலால் தீர்ந்து நல்ல சூழ்நிலை காணப்படும். அச்சுத்துறை சார்ந்த பொருட்கள் விற்பனையாளர்கள், தபால் தந்தித் துறைகளைச் சார்ந்தவர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர்கள் நல்ல இலாபம் அடைவார்கள்.

## மகரம்

உத்தியோகத் துறையினர்களுக்குப் பணி இடமாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ள காலமாகும். அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்பார்த்துவந்த காரியங்கள் நிறைவேறும். திருமண விசயங்களுக்காக முயற்சி செய்யலாம். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த திருமண காரியங்கள் நிறைவேறும் வாய்ப்பு உள்ளது. பிள்ளைகளால் எதிர்பாராத சிற்சில ஆதாயங்களை அடைய வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த பண உதவிகள் உறவினர்களால் கிடைக்கும். காணாமற்போன பொருட்கள் திரும்பக் கிடைக்கும். அநாதைகளுக்கு உதவுவதில் மனமகிழ்ச்சி அடைவீர்கள். உடல்நிலையில் வாயு மற்றும் வாதம் ஆகிய தொல்லைகள் வந்துபோகும்.

## கும்பம்

ஒரு சிலருக்கு புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். திடீர் அதிர்ஸ்டம் மூலம் எதிர்பாராத தனவரவுகள் உண்டாகும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்யப்போட்ட திட்டங்களில் நல்ல தகவல்கள் வந்துசேரும். நீண்டநாட்களாக தடைப்பட்டுவந்த சகோதர சகோதரிகளின் திருமண காரியங்களில் வெற்றி அடைவீர்கள். மகான்களின் நல்லாசிகளுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். புதிய தொழில் ஆரம்பம் செய்வதற்காக வங்கிகள்மூலம் எதிர்பார்த்திருந்த கடன்தொகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பெண்களால் அவப்பெயர்கள் வரக்கூடும் என்பதால் எச்சரிக்கையுடன் பழகுதல் நல்லது. எதிர்பாராத நீண்டதூரப் பயணங்களின்மூலம் மனநிறைவடைய வாய்ப்பு உள்ளது.


## மீனம்

எதிர்பாராமல் வடதிசையில் இருந்து பொருள்வரவும், நல்ல செய்திகளும் வந்து சேரும். தங்கம், வெள்ளி போன்ற நகை வியாபாரிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் வர்த்தகத்தில் ஈடுபடுவது நல்லது. திருமண தகவல் மையங்கள், வாகனங்களில் பணியாற்றுவோர்கள், அரசுத்துறையை சார்ந்த வழக்கறிஞர்கள், ஆடம்பர அலங்காரப் பொருட்களின் வியாபாரிகள், சினிமா மற்றும் நாடகத்துறைகளைச் ஆகியோர்கள் நற்பலன் அடைவார்கள். குடும்பத்தில் தாய், தந்தையர்களின் உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு மருத்துவத்திற்காக வெளியூர் பயணங்களை மேற்கொள்வீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தராத வாரமாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

# நாடாளுமன்றத் தேர்தல் - 2015

"தமிழ் மக்களின்
அரசியல் உரிமை,
நிலையான
அபிவிருத்தி,
அரசியல்
கைதிகளின்
விடுதலை,
காணாமல்
போனோர்
விவகாரம்,
சொந்த
நிலத்தில்
அர்த்தபூர்வமான
மீள்குடியேற்றம்
இவற்றை
யதார்த்த
வழியில்
வென்றெடுப்போம்!"



செயலாளர் நாயகம்



சொந்த
நிலத்தில்
அர்த்தபூர்வமான
மீள்குடியேற்றம்
இவற்றை
யதார்த்த
வழியில்
வென்றெடுப்போம்!"

செயலாளர் நாயகம்
டக்ளஸ் தேவானந்தா

வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் வீணைச் சின்னத்தில்...



X

4

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (E.P.D.P)



இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஜுலை 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 07 வியாழக்கிழமை (23.07.2015) பக்கங்கள் IV ஓசை – 295

## இலங்கை விமானப்படைக்கு நவீன தீயணைப்பு வாகனம்

(கொழும்பு)

ஜப்பான் - இலங்கை நட்புறவுக்கழகத்தினால் இலங்கை விமானப் படையினருக்கான அதி சொகுசு வாய்ந்ததும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடனும் கூடிய 100 மில்லியன் ரூபா பெறுமதியான தீயணைப்பு வாகனம் அன்பளிப்பு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ் வருடத்துக்குள் வாகனம் அன்பளிப்பு செய்யப்படுமென வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தீயணைப்பு வாகனங்களுக்காக பயன்படுத்தப்படும் ஆகாய ஏணி தீயணைப்பு வாகனம் "Sky Ladder Fire Vehicle" என்ற வாகனத்தினை இலங்கை விமானப் படையின ருக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் விமானப்படை தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை - ஜப்பான் நட்புறவுக்கழகத்தின் பிரதி நிதி, விமானப்படைத் தளபதி ஏயார் மார்ஷல் ககன் புலத்சிங்கள விடம் இவ்வாகனத்தினை உத்தியோக

IV ஆம் பக்கம் பார்க்க

# மக்களை குழப்பும் ஊடகச் செய்திகள்

### ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்).

ஊடகங்களில் நாளாந்தம் வெளிவருகின்ற செய்திகள் மக்களைக் குழப்பி வருகின்றன என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதிக்குச் சென்று கட்சியின் செயற்பாட்டாளர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.



வட்டுக்கோட்டையில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் நடைபெறவுள்ள தேர்தலுக்கான கட்சியின் பணிகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் விளக்கமளித்திருந்தார். அத்துடன் தேர்தல் வெற்றியை நோக்காகக் கொண்டு எல்லோரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இன்றுள்ள சூழலில் ஊடகங்கள் ஊடாக நாளாந்தம் வெளிவருகின்ற செய்திகள் மற்றும் தகவல்கள் மக்களைக் குழப்பி வருவதாகவும் இந்நிலையில் உண்மை நிலைவரங்களை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டியது காலத்தின் அவசியம் என்றும் தெரிவித்தார்.

# தேர்தல் விதிகளை மீறாது பிரசாரம்

### யாழ்.மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

தேர்தல் விதிமுறைகளுக்கு அமைவாக கட்சிகளையும் சுயேட்சைக்குழுக்களையும் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் நா.வேதநாயகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் தலைவர்களுடன் நேற்று புதன்கிழமை கலந்துரையாடல் இடம்பெற்றது.

சட்டவிரோதமான செயல்களை கட்டுப்படுத்துவதற்கும், யாழ்.மாவட்ட செயலகம் உட்பட ஏனைய 4 பிரதேச செயலகங்களில் தேர்தல் முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கான முறைப்பாட்டு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட செயலகம், வேலணை, சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களில் தேர்தல் வன்முறை குறித்த முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படும். அந்த முறைப்பாட்டு நிலையங்களில் பொலிஸ் உத்தியோகத்தர்களும் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

தேர்தல் விதிமுறைகளுக்கு அமைவாக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்கள் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்

IV ஆம் பக்கம் பார்க்க

## ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக்குழு யாழ்.மாவட்டத்திற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் நேற்று யாழ். மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.



நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளும் முகமாக சர்வதேச கண்காணிப்பாளர்கள் அடங்கிய குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளனர்.

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான கிறிஸ்ரன் டான் பெறாடா தலைமையில் மேற்படி குழுவினர் வடக்கில் தேர்தல் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

அந்தவகையில், அவர்கள் நேற்று யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், தேர்தல் ஆணையா

IV ஆம் பக்கம் பார்க்க

## சமூகவிரோத குற்ற சந்தேக நபர்களுக்கு பிணை அனுமதி வழங்கப்படமாட்டாது

### நீதிபதி இளஞ்செழியன் தெரிவிப்பு

நீதிமன்றத்தின் மீதான தாக்குதல், போதைவஸ்து குற்றங்கள், கசிப்பு காய்ச்சியமை, பாலியல் வல்லுறவு, கோஸ்டி மோதல், ரவுடித்தனம், தெருச் சண்டித்தனம் போன்ற சமூக விரோத குற்றச் செயல்களில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ள சந்தேக நபர்களுக்கு தேர்தல் காலத்தில் பிணை அனுமதி இல்லை என நீதிபதி இளஞ்செழியன் கட்டளையிட்டுள்ளார்.

பருத்தித்துறைப் பகுதியில் 19 கிலோ கஞ்சாவை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பருத்தித்துறை நீதிமன்ற கட்டளையின் படி, கடந்த மே மாதம் 13 ஆம் திகதியில் இருந்து விளக்கமறியலில் இருந்து வருகின்ற சந்தேக நபருக்குப் பிணை கோரி தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்த போதே நீதிபதி இந்தக் கட்டளையைப் பிறப்பித்துள்ளார்.

இந்தப் பிணை விண்ணப்பத்தை குறுகிய கால தவணையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை நீதிபதி நிராகரித்து, சமூக விரோதக் குற்றச் செயல்கள் தொடர்பிலான சந்தேக நபர்களுக்கான பிணை விண்ணப்பங்கள் தேர்தல் காலத்தில் பரிசீலனைக்கு

IV ஆம் பக்கம் பார்க்க

## சட்டவிரோத கருக்கலைப்பு; குடும்பப்பெண் பரிதாப மரணம்

### வைத்தியசாலை பெண் சிற்றூழியர் கைது

(கொழும்பு)

வவுனியாவில் சட்டவிரோத கருக்கலைப்பு காரணமாக குடும்பப் பெண் ஒருவர் மரணமடைந்தமை தொடர்பில் வவுனியா வைத்தியசாலை சிற்றூழியரான பெண் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

IV ஆம் பக்கம் பார்க்க

# சுயநலமற்ற தலைமைகளாலேயே தமிழர் தலைவிதியை மாற்ற முடியும்

### யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. பிரதம அமைப்பாளர் வி.கே. ஜெகன் தெரிவிப்பு



தமிழ் மக்களது தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் சொந்த வாழ்வின் தேவைகளுக்காக பயன்படுத்தி அரசியல் இலாபம் தேடும் கூட்டத்தினர் தமிழ் மக்களது அரசியல் பதிவுகளிலிருந்து துரத்தப்படும் வரை எமது மக்களின் வாழ்வியலானது உன்னத நிலையை அடையும் மையப் புள்ளிக்கு என்றுமே சென்றுவிட முடியாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான கா வேலும்மயிலும் குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் நடைபெற்ற தேர்தல் தொடர்பான கலந்துரையாடலின்போது கட்சியின் ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தள்ளார். அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில் -

சுயநலம் மிக்க அரசியல் சக்திகளின் பிடியிலிருந்து தமிழ் மக்கள் விடுதலை பெற்றுக் கொள்வதற்கான ஒரு சூழ்நிலையை வரவுள்ள பொதுத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் உருவாக்கிக்கொள்வார்கள் என நம்புகின்றோம். இதற்கான முன்னகர்வுகளே தற்போதைய அரசியல் களத்திற்கு தேவையாகவும் உள்ளது.

கடந்தகாலங்களில் தமிழ் மக்கள் கட்டிக்காத்துவந்த கலாசார விழுமியங்களும் பண்பாடுகளும் கடந்த சில வருடங்களாக் காணாது சென்றுகொண்டிருப்பதற்கு தமிழ் மக்களது அரசியலை சுயதேவைகளுக்காக நிர்ணயம் செய்துகொண்டிருப்பவர்களின் உந்துதல்களே காரணமாகவுள்ளன. தமது நோககங்கள் நிறைவேற வேண்டுமானால் தமிழ் மக்கள் மத்தியில் என்றும் பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக தமிழ் பகுதிகளை அடிமைப்படுத்திக்கொண்டிருக்கும் சுயநலவாத அரசியல் தலைவர்கள் அத்தகைய கலாசாரங்களை தூண்டிவிட்டவண்ணம் உள்ளனர். இதனால் பாதிக்கப்பட்டுகொண்டிருப்பது எமது இளம் சந்ததியினரே. இதை தமிழ் மக்கள் நன்கு புரிந்து கொள்ளவேண்டும்.

இத்தகைய திட்டமிட்ட கலாசார பிறழ்வுகளைத் தடுத்து நிறுத்தி மீண்டும் தமிழர்களது கலாசாரங்கள் வாழ்வியல் சூழ்நிலைகள் புத்துயிர்ப்பிக்கப் படுவதற்கு தற்போது தமிழர் மத்தியில் உள்ள ஒரே ஒரு சுயநலமற்ற தலைமைத்துவ தகுதி கொண்டவர் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மட்டும்தான். மாற்றம் வேண்டுமென காத்திருக்கும் தமிழ் மக்கள் தலைமைத்துவத்தை செய்யவேண்டும். அதற்கான களத்தை இம்முறை நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் மூலம் அதிகளவான அரசியல் 'அதிகாரத்தை கொடுக்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக உள்ளது.

நாங்கள் கொடுக்கின்ற வாக்குறுதிகள் அனைத்தும் மக்களது நலன் கருதியதாகவேக இருந்து வருகின்றன. அதனால் தான் நாம் வழங்குகின்ற வாக்குறுதிகளை நிறைவேற்றிக்கொள்ள முடிவதுடன் மக்களுக்கான அனைத்து தேவைகளையும் செய்து கொடுக்க முடிகின்றது. எமது கட்சிக்கு இம்முறை தேர்தலில் மக்கள் அதிக பலம் தருவார்களானால் நிச்சயமாக தமிழ் மக்களது விடியலுக்கான பாதை஗்ய நாம் அமைத்துக்காட்டுவோம் எனக் குறிப்பிட்டார்.

இந்த கலந்துரையாடலில் தென்மராட்சி அமைப்பாளரும் போதுத் தேர்தல் வேட்பாளருமான சூசைமுத்து அலெக்சாண்டர் (சாள்ஸ்) மற்றும் நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் கட்சி முக்கியஸ்தர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அடிப்படை வசதியின்றி ஒதியமலை பாடசாலை



(ஒதியமலை)

நெடுங்கேணி ஒதியமலைக் கிராமத்தின் அரசினர் பாடசாலை அடிப்படை வசதிகளின்றி இயங்கி வருகின்றது.

ஒதிமலைக் கிராமமானது 1984 ஆம் ஆண்டுஉள்ளூர் இடப்பெயர்வினைசந்தித்தஒருகிராமமாகவும் ஒரேநாளில் அதிகம் மக்களை இனப்படுகொலை செய்தகிராமமாகவும் இக்கிராமம் உள்ளது.

அந்தவகையில் இக்கிராமத்திலுள்ள ஒரே ஒரு பாடசாலை தரம் 1 தொடக்கம் 11 வரை இப்பாடசாலை இயங்கிவந்தபோதிலும் தற்போது கோட்டமோ, வலயக் கல்விப் பணிமனையோ இப் பாடசாலை மீது கவனம் செலுத்தப்படாத நிலையில் இப் பாடசாலை தற்போது ஒரு ஆசிரியருடன் இயங்கி வருவதாகவும் இப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் தங்கள் கல்விக்காக ஏனைய பாடசாலைகளை தேடிச் செல்லும் நிலை உருவாகியுள்ளது. இதனைச் சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கொண்டு இம் மாணவர்களுக்கான கல்வியினை தங்கள் சொந்தப் பாடசாலைகளிலே பல வசதியை ஏற்படுத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# தேர்தல் பிரசாரங்களில் தனியார் வகுப்பு மாணவர்கள்

### கிளிநொச்சி கல்விச் சமூகம் அதிருப்தி

(கிளிநொச்சி)

மாணவர்களை தங்களின் தேர்தல் அரசியல் செயற்பாடுகளுக்கும், பிரசார நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தாதீர்கள் என கிளிநொச்சி மாவட்ட கல்விச் சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போது தேர்தல் காலம் என்பதால் சிலர் மாணவர்களைத் தங்களின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி வருகின்றனர் இதனை உடனடியாக விடுத்து மாணவர்களின் வழமையான கல்விச் செயற்பாட்டுக்கு வழிவகுக்குமாறு மாவட்ட கல்விச் சமூகமும் பெற்றோரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த கால தேர்தல்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் மாணவர்கள் ஒரு அரசியல் கட்சியின் தேர்தல் பரப்புரை செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்ட பல சம்பவங்கள் இடம்பெற்றன. கிளிநொச்சியில் சில தனியார் கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகள் அரசியல் வாதிகளாகவும் இருப்பதனால் அவர்கள் தங்கள் கல்வி நிலையங்களில் கல்வி கற்கும் க.பொ.த சாதரணதரம், உயர்தர மாணவர்களை தேர்தல் காலங்களில் முழுமையாக கட்சி அரசியல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தி வந்துள்ளனர். இதனால் பல மாணவர்கள் பல பாதிப்புகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் தற்போதும் அவ்வாறு மாணவர்களைத் தங்களின் தேர்தல் கால அரசியல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் கிளிநொச்சியில் உள்ள ஒரு தனியார் கல்வி நிலையத்தைச் சேர்ந்த மாண்வர்கள் வகுப்புக்கென அழைக்கப்பட்டு தங்களுக்கு தேர்தல் பரப்புரை செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கபட்டுள்ளன. இது பெற்றோர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பரீட்சைகள் நெருங்கி வரும் வேளையில் இவ்வாறு மாணர்களைத் தங்களின் அரசியலுக்காக பயன்படுத்தப்படுவது கண்டிக்கதக்க விடயம் என்பதோடு அதனைக் கைவிட்டு மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு வழி ஏற்படுத்துங்கள் என கிளிநொச்சி மாவட்ட கல்விச் சமூகமும், பெற்றோர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (29, 160)

# புலோலியில் மின்விளக்குகள் பொருத்தல்

(புலோலி)

இரவு வேளையில் இருள் சூழ்ந்து காணப்பட்ட புலோலி கிராமக்கோடு மருதங்கேணி வீதியில் மின் குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளமையால் இப்பகுதி இரவு வேளையில் பகல் போலக் காட்சியளிப்பதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

புலோலி கிராமக்கோடு, மருதங்கேணி வீதியில் மின் கம்பங்கள் நாட்டப்பட்டிருந்த போதிலும் சில கம்பங்களில் பல வருட க்காலமாக மின் குமிழ்கள் இணைக்கப்படாமல் இப்பகுதி இருள் சூழ்ந்து காணப்பட்டதுடன் இரவில் திருடர்களின் கைவரிசைக்கும் பல வீடுகள் இலக்காகியிருந்தன.

இதனால் இவ் வீதியில் உள்ள மின் கம்பங்களுக்கு மின் குமிழ்களை இணைத்துத் தருமாறு கோரி, பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் பூ. சஞ்சீவன், துணைத் தவிசாளர் மா. லோகசிங்கம் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ரீரங்கேஸ்வரன் போன்றோரிடம் புலோலி கிழக்கு சந்தாதோட்டம் 'சனசமூக நிலைய மக்கள் சார்பாக அதன் செயலாளர் இ. கிருபாகரசூரியன் கோரிக்கை விடுத்திருந்ததுடன் ஊடகங்கள் மூலமும் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையிலே, கடந்த சனிக்கிழமையன்று குறித்த மருதங்கேணி வீதியில் மின் குமிழற்ற மின் கம்பங்களுக்கு மின் குமிழ்கள் இணைக்கப்பட்டன. இதனாலேயே இருள் சூழ்ந்து காணப்பட்ட இப்பகுதி இரவு வேளைகளில் பகல் போல காட்சியளிக்கின்றன.

சந்த தோட்டம் சனசமூக நிலைய மக்கள் சார்பாக விடுக்கப்பட்ட இக்கோரிக்கையை நிறைவேற்றிய பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர், துணைத் தவிசாளர் மற்றும் எதிர்க்கட்சிக் கட்சித் தலைவர் ஆகியோர் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார். (166)

# நிழற்குடை இன்றி பரிதவிக்கும் பயணிகள்

(புலோலி)

பருத்தித்துறை - யாழ். வீதியில் அச்சுவேலிக்குப் பிரிந்து செல்லும் சந்தியில் இரு புறமும் பயணிகள் தரிப்பிட நிழல் குடை இற்றைவரை நிர்மாணிக்கப்படவில்லை.

இதனால், பேருந்துக்குக் காத்து நிற்கும் வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட பயணிகள் கொளுத்தும் வெயிலிலும் கொட்டும் மழையிலும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

தற்போது குறித்த வீதி காப்பெற் வீதியாக புனரமைக்கப்பட்டுள்ளபோதிலும் இன்றவரை குறித்த பகுதியில் இரு புறமும் பயணிகள் நிழல் குடைகள் அமைப்பதற்கு யாரும் முன்வரவில்லை என பாதிக்கப்படும் பயணிகள் தெரிவித்துள்ளனர். (166)

# கும்பாபிஷேகம் காணும் நாகர்கோவில் முருகன் ஆலயம்

(புலோலி)

கடந்த கால யுத்த சூழ்நிலையால் சூனியப்பிரதேசமாக அமைந்திருந்த நாகர் கோவில் கிழக்கில் முற்றாக சேதமடைந்த முருகன் ஆலயம் தற்போது பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. நாகர் கோவில் வாழ் பக்த அடியார்களின் ஒத்துழைப்புடன் கட்டட புனரமைப்பு பணிகள் நிறைவடையும் தருணத்தில் காணப்படுகின்றது.

மேலும் இவ் ஆலய மகா கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 9ஆம் திகதி மிகவும் சிறப்பாக நடைபெற ஆலய நிர்வாகத்தினர் பிரமாண்டமான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். மகா கும்பாபிஷேக தினமான ஆகஸ்ட் 9ஆம் திகதி இரவு ஆலய முன்றலில் அமைக்கப்படவிருக்கும் மேடையில் தென்னிந்திய திரைப்பட பாடகர்களான அனுரா ஸ்ரீராம், ஹரிஹரசுதன், சோனியா, கங்காசுரன் ஆகியோருடன் இணைந்து ஈழத்துச் சௌந்தரராஜனின் புதல்வர்களான அருள்ஜோதி, யோகலிங்கம் ஆகியோருடன் ஈழத்தின் தலை சிறந்த பாடகர்கள் ஒன்றிணைந்து வழங்கும் தேனிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (166)

# சங்கானைப் பொதுச் சந்தை வியாபாரிகளுடன் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் நேரில் சந்திப்பு



(சங்கானை)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா சங்கானை பொதுச் சந்தைக்குச் சென்று வியாபாரிகளுடன் கலந்துரையாடியதுடன், பொருட்களைக் கொள்வனவு செய்ய வந்திருந்த பொது மக்களுடனும் கலந்துரையாடினார்.

சங்கானைச் சந்தைக்கு நேற்று செயலாளர் நாயகம் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது மரக்கறி விற்பனைத் தொகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வியாபாரிகளுடன் கலந்துரையாடி அவர்கள் பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதனிடையே ஏனைய சந்தை உட்புறத்தில் அமைந்துள்ள பழக்கடைத் தொகுதி மற்றும் ஏனைய கடைத் தொகுதிகளுக்கும் சென்று வியாபாரிகளுடனும் பொது மக்களுடனும் கலந்துரையாடினார்

அத்துடன் சந்தைக்கு பொருட்களை கொள்வனவு செய்வதற்கு வருகை தந்திருந்த மக்களுடனும் கலந்துரையாடினார்.

இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா, நேரில் வந்து தம்மைச் சந்தித்து தம்முடன் கலந்துரையாடி, தமது பிரச்சினை மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தமை தமக்கு மன நிறைவையும் மகிழ்ச்சியையும் தருவதாக வியாபாரிகள் உவகையுடன் தெரிவித்திருந்தனர்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) உடனிருந்தார்.

# வேலணையில் திருட்டு சந்தேக நபர் கைது

(வேலணை)

கடந்த சில தினங்களாக வேலணைப் பகுதியில் நடைபெற்றுவந்த திருட்டுச் சம்பவங்களுக்கு தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் நேற்று பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் வேலணை துறையூர் பகுதியில் ஆட்கள் இல்லாத வீட்டிற்குள் நுழைந்த திருடன் அங்கிருந்த பொருட்களை திருடிக்கொண்டு பேருந்திற்காக காந்திருந்தவேளை, பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டதுடன் விசாரித்தபோது அவர் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்டமை தெரிய வந்தது.

திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நபருக்கு துணையாக இருந்ததாகக் கூறப்படும் பாடசாலை மாணவர் ஒருவரையும் பிடித்து ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் பொதுமக்கள் ஒப்படைத்துள்ளனர். (21)

## 10 வருடமாகியும் நியமனமில்லை

(புலோலி)

தென்மராட்சி கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றும் நான்கு பணியாளர்கள் பத்து வருட காலமாகியும் இதுவரை நிரந்த பணியில் அமர்த்தப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் பாதிக்கப்பட்டிருக்கும் பணியாளர்கள் கோரியுள்ளனர். (166)


# அம்பாள்குளத்தில் மின்னொழுக்கு; தீப்பற்றி எரிந்தது வீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் வசித்து வரும் காத்தமுத்து கணபதி என்பவரின் வீடு நேற்று முன்தினம் மாலை மின்னொழுக்கு காரணமாக தீப்பற்றி எரிந்ததில் வீட்டுப்பாவனைப் பொருட்கள் உடுபுடவைகள் முக்கிய ஆவணங்கள் என அனைத்தும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

வழமை போன்று குறித்த வீட்டின் உரிமையாளர் அவரது மனைவி ஆகியோர் வேலைக்கு சென்றிருந்தனர்.


இச்சமயம் வீட்டில் அவரது இரு பிள்ளைகளும் பிள்ளைகளை பராமரித்து வரும் அவரது உறவினரான மூதாட்டியும் வீட்டின் அயலில் உள்ள வீடொன்றில் இருந்துள்ளனர்.



அந்நேரத்தில் வீட்டில் இருந்து கரும்புகை எழுவதைக் கண்டு கூக்குரலிட்டதையடுத்து அயலவர்கள் ஓடிச்சென்று பார்த்த போது வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது.

அயலவர்களின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டபோதும் வீட்டினுள் இருந்த வீட்டுப் பாவனைப் பொருட்கள் உடுபுடவைகள் முக்கிய ஆவணங்கள் என வீட்டில் இருந்த அனைத்து ஆவணங்களும் பொருட்களும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

## விபுலானந்தரின் குருபூசை தினம்



(கரணவாய்)

முத்துக்குமாரு மயில் வாகனம் சுவாமிகளின் 30ஆவது குரு பூசைத் தினம் நாளை சந்நிதியான் ஆச்சிரியம மண்டபத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விசேட அபிஷேக ஆராதணைகளைத் தொடர்ந்து நினைவுப் பேருரைகளும் சிறப்புச் சொற்பொழிகளும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும். தொடர்ந்து கண்ணதாசன் குழுவினரின் கதம்பமாலை நிகழ்ச்சியும் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். அடியார்கள் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (18)

# நவாலி கல்லுண்டாய் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(நவாலி)

நவாலி பிரசாத் சந்தை ஊடாகக் கல்லுண்டாய் செல்லும் வயல் ப்குதி வீதி பன்னெடுங்காலமாகத் திருத்தப்படாமல் காணப்படுகிறது.

மூன்று தசாப்த காலங்களுக்கு முன்பாகவே பழுதடைந்த மேற்படி வீதி யுத்த காலங்களிலும் இதன் பின்னரும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை.


அவ்வீதியூடாக சென்றே கல்லுண்டாய் வைரவர் ஆலயம் மற்றும் சென். பீற்றர்ஸ் விளையாட்டு மைதானம், மரணித்தோர் அடக்கம் செய்யும் சேமக்காலை ஆகிய இடங்களிற்கு செல்ல வேண்டியுள்ளது.

மேலும் அப்பகுதியில் ஆயிரக்கணக்கான களனி நிலங்களும் இருப்பதால் தினமும் நூற்றுக் கணக்கானோர் வாகனங்களிலும், பாதசாரிகளாகவும் பிரயாணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கனவே, வீதிகளுக்குப் போடப்பட்ட கற்களும் யுத்தச் சிதைவுகளால் அகற்றப்பட்ட கற்களும் அவ்வீதியில் போடப்பட்டுள்ளதால் அவ்வீதியைப் பயன்படுத்துவோர் சொல்லொணா அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

வீதியைப் புனரமைக்கும் அதிகாரம் கொண்ட அதிகாரிகள் பிரசாத் வீதியென அழைக்கப்படும் நவாலி கல்லுண்டாய் வீதியை செப்பனிட்டு வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (68)

# பரபரப்பை ஏற்படுத்திய மகிந்தவின் ஆவேசக்காட்சி



(கொழும்பு)

அக்குரஸ்ஸவில் நேற்று நடந்த தேர்தல் பரப்புரையில், ஆதரவாளர் ஒருவரை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆவேசமாகத் தாக்கும் காட்சி சமூக ஊடகங்களிலும், இணையத் தளங்களிலும் பரவி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அக்குரஸ்ஸ பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றது.

கூட்டம் நடந்த மேடையை நோக்கிச் சென்று கொண்டிருந்த மகிந்த ராஜபக்ச திடீரென ஆதரவாளர் ஒருவரை நோக்கி எரிச்சலுடன் ஆவேசமாகப் பாய்ந்தார். உடனடியாக மகிந்த ராஜபக்சவின் மெய்க்காவலர்கள், அவரை மேடையை நோக்கி அழைத்துச் சென்றனர். மகிந்த ராஜபக்சவின் கையைப் பிடிக்க ஆதரவாளர் ஒருவர் முற்பட்ட போதே அவர் பதிலுக்குத் தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பான காணொளி சமூக ஊடகங்களிலும் இணையத்தளங்களிலும் தீயாகப் பரவியுள்ளது.

# ஏழாலையின் புகழ்பூத்த ஆயுர்வேத வைத்தியர் மறைவு

(ஏழாலை)

யாழ்ப்பாணத்தின் ஏழாலை கிராமத்தின் புகழ்பூத்த ஆயுள்வேத வைத்தியர் வைத்திய கலாநிதி பேரம்பலம் பத்மநாதன் தனது 80ஆவது வயதில் கடந்த திங்கட்கிழமை காலமானார்.

வடபுலத்தில் புகழ்பூத்த ஆயுர்வேத பரம்பரை வைத்தியர்களில் மக்கள் மனதில் இடம்பிடித்த அமரர் பேரம்பலம் பத்மநாதன் (செல்லமணி வைத்தியர்) இழப்பு பேரிழப்பு என ஏழாலை வாழ் மக்கள் தெரிவிக்கின்றனர். (66)

# விரைவில் வடக்கு, கிழக்கில் சுதந்திர வர்த்தக வலயங்கள்

## ரணில் தேர்தல் வாக்குறுதி

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிலும் வடக்கின் வன்னியிலும் சுதந்திர வர்த்தக வலயங்கள் அமைத்து நகரங்களில் தொழில் பேட்டை அமைத்து இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வும் பிரசாரக் கூட்டமும் நேற்று முன்தினம் நகர பஸ்நிலையம் முன்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். உங்கள் பிரச்சினை எங்கள் தீர்வு எனும் தொனிப்பொருளிலான தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படவுள்ளது. இதில் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அணுகுமுறைகள் உள் வாங்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு - திருகோணமலையை இணைக்கும் வலயம் வெலிக்கந்தையில் நிர்மாணம் செய்யப்படும். தொழில் பேட்டைகளில் தொழில் புரிவதற்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. மட்டக்களப்பு மாவட்ட மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவுள்ளன. முதலில் அரச காணிகளில் வீடுகள் அமைத்து தற்காலிக அனுமதிப் பத்திரம் உள்ளவர்களுக்கு ஒரு மாத காலத்துக்குள் காணிக்கான உறுதிகள் வழங்கப்படும். ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் மீன் நிறுத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட மீனவர்களுக்கு உதவும் நோக்கில் மீண்டும் ஒக்ரோபர், நவம்பர் மாதமளவில் மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கான வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படும். தெற்கினைப்போல் வடக்கு, கிழக்குக்கும் அபிவிருத்தி, 10 இலட்சம் பேருக்கான வேலைவாய்ப்பு, சுதந்திரவர்த்தக வலயம் அறிமுகம், சீனாவின் உதவியோடு கிழக்கு மாகாணம் சம்பூரில் அனல் மின்சாரம் அமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் உள்ள விவசாயக் காணிகளுக்கு மகாவலித். திட்டத்தினால் விவசாயத்தைப் பெருக்கும் வேலைகள் செய்யப்படவுள்ளன. கல்வியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கோடு கணனி மற்றும் தகவல் .தொழில் நுட்பக் கல்வி என்பன அறிமுகப்படுத்தப்படும்.

அதுபோன்று பொலனறுவை, அநுராதபுரம், வன்னி மாவட்டங்களிலும் இத்தகைய வர்த்தக வலயங்கள் உருவாக்கம்பெற்று வேலைவாய்ப்பு வழங்கப்படும். நாடு இலஞ்சம், ஊழலில் மூழ்கியிருந்த போது அதை மாற்றும் நோக்கில் கடந்த 10 வருடங்களாக நடந்த மகிந்தவின் குடும்ப ஆட்சியை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அப்போதைய செயலாளராகவிருந்த மைத்திரியை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவைத்து வெற்றிபெற்றோம்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றியடையச் செய்து இவ்வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு உதவவேண்டும் என்றார்.

## ஐக்கிய பிரஜைகள் முன்னணி உதயம்



(கொழும்பு)

ஐக்கிய பிரஜைகள் முன்னணி என்ற கட்சி உத்தியோக பூர்வமாக நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும், முன்னாள் சுகாதார அமைச்சருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நல்லாட்சி பொய்கள் குறித்து மனமுடைந்துள்ளவர் களுக்காகவே ஐக்கிய பிரஜைகள் முன்னணி என்ற கட்சி ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய கட்சியின் கொள்கை லிபரல் ஜனநாயக கொள்கையின் அடிப்படையாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி இன்று ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிந்து தனது கொள்கையிலிருந்து விலகிச் சென்றுள்ளது. கிராமங்களில் வாழும் அப்பாவி மக்கள் மிகவும் கஸ்டப்பட்டு ஐக்கிய தேசிய கட்சியை கட்டியெழுப்பிய போதிலும், கட்சி ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிந்து செயற்படுகிறது.

நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் இந்நாட்டு மக்கள் பெரிய அளவில் ஏமாற்றமடைந்துள்ளனர். எந்த ஒரு காலத்திலும் இல்லாத வகையில் சமூகம் பிளவடைந்து காணப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### சட்டவிரோத...

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது - சட்டவிரோதக் கருக்கலைப்புச் செய்தபோது ஏற்பட்ட அதிகரித்த இரத்த போக்கு காரணமாக வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பப் பெண் ஒருவர் கடந்த சனிக்கிழமை மரணமடைந்தார். இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா பொலிஸார் வவுனியா வைத்தியசாலையில் சிற்றூழியராக கடமையாற்றும் பெண் ஒருவரை கைது செய்துள்ளனர்.

குறித்த குடும்பப் பெண்ணின் கருவை ஒரு தொகை பணத்தினை பெற்று தனது வீட்டிற்கு வரவழைத்து கருக்கலைப்பு செய்தார் என வைத்தியசாலை சிற்றூழியரான பெண் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சிற்றூழியரை வவுனியா நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முற்படுத்திய வேளை அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இக்கருக்கலைப்பு காரணமாக ஆசிகுளம், தரணிக்குளத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தாயான லாசஸ் குளோறா (வயது - 33) என்ற இளம் குடும்பப் பெண்ணே மரணமடைந்தவராவார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


## முன்னாள் போராளிகள் மற்றும் அரசியல் கைதிகளின்

### பெற்றோர்/பாதுகாவலர் சந்திப்பு

கடந்த காலங்களில் தமிழ்த்தேசிய செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட புனர்வாழ்வு பெற்று விடுதலையாகி சமூகத்துடன் இணைந்துள்ள சகல முன்னாள் போராளிகள் மற்றும் தடுப்பில் உள்ள அரசியல் கைதிகள் சார்பாக அவர் களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் அனைவரும் "கௌரவமான எதிர்கால திட்டங்களை நடைமுறைப்படுத்துவது" தொடர்பான ஒன்று கூடலிற்கு தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இடம்- நாவலர் கலாசார மண்டப முன்றல்**
**காலம்-23.07.2015 (வியாழன்)**
**நேரம்- பி.ப.3.30**
**தொடர்புக்கு : 0767134881**

பிரதம செயற்பாட்டாளர்
முன்னாள் போராளிகள்/ அரசியல் கைதிகள்
ஒன்றியம், யாழ்ப்பாணம்

(C/3878)


### இலங்கை...

பூர்வமாக கையளித்தார். இந்த நட்புறவுக் கழகத்தினால் ஏற்கனவே பல உபகரணங்கள் விமானப்படைக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது தீயணைப்பு இயந்திர பிரிவுக்கான அன்பளிப்புக்கள் தொடர்பிலும் தீர்மானிக்கப்பட்டுள்ளதென அங்கு தெரிவிக்கப்பட்டதாக விமானப்படை தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பானிய பிரதிநிதிகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இலங்கை விமானப்படையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கலை நிகழ்வொன்றும் நடைபெற்றது.

டாக்டர் லால் திலகரத்ன, இலங்கை - ஜப்பான் நட்புறவுக்கழக தலைவர், மற்றும் பல நலன்விரும்பிகள் என அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### தேர்தல்...

டுள்ளது. யாழ். மாவட்டத்தில் தேர்தல் வன்முறைகள் பாரியளவில் நடைபெறவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதற்கு அமைவாக எதிர்காலத்திலும் இந்த நடைமுறையினை கடைப்பிடிக்க வேண்டும்.

இதேபோன்று தேர்தல் நிறைவு பெறும் வரையும் ஒத்துழைப்பு வழங்குமாறும் யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அரசியல் கட்சிகளிடமும், சுயேட்சைக்குழுக்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (25)

### ஐரோப்பிய...

ளர், மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வட மாகாண காணி ஆணையாளர் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற குறித்த கலந்துரையாடலில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின் நிலைமை குறித்து ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### சமூகவிரோத...

எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது என அறிவித்துள்ளார். நீதிமன்றத்தின் மீதான தாக்குதலானது, நீதி தேவதை மீதான தாக்குதலாகும். போதைவஸ்து குற்றங்களானது, சமூகத்தின் மீது மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதலாகும்.

பாலியல் வல்லுறவு குற்றங்கள் பெண்கள் மீது நடத்தப்படுகின்ற மோசமான தாக்குதல்களாகும். வாள் வெட்டுக்கள், கோஸ்டி மோதல்கள், தெரு ரவுடித்தனம் போன்றவை அப்பாவி இளைஞர்கள் மீதான தாக்குதல்களாகும். கசிப்பு விற்பனை என்பது, மாணவ சமூகம் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து நடத்தப்படுகின்ற சமூக கலாசாரம் மற்றும் பண்பாட்டின் மீது நடத்தப்படுகின்ற தாக்குதல்களாகும்.

இத்தகைய குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, மல்லாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய நீதிமன்றங்களின் உத்தரவுக்கமைவாக நூற்றுக்கணக்கானவர்கள் விளக்கமறியலில் இருந்து வருகின்றனர்.

இந்தக் குற்றங்கள் சமூக விரோதச் செயற்பாடுகள் மட்டுமல்லாமல், சமூகத்தில் கலாசார சீரழிவை ஏற்படுத்துகின்ற பாரதூரமான குற்றங்களாகும். இக்குற்றங்களுக்கு மேல் நீதிமன்றத்தினால், விசேட விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே பிணை வழங்கக்கூடிய நிலைமை உள்ளது.

எனவே, இந்தக் குற்றங்கள் தொடர்பிலான சந்தேக நபர்களின் பிணை மனுக்கள் தேர்தல் காலத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. பிணையும் வழங்கப்படமாட்டாது என்று மீண்டும் வலியுறுத்தியுள்ள நீதிபதி இளஞ்செழியன், பருத்தித்துறையில் கைப்பற்றப்பட்ட 19 கிலோ கஞ்சா தொடர்பிலான சந்தேக நபரின் பிணை விண்ணப்பத்தின் மீதான விசாரணையை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்தி. வைத்தார். (25)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூலை 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.